வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால்நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1995 ஆவணி திங்கள் 29-ம் நாள் (13—9—1964) ஞாயிற்றுக்கிழமை ஐ. அவ்வல் 6 | இதழ் 16




# அரிசி ஆலைகளுக்கு ஆபத்து?

## தமிழ்ப் பகுதிகளிலுள்ளதை சுவீகரிக்க எண்ணம்

### புதிய இருப்புப்பாதை அமைப்பதின் நோக்கம்

தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான அரிசி ஆலைகளுக்கு கோட்டாமூலம் நெல் கொடுப்பதை நிறுத்திவிட உணவு இலாகா ஆலோசித்துவருவதாகத் தெரிகிறது. அனுராதபுரம், பொலன்நறுவை, அம்பாரை, குருநாகலை ஆகிய நான்கு இடங்களில் மட்டுமே சக்திவாய்ந்த ஆலைகளை நிறுவிவிட்டு தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள அரசாங்க அரிசி ஆலைகளையும் மூடிவிடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஊவாமாகாணத்தை ஊடறுத்து அம்பாரைக்குச் செல்லும் புதிய இரும்புப் பாதையும் அமைக்கப்படப் போவதாகவும், நெல் கொள்வனவு முறையில் ஏற்படவிருக்கும் புது மாற்றங்களுக்கு இப் புதிய பாதை பேருதவி புரியும் என்றும் கூறப்படுகிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தனிப்பட்ட முதலாளிகளுக்குச் சொந்தமாகவிருக்கும் அரிசி குத்தும் ஆலைகளை சுவீகரிக்க உணவு அமைச்சு ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது.

நெல்லு, அரிசி கொள் முதல் முறைகளில் புதிதாக இவ்வமைச்சு எடுக்க விருக்கும் நடவடிக்கைகளுக்கு முன்னோடியாகவும், பரீட்சார்த்தமாகவும் வடக்கு கிழக்கு மாகாண ஆலைகள் சுவீகரிக்கப்படுமாம்.

அநுராதபுரம், குருநாகல், பொலநறுவை, அம்பாரை ஆகிய நான்கு இடங்களில் மட்டும் அதிக சக்திவாய்ந்ததும், ஏராளமான அரிசி குத்தக் கூடியதுமான ஆலைகளை நிறுவ உணவு அமைச்சு தீர்மானித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

தமிழ்ப் பிரதேசங்களில் விளையும் நெல்லைக் கொள்வனவு செய்யும் முறையிலும், நடைமுறையில் அனுசரிக்கப்பட்டு வரும் முறைகள் மாற்றியமைக்கப்படுமாம்.

கிழக்கு மாகாணத்தில் விளையும் நெல் அனைத்தும் உணவு அமைச்சின் பிரதிநிதிகள் மூலமாகக் கொள்வனவு செய்யப்பட்டு அம்பாரை, பொலன்னறுவை ஆகிய இரு சிங்களப்பகுதிகளிலும் நிர்மாணிக்கப்படவிருக்கும் அரசாங்க அரிசி ஆலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுமாம். இத்திட்டம் அமுலாகும்போது மட்டக்களப்பிலுள்ள அரசாங்க அரிசி ஆலை மூடப்பட்டுவிடுமாம்.

#### புதிய புகைவண்டி தொடர்

வாழைச்சேனைக்கும் பொலன்னறுவைக்கும் இடையிலிருக்கும் புனானை என்ற புகையிரத நிலையத்திலிருந்து தெற்கு முகமாகத் திருப்பி, ஊவா மாகாணத்தை ஊடுருவி அம்பாரைக்குச் செல்லும் புகையிரதத் தொடர் ஒன்றினை அமைக்க அரசாங்கம் ஏற்கனவே முடிவு செய்து இதற்கான பூர்வாங்க வேலைகளும் முடிந்துவிட்டன. இரும்புப் பாதை அமைப்பு முடிவடைந்ததும் மட்டக்களப்பு நகரத்திலுள்ள புகையிரத நிலையத்தின் அந்தஸ்தும் வெகுவாகக் குறைக்கப்பட்டுவிடும். புனானை மார்க்கமாக கிழக்கு மாகாணத்து நெல் அம்பாரைக்கும் பொலன்னறுவைக்கும் எடுத்துச் செல்லப்படுவதற்கு புதிய புகையிரதப் பாதை பேருதவியாகவிருக்கும் என்றும் நம்பப்படுகிறது.

வடக்கு மாகாணத்தில் விளையும் நெல் அனுராதபுரிக்கு எடுத்துச் செல்லப்படுமாம்.

(9-ம் பக்கம் பார்க்க)

## கிரிதர ஆலைப் பிரச்சினையில் தமிழரசார் நிலை

நிதி அமைச்சரின் கிரிதர ஆலை சம்பந்தமான எதிர்க்கட்சியின் பிரேரணையில் தமிழரசுக் கட்சியினர் கைச் சாத்திடாத போதும், சரியான வழியைக் கடைப்பிடிப்பார்களென்பதில் சந்தேகமில்லையென்று நம்பகமான வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா கிரிதர ஆலையை வாங்க நேரிட்டது குறித்து விசாரணை நடாத்தி அறிக்கை சமர்ப்பிக்கு முகமாக மக்கள் பிரதிநிதிகள் சபையின் பொறுக்குக் குழுவொன்றை நியமிக்குமாறு கோரும் பிரேரணை ஒன்றிற்கு எதிர்க்கட்சியிலுள்ள எழு அரசியல் தலைவர்கள் முன்னறிவித்தல் கொடுத்திருப்பது அறிந்ததே.

இப் பிரேரணையில் கைச் சாத்திடாத எதிர் கட்சிகள் இலங்கைத் தமிழரசுக் கட்சியும், கொம்யூனிஸ்டுக் கட்சியுமாகும். தமிழரசுக் கட்சியினர் கைச் சாத்திடாததினால், பிரேரணைக்கு எதிராக நின்று டாக்டர் பெரேராவை ஆதரிக்கக் கூடும் என்று சிங்கள ஏடுகள் கருத்து வெளியிட்டுள்ளன.

பிரேரணையில் கைச் சாத்திடாவிட்டாலும் தமிழரசுக் கட்சியினர் சரியான வழியைக் கடை பிடிப்பார்களென்பதில் சந்தேகமில்லையென்று நம்பகமான வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

இப் பிரேரணை சபையில் விவாதிக்கப்படும் பொழுது தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் தமது கருத்தை வெளியிடுவார்களென்றும் சரியான வழியைக் கடைப்பிடிப்பார்களென்றும் தெரிகிறது.

## ‘தினகரன்’ செய்தி ஆதாரமற்றது

### தமிழரசுத் தலைவர் விளக்கம்

‘இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேலைத் திட்டத்தை பாதிக்கக் கூடிய முறையில் ஒரு குழுவினரின் தலையீடு கட்சிக்குள் அதிகரித்து வருகிறது’ என்ற கருத்துப்பட இத் திங்கள் 8 ம் நாள் ‘தினகரன்’ பத்திரிகையில் வெளிவந்த செய்தி பற்றி தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களிடம் நமது நிருபர் வினவிய பொழுது அச் செய்தி ‘தவறானது, முற்றிலும் ஆதாரமற்றது, என்று கூறினார்.

அச் செய்தி பற்றி தமிழரசுந் தலைவர் அவர்கள் மேலும் கூறுகையில், ‘அடுத்த தேர்தலில் கட்சியின் வேட்பாளர்கள் பற்றியும் சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. நமது கட்சி வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் சில ஒழுங்கு முறைகளைக் கையாண்டு வருகிறது. செயற் குழுவிலிருந்து வேட்பாளர்களைத் தெரிவு செய்

(9-ம் பக்கம் பார்க்க)

## பொதுத்தேர்தல் மிக விரைவில் வரும்?

பொதுத் தேர்தலொன்று அண்மையில் நடப்பதற்கான அறிகுறிகள் தென்படுவதாக அரசியல் வட்டாரங்களில் பலத்த வதந்தி அடிபடுகிறது. வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கும் அமைச்சர்கள் நாடு திரும்பியதும் அரசியல் அரங்கில் நெருக்கடியான சூழ் நிலை ஒன்று உருவாகலாமென்றும் அதை தொடர்ந்து நிலைமையைச் சமாளிக்க முடியாது பிரதமர் பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி தேசாதிபதிக்கு ஆலோசனை கூறலாம் என்றும் அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

நிதி அமைச்சர்மீது எதிர்க்கட்சிகள் சுமத்தியிருக்கும் குற்றச்சாட்டு பெரும் அரசியல் பூகம்பத்தை உருவாக்குமென்றும், அதே பொழுதில் அரசாங்கத்தில் உயர் பதவி வகிக்கும் ஒரு பௌத்த ஊழியருக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகள் மறுபுறத்தில் பெரும் பிரச்சினையை அமைச்சரவைக்குள் உருவாக்கலாம் என்றும் தெரிகிறது.

அந்த அரசாங்க அதிகாரி மீது ஒரு அமைச்சர் குற்றம் சாட்ட அதே நேரத்தில் ‘சாத்தான்’ என்று பட்டம் பெற்ற மற்றுமொரு அமைச்சர் அவருக்கு மறைமுகமாக ஆதரவு கொடுத்து வருகிறாராம். மறைமுகமாக ஆதரவு கொடுத்துவரும் இவர் முன்னர் வைத்திய ஆலோசகர்களினதும் வேலை நிறுத்தத்திலும் இதே வழியைக் கடைப்பிடித்து மூக்குடைபட்டவராம்.

கிரிதர ஆலை சம்பந்தமான பிரச்சினையை உருவாக்கியவரும் இவர் என்று அரசியல் வட்டாரங்களில் செய்தி அடிபடுகிறதாம். இப் பிரச்னையில் எதிர்கட்சி முக்கியஸ்தர் ஒருவரின் உதவியை முதலில் இவர் நாடியதாகவும், அது முடியாது போகவே வேறு சில எதிர் கட்சியினரைத் துணைக்கு இழுத்தார் என்றும் கூறப்படுகிறது. சிறுபான்மையினர் பிரச்னைக்கு முக்கிய காரணகர்த்தா இவர் என்றும் பேசப்படுகிறது.

கூட்டரசாங்க அமைச்சரவையில் தினே தினே கருத்து வேறுபாடு வலுப்பெற்று வருவதாகவும், ஒரு அமைச்சர் முன் வைக்கும் திட்டத்திற்கு மற்றுமொரு அமைச்சர் மாற்று நடவடிக்கை எடுப்பதாகவும் அறியப்படுகிறது.

நிலைமையை உன்னிப்பாக கவனித்து வரும் அரசியல் அவதானிகள் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத நிலை பிரதமருக்குத் தோன்றுவதாகவும், அதனால் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு செல்வதை அவர் விரும்பக்கூடும் என்றும் அபிப்பிராயப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சியின் அறுவடையே என்னை எழுத்தாளனுக்கியது

எஸ். எல். சவுந்தரநாயகம் நல்ல கவிஞர், சிறந்த சிறுகதை எழுத்தாளர். வன்னிநாட்டை சேர்ந்த இலுப்பைக் குளத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நல்ல சமூகத்தொண்டன், இனவுணர்வு மிக்கவர். சுதேச வைத்தியராகக் கடமையாற்றும் இவர் கிராமசபை உறுப்பினராகவும் உள்ளார். வானெலிக் கவியரங்கங்களிலும் பங்குகொண்டவர். கவிதை உலகில் தனியிடம் பெற்றுள்ளார்.



எழுத்தாளனுக இலங்க வேண்டுமென்கிற எண்ணம் இளமையிலேயே ஏனே என் நெஞ்சத்தில் எழுந்துவிட்டது.

அது ஏன் பிறந்ததென்பதற்குத் திட்டவட்டமான காரணமெதுவும் சொல்வதற்கில்லை.

அமரவாழ்வுபெற்ற என் மதிப்புக்குரிய தந்தை சந்தியோகுப்பிள்ளைப் புலவர் அவர்களும், அவரின்முந்தையோரிற் சிலர்—ஏழு தலைமுறை வரையில்—மன்னர் வவுனியா மாவட்டங்களிலே பிரபல்யம் வாய்ந்த கவிஞர் பரம்பரையாய்த் திகழ்ந்தமையினுல், குலவித்தை கல்லாமல் வரும் என்கிற நாடோடிப் பழமொழிக்கேற்ப, என்எழுத்தாசையும் சிலபோது பரம்பரை இயல்பூக்கமாக உதித்திருக்கலாமோ—என்னவோ?

## வளர்ந்த சூழல்

ஆனுல், இளமையில் எழுத்தாற்றலை வளர்க்கக்கூடியவொரு சூழ்நிலையில் வாழும்போது எனக்கு வாய்க்கவில்லை. நல்ல இலக்கியப் பத்திரிகைகளைக்கூட ஒழுங்காகப் படிக்கும் வசதி எனக்கிருக்கவில்லை.

தந்தையின் பேரிழப்பினுல் வறுமையின் கோரப்பிடியில் வகையாகச் சிக்கிக்கொண்டவெனக்கு, பல்கலைக் கழகங்களின் படிகளை மிதிக்கும் பாக்கியந்தானும் கிட்டவில்லை.

உயர்தரக் கல்வி பயில முடியாமல் பட்டணவாசஞ் செய்யாமல் சிரேஷ்ட தராதர வகுப்புடனேயே குக்கிராமத்திலே முடங்கி வாழும் நிலைக்கு காலதேவனுல் தூக்கியெறியப்பட்ட நான், எழுத்தாளனுவது இலேசான காரியமா?

அன்றியும், என்னையொரு எழுத்தாளனுக உருவாக்குவதற்கு எனது சொந்தப் பெயரை தமது புனைபெயராக்கிக்கொண்டு உதவி செய்யக்கூடிய கருணையுள்ளம் படைத்த பிரபல எழுத்தாளர்களோ, அல்லது எனது படைப்புகளை அவ்வப்பொழுது 'டச்' பண்ணிப் பத்திரிகைகட்கனுப்பி வைத்து பிரசுரமாக்குந் தனித்திறமைவாய்ந்த பரந்த மனப்பான்மையுள்ள பேனுச் சக்கரவர்த்திகளோ, அல்லது படைப்பைப் பாராமல் ஆளைப்பார்க்கும் பத்திரிகாசிரியர்களோ, அல்லது சாதாரண இலக்கிய ரசிகர்களோ யாருமே எனக்கு நண்பர்களாகக்கிட்டவில்லை.

அப்படியிருந்தும்எண்ணத்தைச் செயலாக்க இயன்றளவும் முயற்சி பண்ணிக்கொண்டுதான் வந்தேன்... ...இரண்டு மூன்று முறை மனதிற் தோன்றுபவைகளை எழுத்துருவில் வடித்து, பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்துப் பார்த்தேன். எதுவுமே பிரசுரமாகவில்லை. அதனுல் மனந்தளர்ந்தேனு? இல்லை.

'எனது எண்ணம் நிச்சயமாக நிறைவேறத்தான் போகிறது; என்றைக்காவது நானொரு பிரபல எழுத்தாளனுகத்தான் போகிறேன்' என்கிற தன்னம்பிக்கை மட்டும் வளர்பிறையாக வளர்ந்துகொண்டே போனது.

எனதெண்ணம் வளர மானசிகமாக உதவிபுரிந்த ஒரேயொருசிறிய ஒளிக்கீற்று எனது சொந்த மாதுலர்

~~~~~~~~~~~~~~~~~~~~

எஸ். எல். சவுந்தரநாயகம்

~~~~~~~~~~~~~~~~~~~~

திரு. ம. புவானி அவர்கள்தான் (எனது வாழ்க்கைத் துணைவியாரின் தந்தை) என்முல் மிகையாகாது.

அவரொரு சிறந்த இலக்கிய ரசிகர். என் தந்தையின் பிரதம சிஷ்யனுக இருந்தபடியாற்தான் அவரோர் சிறந்த கலாரசிகராக உருவாகியிருக்கவேண்டும். பத்திரிகையென்ருல் அவருக்கு ஒரே பித்து. அந்த நாளில் எங்கள் கிராமத்திலே ஒழுங்காகப் பத்திரிகை வாசிக்கும் ஒரேயொரு நபரும் அவர்தான்.

அவரின் பத்திரிகைப் பரிச்சயம் எனது எழுத்தார்வத்துக்கு தூபமிட்டவண்ணமேயிருந்தது. அஃதவ்வாருக—

## பஞ்சமும் கடிதமும்

1952-ம் ஆண்டுவவுனியா மாவட்டத்திலே மாரி பொய்த்து விட்டது.

விசும்பினின்று துளிவீழாத காரணத்தினுலே நெற்களஞ்சியமெனப் போற்றிப் புகழப்படும் வளமிகும் வன்னிப் பிரதேசத்திலே பசும் புற்றலை காண்பது அரிதென்ற வரண்ட நிலை வந்து சிந்தித்தது.

உரியகாலத்தில் மழை பொழியாவிட்டால் எப்படி நெற்பயிர் செய்கை பண்ண முடியும்? நெற்செய்கையில்லாவிடின் வாழ்வு?

வன்னிப் பிராந்தியத்தின் கண்ணுள்ள பெரும்பாலான குளங்கள் சின்னஞ் சிறிய பொட்டல் குளங்களே. மாரி மழை ஒழுங்காகப் பெய்து ஒரு குளத்திலே ஒருமுறை நிறையுந் தண்ணீர், ஒரு போக வேளாண்மைக்குப் பாய்ச்சக் காணுது. மாரிக்குப்பின்பும் இடையிலே மீண்டும் மழை பெய்தாற்தான் முழுவிளைச்சலைப்பெற முடியும். மாரிமழை சொரியுங் காலத்திலேயே அப்படியானுல், சொரியாத காலத்தைச் சொல்லவேண்டுமா?

ஒரு தடவை வானம் கஞ்சத்தனம் பண்ணி நெற்பயிர் செய்கை பண்ணுது விட்டால், எமது பிரதேசத்தில் வாழும் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து விகிதத்தினர் உணவு, உடை, ஏனையசெலவுகளுக்குத் திண்டாடவேண்டிய பொருளாதார நிலையுடையவர்களாய்த்தான் அன்று இருந்தார்கள்.

ஏன்—இன்றுங்கூட அந்த நிலைமை அவ்வளவு சீரடைந்துவிட்டதென்று சொல்லமுடியாது. வன்னியூரிலே நீர்ப்பாசன வசதி குடியேற்றத் திட்டங்கள் தவிர்ந்த தனிப்பட்ட கிராமங்களில்—முன்னேறிவிட்டதென்றுங் கூறிவிட முடியாது.

அத்தகைய மழையற்ற பஞ்சகாலத்திலே அரசாங்கந்தான் 'சகாயவேலை' என்ெருரு வேலைத்திட்டத்தின் கீழ் கிராமத்துத் தெருக்கள், குளங்களில் சொற்பவேலையை வாங்கிக்கொண்டு சொற்ப சம்பளத்தைக் கொடுத்து மக்களைக் காப்பாற்றுவது வழக்கம்.

அரசாங்கம்செய்யும் அந்த உதவியினுற் கிடைக்கும் சிறிய வருமானத்தைக் கொண்டு, கூப்பன் அரிசியையெடுத்து கால்வயிறு அரைவயிறென்று கும்பியை நிரப்பியும் ஓரிரண்டு சாதாரணத் துணிமணிகளைக் கொண்டு மானத்தை மறைத்துந்தான் ஏழை விவசாயிகள் வாழ்க்கைத்தேரை நகர்த்திவருவர். வேறு கெதி யெதுவுங் கிடையாது.

1914, 1928, 1934ம் ஆண்டுகளில் வன்னிநாட்டிலே அத்தகைய பஞ்சம் ஏற்பட்டதாகமுதியோர்கள் ஞாபகமூட்டுவர்.

1952ம் ஆண்டிலும் அத்தகைய பஞ்சம் உண்டாகியதால் ஆண்டுக் கடைசியிலிருந்து வன்னிப் பகுதியெங்கணும் சகாய வேலை நடைபெற்றுவந்தது.

எம்மூரவர்களும் கிராமத்தெருவொன்றைத்தான் சகாயவேலையிற் துப்புரவு செய்தார்கள். நானுந்தான்!

எனது மாமனுர் கமவிதானையாராக இருந்தபடியால், அவரே குறித்த வேலைக்குக் கங்காணியாரா[illegible] அவர் மட்டுமல்ல ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள [illegible]மார்தான் கங்காணிமாராகக் கடமைபுரிய நியமிக்கப்பட்டனர். அதுசகாயவேலையின் மரபுபோலும்!

வேலை மாதக் கணக்காக நீடித்தது. 1953ம் ஆண்டு யூலை மாசத்திலே ஒருநாள், எமது சகாய வேலைத் தலத்திலே—

அன்றைய ஆட்சியாளர் கூப்பன் அரிசிக்கு விலையைக் கூட்டிய செய்தியை மாமனுர் பத்திரிகையிற்படித்துக் காட்டி மனவருத்தப்பட்டார். வேறு சிலரும் வருந்தினுர்கள். பலர் கருத்துப் பரிவர்த்தனை பண்ணிக்கொண்டார்கள். எல்லோரும் அரிசிவிலை உயர்வை ஆட்சேபித்தனர்.

'அரிசி விலையேற்றத்தை இப்படி நம்வரையில் வாய்ப்

(10-ம் பக்கம் பார்க்க)

---

## கவிதைப் பூங்கா

# வாழ்ந்து போ

"திமிலைத்துமிலன்"

அன்பான அத்தான்! அடியாளைச் சிந்தையிலே
முன்போல் நினைக்க முடியவில்லை உங்களுக்கு.
உங்களுக்கு வேலை; ஊர்விட்டு ஊர்போதல்.
எங்களுளத்தே முளைத்த இளம்பயிரும்
மண்ணிற் கருகி மறையுமென்று நேற்றுவரை
புண்ணுகித் தீயிற் புழுவாய்த் துடிதுடித்தேன்.
கண்பெற்று விட்டேன; கண்டேன் மடல் இந்தப்
பெண்பெற்ற பேறே பெரிதத்தான். ஆனுலும்
இத்தனைநாள் உங்கள் எண்ணத்தில் என்னையொரு
துரும்பாய் நினைக்கத் தோன்றவில்லை. இன்றேனும்
வந்ததே என்று வாழ்த்துகிறேன். தெய்வத்தை
நொந்து இறைஞ்சி நூறுபல நாட்கிடந்து
பெற்ற தவத்தாற் பெரும்பேருய் வந்தவிழி
உற்ற தினத்தே ஊனமாய்ப் போனதுபோல்
வாடுகிறேன் அத்தான் மடலைப் பிரித்ததனுல்.
பீடுநடை போடப் பிறந்த மறக்குலத்து
ஆண்களா நீங்கள்? ஐயோ அவமானம்!
"சாண்பிள்ளை யேனும் ஆண்பிள்ளை" என்றமொழி
அர்த்தமற்ற தாக ஆக்கிவிட்ட தேனத்தான்?
நர்த்தன மாடி நஞ்சை உளத்திருத்தி
இன்னெருத்தி வந்து எதிரில்நின்று புன்னகைத்தால்
பின்செல்லல் உங்கள் பெருங்குலத்துப் பண்பாமோ?
அன்னையை விற்று அயலவளைத் தாயென்ன
என்ன மனமத்தான்! ஏனத்தான், வீதியிலே
பிச்சை எடுத்துப் பிழைக்கலாம். இன்னெருத்தி
பச்சை அழகில், பகட்டில், பதவிகளில்
ஒட்டி,யிருக்க ஒருசாண். வயிற்றுக்காய்ப்
பெற்றவளை விற்றல் பெரும்பாவம்! நாய்கூடச்
சீ'என்ற தற்காய்ச் சிலையற்று வாழ்கிறதாம்.
பேய்கூடத் தன்னைப் பெற்றவளைப் பேணிடுமாம்
தமிழனுக்கேன் சொந்தத் தன்மானம் நீங்கிற்று?
அமிழ்தில் இனியமொழி; ஆன்றேர்கள் தந்தமொழி
தமிழே தமிழென்று சாம்போதும் சொல்லியழத்
தமிழன்றி எந்தத் தாயுனக்குக் கைதருவாள்?
அவளை மிதித்து, ஆங்காரக் கோஷமிடும்
எவளோ ஒருத்தி இன்றுனக்குத் தேனுமோ?
கேளத்தான்; அன்று கிணற்றோர நாவலின்கீழ்
"சோளப் பொரியடிநீ சூடிவரும் புன்முறுவல்"
என்றபடி என்னை இழுத்தணைத்த போதினிலே
ஒன்றினேன்,நின்றேன், உவகையுற்றேன் ஏனென்றல்
குன்றனைய தோளும் குலத்தமிழே மூச்செனும்
திண்டிறலும் கொண்ட செயல்வீர னென்றதனுல்.
"வேலை,பறிபோய் விட்டாலும் போகட்டும்
வால்பிடிக்க மாட்டேன் மாற்றுமொழித்
தேர்வெழுதேன்"
என்றுரைத்த வீரம் எங்கோடிப் போயிற்றே?
'அன்றுரைத்த வார்த்தை அயலார்குத் தானேடி!
நமக்கில்லை' என்ற நவமேடைப் பேச்சாமோ?
இமைக்குள்ளே வைத்து ஈன்றெம்மைக் காத்தவளைக்
கட்டையிலே வைத்துக் கழுத்தறுத்தல் நன்றுமோ?
சிற்றெறும்பும் தன்னைத் தீய்க்கவரும்வெய்பகையைச்
சார்ந்திடா தத்தான். தனித்தெதிர்த்துத்தான்மடியும்.
அன்றந்த நாவ லடியில் விழுந்தகனி
ஒன்றை எடுத்து உயர்த்தி "உனதுவிழி
போன்ற கறுப்புப் புளிக்கும்" எனக்கையைத்
தீண்டி யிழுத்த செய்கை நினைவுளதா?
நேற்றுத்தான பார்த்தேன் அந்த நெடுநாவல்
காய்த்துப் பழுத்துக் கனத்தோடு நிற்கிறது
கொழுத்த கனிக்குலையைக் கூடாக்கி வாழுகிற
'முசிறு'கள் கையை மொய்த்துக் கடித்தகடி!
போதுமென்று சொல்லிப் போட்டுவிட்டே ஓடிவந்தேன்
பாருங்க ளத்தான். பார்க்கச் சிறுஉயிர்தான்
தன்வீட்டைக் காக்கச் சாவினையே ஏற்கிறது!
தன்குலம் வாழச் சந்ததிகள் கீர்த்திபெற,
வாழாத வாழ்வும் வாழ்வா? அடிவருடும்
கீழான வாழ்விற் கிடைக்கும் பெரும்போகம்
ஏழாம் நரகம்! இனிப்போதும் நின்னன்பு.
வீழாத கற்புடைமை; வீரம்;தன் மானவிறல்;
பாரதி கண்ட பகுத்தறிவு யாவுமுள
தீரக் குலத்தாள் செத்தாள். இனிக்கடிதம்
போடாதே நீவாழ்ந்து போ.

---

## 'சுதந்திரன்'
## புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப் பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒரு வருடம் | ரூபா 14-00 |
| ஆறு மாதம் | ரூபா 7-50 |

நிர்வாகி
'சுதந்திரன்'

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




**அக்கரைமீறன், அக்கரைப்பற்று**

கே: குயுக்திமாமாவே! மனிதனுடைய சந்தேகங்களைத் தீர்ப்பதற்கு சில வழிகள் கூறுங்கள்?

ப: மனிதனே சந்தேகப் பிராணி. அவன் சதா சந்தேகத்தை வளர்த்துக் கொண்டுதான் இருப்பான். சந்தேகத்தை நீக்குவதற்காக எடுக்கும் நடவடிக்கைகளும் சில சமயங்களில் சந்தேகத்தையே வளர்த்து விடுகின்றன. நேர்மையுடன் நடப்பது சந்தேகத்தை நீக்க ஓரளவு பயன்படும்.

ஃ

எம். ஏ. முஹம்மட் பஹ்மி, கம்பளை.

கே: இன்று கல்லூரிசெல்லும் கன்னியர் சிலர் தங்கள் புத்தகத்துக்குள் "பவுடர்" கொட்டிக் கொண்டு போய், கல்லூரியில் படிக்கும்போதெல்லாம் முகத்தில் பூசிக்கொள்கிறார்களே, இதை ஆசிரியர்கள் தடை செய்யக் கூடாதா? இது ஒரு கெட்ட பழக்கம்தானே?

ப: நிச்சயமாக இல்லை. ஆனால் வகுப்பு அறையினுள் முகத்தில் மாவை அப்பிக் கொள்வது தவறுதான். இளங்குமரிகள் முகத்தின் எண்ணெய்பசையை அகற்ற 'மாவை'ப் பூசிக்கொள்வதால் முகத்தின் கவர்ச்சி கூடும். அதனை எதிர்ப்பது தவறு.

ஃ

'குமாரச் செல்வன்', ஏழாலை மேற்கு

கே: காட்டிக் கொடுத்து, மக்களால் நிராகரிக்கப்பட்டவரும்; அரை, கால் பதவிக்காகச் சிறிமாவின் சேலைத் தலைப்பை பிடித்து ஏமாந்தவரும்; மக்களுக்கும், தமிழரசுக் கட்சிக்கும் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாத அரிச்சந்திரனும் சேர்ந்து புதிய கட்சி உருவாக்கியிருக்கிறார்களாம்!

ப: அந்த உருப்படாத கட்சி பிரசவ அறையிலே இறந்துவிட்டதாம்.

ஃ

சி. மெய்யானந்தன், மயிலிட்டி

கே: திருமலை மாநாட்டில் அசம்பாவிதங்கள் நடந்ததாக தமிழருக்கு விரோதமாக என்றும் பொய்ப்பிரசாரம் செய்யும் சில பத்திரிகைகள் வசை பாடியுள்ளன. அதற்குத் திரு. அமிர்தலிங்கமும் தந்தை செல்வாவும் மறுப்புத் தெரிவித்தும் மீண்டும் மீண்டும் பொய்யையே அப்பத்திரிகைகள் எழுதி வருகின்றன. எனவே தற்போதைய சூழ்நிலையில்சுதந்திரனை தினப்பத்திரிகை ஆக்கினால் என்ன?

ப: நல்லவேளை! அந்தப்பத்திரிகைகளையெல்லாம் தேசியமயமாக்க வேண்டுமென்று கூறாமல் விட்டீர்களே! பத்திரிகைமசோதா என்ற பெயரில் தினசரிகளுக்கு மரண ஓலை வாசிக்கப்படும்போது சுதந்திரனை எப்படித் தினசரியாக்க முடியும்?

கே: புத்தர், யேசு, நபிகள், விவேகானந்தர், காந்தி மகான்களின் உபதேசங்களின் பின்பும் உலக மக்கள் வரவர கீழ்த்தரமான எண்ணங்களிலும் செய்கையிலும் மனத்தைச் செலவழிக்கின்றார்களே! உலகம் உய்வதற்கு இனிமேல் ஒருவித வழியுமில்லையா?

ப: உலகாயதவாதம்வளர வளர மகான்களையும் அவர்களது நல்லுபதேசங்களையும் மறந்துவிடுகின்றனர். அதற்குப்பதிலாக மார்க்ஸ் லெனின் புத்தகங்களை மனப்பாடம் செய்வதாலேயே அவர்களின் காலம் கழிகின்றது. உலகாயவாதம் ஒழிந்தாலன்றி உலகம் உய்யதற்கு வேறு வழி கிடையாது.

ஃ

இ. லோகநாயகி, சங்குவேலி.

கே: ஓய் குயுக்தியாரே ஒங்களுக்கு சிங்களம் தெரியுமா?

ப: உங்களுக்குத் தமிழ் தெரியுமா?

ஆர். அமுது, நெடுந்தீவு

கே: இந்தியாவில் நடந்த சட்ட எரிப்பிற்கும் இங்கு நடந்த சட்ட எரிப்பிற்குமுள்ள வித்தியாசம் என்ன? இந்திய அரசு அவர்களைச் சிறையில் தள்ளியதற்கும்,சிறிமா அரசு இவர்களைச் சும்மா விட்டதற்கும் காரணம் என்ன?

ப: இந்தியாவில் எரித்தது. இந்திய அரசியற் சட்டத்தை. இலங்கையில் எரித்தது சிங்களம் மட்டும் சட்டத்தை. அது சட்டப்படி சட்ட விரோதம். இது அப்படியன்று.

ஃ

எஸ். அப்துல்லா, யு. எம். செய்யது, கிண்ணியா-7.

கே: ஒரு எம். பி. அடிக்கடி பெண் பாடசாலைக்கு விஜயம் செய்யும் மர்மம் என்ன?

ப: அவர் பெண் "கல்வி"யில் அக்கறைகொண்டவராம். கல்வி என்ற சொல்லில் நடு எழுத்து மெய் எழுத்தேயன்றி உயிர் மெய் எழுத்தன்று.

ஃ

வே. சண்முகநாதன், திருமலை

கே: சிங்கள ஆசிரியர்களைத் தமிழ் பெற்றோர்கள் வரவேற்கிறார்கள் என்று கலுகல்லே பேசி இருக்கிறாரே, இது உண்மையா?

ப: இல்லை. பாடசாலைகள் மூலம் தான் நடத்தவிருக்கும் சிங்களத் திணிப்பை நியாயப்படுத்த இக் காரணம் கூறுகிறார். தமிழ் பேசும் பெற்றோர்களின் கருத்து பற்றி தமிழ் பேசும் எம். பிக்களைவிட ஒரு சிங்கள மந்திரிக்கு என்ன தெரிய முடியும்?

ஃ

கு. தியாகமணி, மாவநெல்ல

கே: ஈழத்திற் சர்வாதிகார ஆட்சி ஏற்பட்டால் தமிழ் பேசும் மக்களின் நிலை என்ன ஆகும்?

ப: இட்லர் ஆட்சியில் யூத இனத்துக்கு ஏற்பட்ட கதி தமிழ் பேசும் மக்களுக்கும் ஏற்படும்.

கே: இலங்கைப் பாராளுமன்றத்தில் இன்று நடக்கும் கோஷ்டிச் சண்டைகளை வெளிநாட்டினர் எப்படி நினைப்பார்கள்?

ப: அரசாங்கத்துள் உள்ளது பாராளுமன்றத்தில் பிரதிபலிக்கிறது என்று நினைப்பார்கள்.

ஃ

இளங்கிரணன், கல்முனை

கே: தமிழரசுக் கட்சி அடுத்த தேர்தலில் பெறப் போகும் வெற்றிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் ஈடுகொடுக்க முடியுமா?

ப: வட, கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக் கட்சி போட்டியிடும் எந்தத் தொகுதியிலும் சுதந்திரக் கட்சி போட்டியிட்டு வெற்றி பெற முடியாது.

ஃ

வி. எஸ். எம். நாதன், உலப்பனை

கே: தி. மு. கட்சி இலங்கையில் அரசியல் கட்சியாக வருமா?

ப: இலங்கை தி. மு. க. என்ற பெயரில் ஓர் ஸ்தாபனம் பற்றி சில சமயங்களில் பத்திரிகைகளில் செய்தி வருகிறது. அது ஓர் கட்சியன்று. இனி எப்படியோ?

ஃ

"குமாரச் செல்வன்" ஏழாலை மேற்கு

கே: இதுவரைகாலமும் தலைக் கறுப்பையே காணாத ஒரு பிரமுகர் ஒரு புதிய தமிழர் கட்சியின் தலைவராம். தமிழ் மக்களின் போராட்டங்களின் போது இவர் எந்தெந்த மூலைகளில் முடங்கிக் கிடந்தார் என்று அறியத் தருவீர்களா?

ப: ஓர் நிழலுடன் "யுத்தம்" செய்கிறார். அம்மாதிரியான ஒரு கட்சி சிலரின் கற்பனையில்தான் இருக்கிறது.

ஃ

க. சிவஸ்கந்தா, நாகேந்திரமடம்

கே: சத்தியப் பாதையை நாம் ஒவ்வொருவரும் கடைப்பிடித்தால், என்னவாகும்?

ப: நியாயமும், நீதியும், வெற்றி பெறும்-பொய்மையும், சதியும், அநீதியும் கொடுமையும் மடியும்.

ஃ

க. மகேந்திரன், காங்கேசன்துறை

கே: மூன்றுவது முறையும் சிங்களவரைத் திருப்பியனுப்பிய காங்கேசன்துறைப் பட்டின சபைத் தலைவர் திடவீரசிங்கத்தைப்பற்றி என்ன கூறுகின்றீர்?

ப: இதுவரை யாரும் இச் சாதனையைச் செய்யவில்லை. திடமுள்ள வீரமிக்க சிங்கம் தான் அவர்.

ஃ

பொ. கணேசன், கல்முனை.

கே: குயுக்தியாரே! எனது நண்பர், 'குயுக்தியார்' என்னும் பெயர், ஒரு பெண்ணின் பெயர் என்று கூறுகிறார். இது உண்மையா? பொய்யா?

ப: நான் ஓர் ஆண்.

ஃ

அ. செ. நாயகம், யாழ்ப்பாணம்

கே: "கேட்டுப்பாருங்கள்" என்னும் பகுதியின் பெருமிடத்தைச் சினிமா, காதல் வினு விடைகளே நிரப்புகின்றன. இன்றைய சூழ்நிலையில் அரசியல், தமிழ் இலக்கியம் போன்ற வினுக்களுக்கு இனிமேலாகுதல் பெருமளவு இடங்கொடுப்பீர்களென நம்புகிறேன்.

ப: நீர் ஒருபொய் சொல்லிவிட்டீர். நான் சினிமாக் கேள்விகளுக்குப் பதிலளிப்பதில்லை.

ஃ

லூட்டி, அவுஸ் கோன், ஏருவூர்

கே: தாங்கள் அரசியலில் தலையிடாததற்குக் காரணம் என்ன?

ப: எனது பேச்சும் மூச்சும் எழுத்தும் வாழ்வும் அத்தனையும் அரசியல்தானே. மறைமுகமாகவோ நேர்முகமாகவோ அரசியலில் தலையிடாத ஒருவர் கூட இன்று சிறுபான்மை இனத்தில் கிடையாது.

ஃ

மு. கந்தையா, வடலியடைப்பு

கே: இலங்கையில் ஒரு பெண் பிரதமர் இருந்தும் வட மாகாணத்தில் இராணுவத்தினர் புரியும் அட்டூழியங்களுக்கு அளவே இல்லை. பெண்கள் பெரிதும் இம்சிக்கப்படுகிறார்கள். இது பாராளுமன்றம் வரை எட்டியும் பிரதமர் செவிசாய்க்காமல் இருப்பதன் "அர்த்தம்" என்ன?

ப: கிழக்கு மாகாணத்துக்கும் அந்த அட்டூழியங்களைக் கொண்டுவர இப்பொழுது நடக்கும் சர்வாதிகார முயற்சிதான் "அர்த்தம்".

ஃ

ஆர். கண்ணன், கொம்பனித்தெரு

கே: பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் உடல் இப்போது நலமா?

ப: அவர் உடல் தேறிவிட்டது. இந்திய மக்களின் உடல்தான் வாடிவிட்டது. காரணம் உணவுப் பஞ்சம்.

கே: இந்தி எதிர்ப்புப் போராட்டம் வெற்றி பெறுமா?

ப: இது ஒரு நீண்டகாலப் போராட்டம். இன்னும் எத்தனை ஆண்டுகளானாலுஞ் சரி, விட்டுக்கொடுக்காமல் போர்ராட்டம் தொடர்ந்து நடைபெறுமாயின், இறுதியில் வெற்றி திண்ணம்.

ஃ

பரமேஸ்வரி, இரணை இலுப்பைக்குளம்,

கே: பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசிக்குத் தமிழில் எழுதும் கடிதங்களுக்குப் பதில், சில வேளைகளில் மிக மிகச் சுணங்குகிறதே, விரைவில் பதில்பெற என்ன செய்ய வேண்டும்?

ப: அந்தக் காரியதரிசி பௌத்த சிங்களத் தூணும். அவருக்குத் தமிழில் எழுதும் கடிதங்களுக்குச் சுணங்கியாவது பதில் கிடைப்பது உங்களின் அதிர்ஷ்டம். பதிலே கிடைக்காமலிருந்தாலும் ஆச்சரியப்பட வேண்டாம்.

ஃ

தியாகராஜா, நுவரெலியா

கே: இதுவரையும் தங்களிடம் கேட்காத கேள்வி என்ன?

நீங்கள் கேட்டுள்ள இக் கேள்விதான்.

# குரோதியே; செங்கோலோச்சாய்!

—இராஜபாரதி—

உடுதுணிப் பஞ்சம் மாறி ஊரெலாம் வாழும் மாதர்
இடைதொடை மறைந்து, பெண்மை இலங்கையிற் துலங்கி வாழக்
கடையினிற் பதுக்கல், கன்னிக் கடத்தல்கள், ஒழியச் சாந்திக்
குடையினைக் கையில் ஏந்திக் "குரோதியே;" செங்கோ லோச்சாய்!

கடற்கரை காவல் காக்கும் கடமைசெய் பட்டா ளத்தார்
இடக்கருள் 'இடக்கர்' செய்யும் இம்சைகள் ஈழ நாட்டின்
வடக்கொடு கிழக்கர் கண்ட வருடத்தை ஒழித்தாய்; மக்கள்
அடக்கமாய் 'வரிகள்' கட்டும் அமைதியைத் தாங்கி ஆளாய்;

பஸ்சினிற் பயணஞ் செய்தோர் பாதியிற் தவித்தே ஏங்கச்
செய்த அப் பழைய ஆண்டின் சிவனைக் குடித்தாய்; பெண்கள்
கையினிற் கழுத்திற் பூண்டுங் கள்வரைக் காணோம் என்று
பையினிற் பணத்தோ டெங்கள் பட்டினத் துலவச் செய்வாய்;

கோவணப் பவனி கொண்டோர், ஆவணத் தெருவைச் சேரக்
காவலிற் 'சூரர்' கண்ணீர் கக்கிடும் புகையைப் பீய்ச்சச்
சாவரை உணவு கொள்ளாச் சத்திய விரதம் காக்கும்
கேவலம் எல்லாம் நீக்கிக் கீர்த்தியைத் தாங்கி ஆளாய்;

மொழிதரு தொல்லை யாலே முழங்குவோர் ஓதை; மன்றில்
வெளிநடப் பிடுவோர் ஓதை; விளங்கிடா ஓலை கண்டே
இழுபறிப் படுவோர் ஓதை; ஏற்றங்கொள் பதவி விட்டுக்
கழிபவர் ஓதை; யாவுங் கழியுநல் ஆட்சி செய்வாய்!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் குறித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

விரைவில் எதிர்பாருங்கள்

நிலத்தில் 3,000 மைல்களும், நீரில் 2,000 மைல்களும், வானத்தில் 10,000 மைல்களும் பயணம் செய்து

மலேயா, பர்மா, சிங்கப்பூர், தாய்லாந்து, பீசித் தீவுகள், இந்தியா

உட்பட தமிழ் கூறும் நல்லுலகம் அனைத்தும் சென்று, அந் நாடுகளில் வாழும் தமிழர் நிலையினை நேரில் கண்டு சேகரித்த விபரங்களை விளக்கும் பிரயாணக் கட்டுரை

"தமிழ் தந்த பயணம்"

உலகத் தமிழ் மன்றத் தலைவர்
பேராசிரியர்
கா. பொ. இரத்தினம்
எழுதுகிறார்.

உங்கள் கவலை என்ன?

எந்த விதமான மனக்கவலைகளோ, வாழ்க்கையில் நிறைவேற வேண்டிய காரியங்களோ இருப்பின் அவைகளை விபரமாக எழுதி அனுப்புங்கள். தெய்வ பலத்தினாலும் மந்திர சக்தியினாலும் தகுந்த நிவாரணம் செய்து கொடுக்கப்படும். இரகசியங்கள் வெளியிடப் படமாட்டாது.

கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்
பி. எம். திசாநாயக்க,
நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா
அருத எண்ணெய் காரியாலயம்
கம்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியின் கனவை நனவாக்க ஒன்று படுங்கள்

ஞா. பெ. அல்பிறெட்

'கள்ளத்தனமாக நாட்டிற்புகுந்து கள்ளத்தனமாக எங்கள் சுதந்திரத்தைச் சூறையாடிய வெள்ளைக் காறனே வெளியேறு! வெளியேறு!! எங்கள் நாட்டைவிட்டு' என்ற தாரக மந்திரம் பாரத நாடெங்கிலும் ஒலித்துக் கொண்டிருந்த வேளையிலே, பாரதியாரின் வீரப் பரணிகள் விடுதலை விரும்பிகளுக்குப் புத்துணர்வையும் புதுத்தென்பையும் ஊட்டிக் கொண்டிருந்தன. சொந்த நாட்டிலே வந்தவனுக் கடிமை செய்து அஞ்சியஞ்சி செத்துக்கொண்டிருந்த முப்பதுகோடி பாரதமக்களையும் நினைத்து நெஞ்சங் கொதித்தார் பாரதியார். 'இம்' என்றால் சிறைவாசம் 'ஏன்' என்றால் வனவாசம் என்றிருந்த கஷ்டமான காலம் அது. அதற்காக அஞ்சவில்லைப் பாரதியார். 'ஆண்பிள்ளைகள் அல்லமோ உயிர் வெல்லமோ?' என்று உயிரைப் பணயம் வைத்து உரிமைக் குரலைக் கிளப்பிவிட்டார் பாரதியார்.

'நாங்கள் முப்பது கோடி
சனங்களும்
நாய்களோ—பன்றிச்—
சேய்களோ
நீங்கள் மட்டும் மனிதர்களோ
—இது
நீதமோ?-பிடி-வாதமோ?'

நாங்கள் எல்லாம் நாய்களும் பன்றிச் சேய்களும், என்று நினைத்துக்கொண்டீர்களா பறங்கிச் சனங்களே. நீங்கள்மட்டுந்தான் மனிதர்கள் என்ற மமதையா உங்களுக்கு? நீங்கள் போடும்சட்டங்கள் மூலமாக எங்கள் சுதந்திர உணர்வுக்கும் மட்டந்தட்டலாம் என்ற நப்பாசையா? அதுதான் நடக்காத காரியம்.

சதையைத் துண்டு
துண்டாக்கினும்-
-உன்னெண்ணம்
சாயுமோ?—ஜீவன்—
ஓயுமோ?
இதயத்தினுள்ளே இலங்கு
மகாசக்தி
ஏகுமோ?—நெஞ்சம்—
—வேகுமோ?

என்றிவ்வாறு வீராவேசத்துடன் கூறி வெகுண்டெழுந்தார் வீரப்புலவர் பாரதியார். இதைக் கேட்டதும் வெள்ளையரரசு உள்ளங் கலங்கியது. பாரதியின் உரிமை வேட்கை பாரத தேசமெங்கும் புத்துணர்வை யூட்டியது. விடுதலைக்குரல் வெள்ளையர் கோட்டையை மண்ணோடு மண்ணாக்கியது.

### இது சத்தியம்!

ஆனால் ஈழத் தமிழரின் இன்றைய நிலையை எடுத்துக்கொண்டால் பாரதியாரின் வீரமுழக்கம் வீணாகப் போய்விட்டதோ என்று தான் எண்ணத் தோன்றுகின்றது. அதிகார மோகமும் வகுப்புவாத வெறியுங் கொண்ட சிங்கள அரசுகள், தமிழ்மக்களை நாய்கள் என்றும் பன்றிச்சேய்கள் என்றும் எண்ணிப்போலும் நசுக்கிவிடலாம் என்று நப்பாசை கொண்டுள்ளன. மொழி இழந்தோம்—விழியிழந்தோம். வீடிழந்தோம், நாடிழந்தோம். இனிமேல் இழப்பதற்கு உயிரைத்தவிர எம்மிடம் வேறு ஒன்றுமே இல்லை. தலையிழந்த மயிருக்குச் சரியானது தமிழனுக்கு உயிர். ஈழத் தமிழ்த்தாய்க்கு இட்டவிலங்கொடித்து வாழவைக்கவிரும்பும் தமிழ்மக்கள் முப்பதுஇலட்சம்பேரும் வாழ்ந்தால் வகையோடு வாழ்வோம், வீழ்ந்தாலும் ஒன்றாக மாள்வோம். இது சத்தியம் என்பதை இலங்கை அரசுகளுக்கு எடுத்துக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

### சரித்திர வரலாற்றை மறப்பது ஏன்?

சுதந்திரம் என்பது ஒரு வகுப்பாருக்கோ அல்லது ஒரு நாட்டாருக்கோ சொந்தமான அவர்கள் பாட்டன் வீட்டுச் சொத்து அல்ல. அது ஒரு பொதுச் சொத்து. மனிதன் ஒவ்வொருவனும் பிறக்கும்போது சுதந்திர மனிதனாகவே பிறக்கிறான். இதைப் பறிப்பதற்கு இங்கு எவருக்கும் உரிமையில்லை. சுதந்திரத்தைப்பறிக்க எண்ணிய எத்தனையோ பேரரசுகள் மண்ணோடு மண்ணாகிய உண்மையை எமது இலங்கை அரசு மட்டும் எதற்காக மறந்தும்—மறுத்தும் வருகின்றனவென்பது எமக்குப் புரியாத புதிராக விருக்கின்றது.

### இன்றுவரை பாரதியார் வாழ்ந்திருந்தால்...!

இந்தியாவின் முப்பது கோடி மக்களின் இன்னல் கண்டு இதயங்கொதித்த பாரதியார், இன்றுவரை எம்மிடையே வாழ்ந்திருந்தால் இலங்கையிலே முப்பது இலட்சம் தமிழரும் படும் பாடுகளை எண்ணிக் கண்ணீர் வடித்துக் கவிதைகள் படைத்திருப்பார். இன்று அவர் எம்மிடையே இல்லைத்தான் என்றாலும், அன்றே அவர் எம் நிலையை உணர்ந்து எம் விதியை நொந்து அழுதுகொண்டே அடுக்கடுக்காகப் பாடிவிட்டார் 'ஒப்பாரிகளை'.

'விதியே! விதியே
தமிழச் சாதியை
என் செய நினைத்தாய்
எனக்குரையாயோ,
..............

ஆபிரிக்கத்துக் காப்பிரி
நாட்டிலும்
தென்முனையடுத்த தீவுகள்
பலவினும்
பூமிப் பந்தின்
கீழ்ப்புறத்துள்ள
பற்பல தீவிலும்
பரவி இவ் வெளியே
தமிழச் சாதி தடியுதை
யுண்டும்
காலுதையுண்டும்
கயிற்றடியுண்டும்
வருந்திடும் செய்தியும்
மாய்ந்திடும் செய்தியும்
..............
இதெல்லாம் கேட்டும்

என்னுள்ளம் அழிந்திலேன்' என்று எந்தமிழர் இன்றைய நிலையை நொந்து சிந்தையுருகியழுதுவிட்டார் பாரதியார். பாரதியார் ஒரு தீர்க்கதரிசியல்லவா? மலைநாட்டுத் தமிழர்களைக்கள்ளத்தோணிகள் என்று கைது செய்து காலுதையும் கயிற்றடியும் கொடுத்துச் சித்திரவதை செய்கின்றனவே சிங்கள அரசுகள், எங்களது பாரதியார் இதைப்பற்றி எப்பவோ அறிந்துகொண்டுதான் மேற்கண்டவாறு கூறிக் கண்ணீர் சொரிந்தார் போலும்.

### கனவை நனவாக்குவோம்!

எனவே, பாரதியாருக்கு வருடந்தோறும், அவர் பிறந்த நாளிலும் இறந்த நாளிலும் விழாவெடுத்து வரும் நாம் பாரதியின் கண்ணீரைத் துடைப்பதற்கே முக்கியமாக முயலுதல் வேண்டும்.

'ஆடுவோமே பள்ளுப்
பாடுவோமே
ஆனந்த சுதந்திரம்
அடைந்துவிட்டோமென்று

ஆடுவோமே' என்று பாரதி கண்ட சுதந்திரக் கனவு ஈழத் தமிழரைப் பொறுத்தவரையில் இன்னமும் நனவாகவேயில்லை. ஆகவே, பாரதியின் கனவை நனவாக்கப் பைந்தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபடவேண்டிய காலம் மிக நெருங்கிவிட்டது.

'சொந்த நாட்டில்
பிறர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம் இனி
அஞ்சிடோம்' என்று வீர

சபதம் ஏற்று, பாரதியின் ஆவலைப் பூர்த்தி செய்யாவிட்டால்—'என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?' என்று ஏங்கிய பாரதிக்கு 'தாகசாந்தி' செய்வதற்கு நாம் திடசங்கற்பம் பூண்டு முயற்சி செய்யாவிட்டால், பாரதியின் ஆன்மா சாந்தியடையாது. பாரதியாருக்கு எடுக்கும் விழாக்களுக்கும் அர்த்தம் இல்லாமற் போய் விடும்.

---

## வன்னிய சிங்கம் நினைவு தினம்

இலங்கைத் தமிழரசுக் கட்சி கொக்குவில்—கோண்டாவில் கிளையின் ஆதரவில் இத் திங்கள் 17ம் நாள் அமரர் வன்னியசிங்கம் நினைவு தினம் விரிந்த முறையில் நடைபெறும். அன்றைய தினம் நண்பகல் அமரரின் பெயரால் அன்னதானம் வழங்கப்படும். பிற்பகல் மாபெரும் ஊர்வலமொன்று நடைபெறும். ஊர்வலத்தைத் தொடர்ந்து நடைபெறும் பொதுக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர்களும் தமிழறிஞர்களும் உரை நிகழ்த்துவார்கள்.

---

## தென்னைச் செய்கைக்கு நிலம் பங்கீடு

## 21 ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கிராஞ்சி, பரந்தன், முல்லைத்தீவு, துணுக்காய், புளியம் பொக்கனை, பலாலி, கோரக்கன்கட்டு, கண்டாவளை மற்றும் மத்திய வகுப்புத் திட்டங்களிலுள்ள காலியான காணிகளில் தென்னைச் செய்கைக்கு நிலம் வழங்கப்படவிருக்கிறது.

இத் திட்டத்தின்கீழ் நிலம் பெற விரும்பும் மத்தியதர வகுப்பினர் இத்திங்கள் 21ம் நாளுக்கு முன்னர் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருக்குத் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும் வண்ணம் கோரப்படுகின்றனர்.

### மாதிரி விண்ணப்ப படிவம்

1. விண்ணப்பக்காரரின் முழுப் பெயர்:..............
2. விண்ணப்பகாரரின் தற்போதைய முகவரி:.........
3. விண்ணப்பகாரரின் நிரந்தரக்குடியிருப்பும், அதன் முகவரியும்:....................
4. காரியாதிகாரியின் பிரிவும், கிராம சேவையாளர் பகுதியும்:............
5. வயது:..............
6. தொழில்:..........
7. விண்ணப்பகாரரின் பராமரிப்பில் தங்கியிருப்பவர்களும், அவர்கள் ஆணு, பெண்ணு என்றும், அவர்கள் வயதும், அவர்கள் விண்ணப்பகாரருக்கு எவ்வகையில் சொந்தமென்றும்:.........
8. தற்போதைய வருமானம் (வருமான வரிப் பத்திரமோ அல்லது வேறு நம்பிக்கைக்குரிய அத்தாட்சிப்பத்திரமோ விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்):.........
9. காணிப் பங்கீட்டில் செலவு செய்வதற்கு விண்ணப்பகாரரிடமுள்ள பணம்:...........
10. விண்ணப்பகாரர் அல்லது கணவன்/மனைவி பெயரில் உள்ள காணிகளின் விபரம், விஸ்தீரணம், இருக்குமிடம், பெறுமதி:........
11. விண்ணப்பகாரர் அல்லது கணவன்/மனைவி பெயரில் உள்ள முடிக்குரிய காணிகள், அவற்றின் விபரங்கள், இருக்குமிடம், பெறுமதி:........
12. விண்ணப்பகாரர் அறிவிக்க விரும்பும் விசேட தகைமைகள்:...........
13. காணி பெற விரும்பும் இடம்:.................
14. மேற்கூறப்பட்ட விபரங்கள் அனைத்தையும் உண்மையானவையென்பதையும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். மேலும், இவற்றில் எவையேனும் பிழையெனக்கண்டால் எனது தேர்தல் ஒரு வருடகாலத்திற்குள் எந்தக் கட்டத்திலும் நீக்கிவிடப் படுமென்பதையும் நான் நன்கு உணர்கிறேன்.

..................
விண்ணப்பகாரரின் கையொப்பம்

திகதி:.........

---

## அடுத்த இதழ்

அமரர் வன்னியசிங்கம் நினைவு இதழாக வெளிவரும். திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், திரு. ஏ. வி. பி. கோமஸ், ஈழவேந்தன் ஆகியோரின் கட்டுரைகள் இதழை அலங்கரிக்கும்.

---

## சந்தியில்

அமைச்சர் அனில் முனசிங்கா அண்மையில் யாழ்ப்பாணம் சென்றிருந்தார் அல்லவா? சுன்னாகத்தில் பொதுக் கூட்டமும் அதற்கு முன்னர் ஒரு 'மாபெரும் ஊர்வல'மும் நடைபெற்றதாம். இந்த 'மாபெரும் ஊர்வலத்தில்' முன்னாள் செனட்டர் நாகலிங்கத்தின் உறவினர்களான ஐந்து பெண்கள் உட்பட மொத்தம் 29 பேர் இருந்தனராம்.

கூட்டம் முடிந்து மந்திரி மேடையை விட்டு இறங்கியதும், அவருக்கு எதிரிலேயே சமசமாஜ பஸ் தொழிலாளர்கள் ஒன்றாகச் சேர்ந்து மேடையை உடைத்தெறிந்தார்களாம். பல சமசமாஜப் பெரும் புள்ளிகள் எவ்வளவோ தடுத்தும்கூட இவர்களைத் தடுக்க முடியவில்லையாம். பஸ் தொழிலாளர்களுக்கு இத்தகைய ஆத்திரத்தை மூட்டுவதற்கு ஏதுவாகவிருந்த காரணம் என்ன என்பது தான் பெரிய புதிராகவிருக்கிறது.

★

மட்டக்களப்புக்கும் கொழும்புக்கும் இடையில் துரிதகதி புகைவிரத சேவையை ஆரம்பிக்க ஆயத்தங்கள் செய்யப்படுவதாகக் கடந்த எட்டு ஆண்டுகளாக புகைவிரதப்பகுதியினர் கூறி வருகின்றனர். கால அட்டவணைகளும் போடப்பட்டாய்விட்டது. சில வருடங்களுக்கு முன்னர் சில புகைவண்டி நிலையங்களில் புதிய துரித சேவைக்கான நேர அட்டவணைகளும் தொங்கின. ஆனால் வண்டி மட்டும் ஓடவில்லை.

ஒரு வருடத்துக்கு முன்னர் ஒரு தூதுக்குழு திணைக்கள அதிபரைப் பேட்டி கண்ட போது, 'கால அட்டவணைகள் அச்சிலிருக்கின்றன. அவை கிடைத்ததும், துரித சேவை ஆரம்பமாகிவிடும்' என்று கூறினாராம். கால அட்டவணைகள் இந்த ஒரு வருட காலத்துள் இன்னும் அச்சாகவில்லையா? பொருத்தமான காரணம் வேறு ஏதாவது கிடைக்கவில்லையா?

★

காலை 6-30 முதல் 7-00 வரை காலை உணவு வேளை—மட்டக்களப்பு, திருகோணமலையிலிருந்து கொழும்பு செல்லும் பிரயாணிகளுக்கு...! மீரிகமத்துக்கும் வியாங்கொடைக்கு மிடையில் தினசரி திடீரென இந்த வண்டி நின்றுவிடுகிறது. அவ்வேளையில் சுடச்சுட அப்பம் விற்கப்படுகிறது. அதே இடத்தில், தினசரிப் பத்திரிகை வியாபாரமும் இங்கேயே தொடருகிறது. அம்மான் நடாத்திய உத்தியோகப் பற்றற்ற விசாரணையில் கிடைத்த முடிவுகள்:-

1. மீரிகமை புகைவண்டி நிலைய கைகாட்டி போடுபவருக்கும் அப்ப வியாபாரிகளுக்கும் உறவு.
2. மேற்படியாருக்கு வியாபாரிகளிடமிருந்து கமிஷன்.
3. எஞ்சின் டிரைவர், 'கார்ட்' ஆகியோருக்கு இலவச காலை உணவு வழங்கல்.

மேற்படி உத்தியோகப் பற்றற்ற விசாரணை முடிவுகளை விட வேறு ஏதாவது முடிவுகள் கிடைக்குமாயின் தயவு செய்து அம்மானுக்கு அறியத்தாருங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இரகசிய வானொலி நிலையம்

## என். எம்.-என். கியூ. லடாய்: பிக்குகளின் முடிவு

'நிதி மந்திரி டாக்டர் என்.எம். பெரேராவுக்குச் சொந்தமான கிரிநரமில் சம்பவத்தால் ஏற்பட்டுள்ள நிலைமை பற்றியும் அவரது சொத்து வர்த்தக நடவடிக்கை பற்றியும் விசாரணை செய்வதற்குப் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமிக்க வேண்டுமென்ற தீர்மானத்துக்குக் கொம்யூனிஸ்ட் கட்சியும், தமிழரசுக் கட்சியும் தவிர ஏனைய கட்சிகள் அனைத்தும் கையெழுத்திட்டுள்ளன.

முதலாளித்துவ முகாமில் இருந்துகொண்டு சோஷலிசத்தைப் போதிக்கும் மார்க்சியவாதிகள் எத்தகைய ஊழல்களைச் செய்தாலும் அவைகளை அசட்டை செய்வது கொம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையாதலின் அக்கட்சி கையெழுத்திடாதிருந்தது வியப்பன்று. தமிழரசுக்கட்சி அதில் கையெழுத்திடாத காரணம் டாக்டர் பெரேராவின் கட்சி பெரும்பான்மை இனத்திலும் தமிழ் இனத்தில் அதிக அக்கறை காட்டி சலுகைகளை வழங்கும் கட்சியாக இருப்பதுதான். இந்நாட்டிலுள்ள அரசியற் கட்சிகளில் ஊழல் மலிந்தவை மார்க்ஸிய கட்சிகள்தான்' என்று 'லங்காதிப்ப' அரசியல் நிருபர் 5-9-64ந் திகதி இதழில் எழுதுகிறார்.

டாக்டர் என்.எம்.பெரேரா பாராளுமன்றத்தில் நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியூ. டயஸைத் தாக்கிப் பேசியதின் பின்னர் அரசாங்க பௌத்த ஊழியர்கள் மட்டுமின்றி நாடுமுழுவதிலுமுள்ள பௌத்த ஸ்தாபனங்கள் திரு. டயஸ் மீது அனுதாபம் காட்டத் தொடங்கிவிட்டனரென்றும், நிதி மந்திரியின் தாக்குதலால் பிக்குகள் கவலையடைந்துள்ளனரென்றும், நான்கு போயா தினங்களையும் விடுமுறை நாட்களாகப் பிரகடனம் செய்யும் வரை பிக்குகள் வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்ய முடிவுசெய்துள்ளார்களென்றும் லங்காதீப்ப அரசியல் நிருபர் கூறுகிறார்.

அவர் மேலும் எழுதுவதாவது:

'வாரத்தில் ஐந்து நாள் வேலை கொடுப்பதோடு பௌர்ணமி தினத்தை மட்டும் விடுமுறைத் தினமாக்குவதாக நிதி மந்திரி தனது வரவு செலவுத் திட்டப் பிரசங்கத்தில் குறிப்பிட்டுள்ளாரெனினும், இதனை அமுல் நடத்துவது பற்றி தொழிற் சங்கங்களைக் கலந்தாலோசிக்கப் போவதாகக் கூறியிருப்பதால் அவருடைய வாக்குறுதியை என்றுமே நிறைவேற்ற முடியாதென்று பௌத்தர்கள் நம்புகின்றனர்.

(13-ம் பக்கம் பார்க்க)

## என். எம். தாக்கியது யாரை?

பாராளுமன்றத்தில் நிதி மந்திரி டாக்டர் என். எம். பெரேரா, திரு. என். கியூ. டயஸைத் தாக்கி 'தவஸ' 5-9-64ந் திகதி தலையங்கம் தீட்டியுள்ளது.

'வெளி விவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியைத் தாக்கிப் பேசுவதும், வெளிவிவகார அமைச்சரைத் தாக்கிப் பேசுவதும்—இரண்டும் ஒன்றே. இக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது நிதிமந்திரி கர்ண கடூரமான சொற்களால் தாக்கியிருப்பது பிரதம மந்திரியையே' என்று அத் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'தவஸ' 5-9-64ந் திகதி எழுதியுள்ள அரசியற் குறிப்பில் நிதி மந்திரியைப் பற்றிக் குறிப்பிடும்போது 'முட்டாள், உருத்திராட்சப்பூனை' போன்ற சொற்களை உபயோகித்துள்ளது.

## கலகம் நடப்பதாக செய்தி

"இலங்கையில் ஒரு கள்ள வானொலி நிலையம் ஓர் இரகசிய இடத்திலிருந்து செயல்படுவதாகத் தெரிகிறது. இலங்கையைப் பற்றிப் பிற நாடுகளில் தவறான செய்திகளைப் பரப்புவதற்காக இக் கள்ள வானொலி பயன்படுத்தப்படுகிறதாம்" என்று "மகஜன எக்ஸத் பெரமுண" 5-9-64ந் திகதி ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

"இலங்கை மண்ணில் இரகசிய வானொலி பிரச்சார நிலையமொன்று அமைக்கப்பட்டு செயல்படும் அளவுக்குத் தீவின் பாதுகாப்பு பலவீனமடைந்திருப்பது ஒரு பயங்கரமான நிலைமையாகும். அதற்கு அரசாங்கம் பொது மக்களுக்கு வகை சொல்ல வேண்டும்.

இரு வாரங்களுக்கு முன்பு அரபுக் கடலில் சென்றுகொண்டிருந்த "மெரிடயிம் மெஸாஜரிஸ்" என்னும் பிரெஞ்சுக் கம்பெனியைச் சேர்ந்த "கெம்போஜ்" என்ற பிரயாணிகள் கப்பல் இந்த இரகசிய வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்பட்ட செய்தியைக் கேட்டுள்ளது. ஐரோப்பாவிலிருந்து தூர கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் மார்க்கத்தில் இக்கப்பல் பம்பாயை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒத்துழையாமை இயக்கமொன்றினை ஆரம்பித்திருப்பதாகவும், நாடு முழுவதும் கலகங்கள் தோன்றியிருப்பதாகவும் அந்த வானொலிச் செய்தியில் கூறியதாக அக் கப்பலில் இலங்கை வந்துள்ள பிரயாணிகள் கூறினர்.

இந்த இரகசிய வானொலி நிலையம் அடிக்கடி பிரச்சாரச் செய்திகளை ஒலிபரப்புகிறதென்றும், இந்து மகா சமுத்திரத்தில் செல்லும் கப்பல்கள் இச் செய்திகளைக் கேட்க முடிகிறதென்றும் சந்தேகிக்க இடமிருக்கிறது. இந்தப் பிரச்சாரம் துஷ்ட தேசத் துரோக நோக்கத்துடன் செய்யப்படுகிறதென்பதில் ஐயமில்லை. இது யாருடைய வேலை?" என்று "மகாஜன எக்ஸத் பெரமுண" மேலும் குறிப்பிடுகிறது.

# குடியுரிமை பெறும் பிறருக்கு தொழில் செய்ய நிபந்தனை

இலங்கைப் பிரஜாவுரிமையைப் பெறும் அன்னியர் இந்நாட்டின்மீது அவர்களுக்குள்ள பற்றுதலை நிரூபிக்கும் வரை தொழில்களிலோ, வியாபாரத்திலோ ஈடுபட அவர்களுக்கு அனுமதி வழங்கலாகாது என்று 'தினமின' 2-9-64ந் திகதி எழுதியுள்ள தலையங்கத்தில் கூறுகிறது.

இத் தலையங்கத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

'புதிய கைத்தொழில்களையும் வர்த்தகத்தையும் பார்க்கும்போது இலங்கை இந்தியாவின் ஒரு மாகாணமல்ல என்று கூறுவது கடினம். அந்த அளவுக்கு நாட்டின் வியாபாரமும் தொழில்களும் இந்தியர்களுக்கும் பாகிஸ்தானியர்களுக்கும் சொந்தமாகியுள்ளன. மொத்த வியாபாரம் முழுவதும் இன்று அவர்கள் கையில் தான்—இன்று புறக்கோட்டை ஒரு இந்திய நகரம்போல காட்சியளிக்கிறது. ஏக்கல போன்ற தொழிற் பேட்டைகளையும் இந்தியர் விழுங்கிவிட்டனர்.

அவர்கள் முதலில் செய்வது எப்படியோ இந்நாட்டின் பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொள்வது தான். பின்னர் அதிகாரிகள், அரசியல்வாதிகள் முதலியோரின் உதவியுடன் பிரசைக்குரிய சகல உரிமைகளையும் பெற்றுக்கொள்கின்றனர்.

இங்கே வந்துபோகும் சில அன்னியருக்குத் 'தற்கால வாச பர்மிட்' எப்படிக் கிடைக்கிறதென்பதே ஓர் இரகசியம். அவர்களின் ஒரே நோக்கம் எல்லா விதத்திலும் இந் நாட்டைச் சுரண்டிப் பணத்தைத் திரட்டித் தாய் நாட்டுக்கு அனுப்பிவிடுவது தான்.

இத்தகைய நிலைமையில் மிகப் பயங்கரமான கட்டம் எதுவெனில், இவர்களுக்குச் சகல வரப்பிரசாதங்களும் கிடைத்திருக்கும்போது, தங்களின் முழுவாழ்வையும் இந்நாட்டின் தோட்டத் தொழிலுக்கு அர்ப்பணித்துள்ள இந்தியத் தொழிலாளருக்கு அந்த வாய்ப்பு எதுவுமே கிடைக்காதிருப்பது தான்.'

## சிங்கள இதழ்களில் . . .

'தீகவாபி பௌத்தாலயத்தைச் சுற்றியுள்ள காடுகளில் குடியேறுவதற்கு சிங்கள பௌத்தர்கள் போட்டியிட்டுக்கொண்டு முன்வந்துள்ளார்கள். அவர்கள் இவ்வாறு முன்வருவது தீகவாபி பௌத்தாலயத்தைப் பாதுகாக்கவே என்று கூறப்படுகிறது' என 'சவஸ' பத்திரிகை 7-9-64ந் திகதி ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

இக் குடியேற்றத்துக்கான திட்டமெதுவும் அரசாங்கத்திடம் கிடையாததால் தனிப்பட்ட சிலர் இதில் சிரத்தை காட்டுகின்றனரென்றும் அம்பாறை எம். பி. திரு. இந்திரசேன டி. சொய்ஸா தீகவாபி ஆலயத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் சிங்கள பௌத்தர்களைக் குடியேற்றுவதில் மிக ஊக்கத்துடன் உழைக்கிறாரென்றும் இப் பத்திரிகை மேலும் எழுதுகிறது.

# இலங்கை நாடு தமிழ் நாடே

— புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் —

எழிற் பெருந் தென்கடற் கண்
இலங்கிடும் இலங்கை தன்னில்
தொழில் செய்வார் வணிகம் செய்வார்,
தூயநற் றமிழர்; அன்னோர்
அழைக்கப்பட்டவர்கள் ஆவார்!
அழைத்தவர் எவர் என்பிரேல்
தழைத்திடும் இலங்கை ஆளும்
தமிழ்ப்பழங் குடிகள் ஆவார்.

இலங்கைக்கும் தமிழ் நாட்டுக்கும்
இடையினில் கடல் நுழைந்தே
இலங்கையர் தமிழரல்லர்
என்றது! கடலை நீக்கிக்
கலங்கிடும் இறந்த காலக்
காரிருள் நீக்கிப் பார்த்தால்
இலங்கையர், தமிழர் மற்றும்
தமிழரும் இலங்கையரே!

மன்னிய திராவிடத்தின்
மாபெரும் நிலப் பரப்பில்
"முன்னைநாள்" என்னும் தீயோன்
முழங்கு நீர் வாயால் நாற்பத்
தொன்பது நாட்டைக் கொண்டான்
ஒரு நாட்டின் உயர்ந்தபாங்கே
இறைக்கும் இலங்குகின்ற
இலங்கை என்றறிதல் வேண்டும்.

மறைந் துள்ளபகுதி நீக்கி
மற்றதை மதித்தல் தப்பே!
அறிவினுற் காணும் போது
பிறை நிலா முழுநிலாவே
துறைதொறும் தொண்டு செய்யும்
சுதந்திரத்தாளே நீ தான்
உறைதரும் இலங்கை மக்கள்
உயர் தமிழ் இனமே என்க!

குறிப்பு:-

புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் இக்கவிதையினை 1954-ம் ஆண்டு திரு. மு. வே. ப. சாமி அவர்கள் வெளியிட்டு வந்த 'நாம்' இதழுக்கு அனுப்பியிருந்தார். ஆனால் 'நாம்' தொடர்ந்து வெளி வரவில்லையாதலினால், கவிதையும் இதுவரை அச்சு வாகனம் ஏறவில்லை. சுதந்திரன் இதழுக்காகவே இக்கவிதை எழுதப்பட்டிருப்பது போன்று வாக்கியங்கள் இயல்பாகவே அமைந்துள்ளன.

ஆனந்த லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

ANANDA MEDICAL HALL TRADE MARK 174 SEA STREET, COLOMBO 11

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கழுக்கட்டு வலிகள் அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இலவசமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் சிங்களக் குடியேற்றம்

## தமிழ் மக்களை வேரோடு அழிக்கும் முயற்சி

இந்திய அரசாங்கத்தின் இணக்கத்துடன் மலையக மக்களை இந்தியாவுக்கு அனுப்பும் திட்டம் தோல்வி கண்டது. ஆகவே மிருகத்தனமான முறையிலாவது மலையக மக்களை வெளியேற்ற அரசாங்கம் முயற்சி செய்கிறது. மக்களுக்காக அரச வாழ்வையே தியாகம் செய்த கருணாமூர்த்தி புத்தபகவானின் பெயரைச் சொல்லிக்கொண்டு மலையகத் தமிழ் மக்களைப் பட்டினியால் வதைக்கஆரம்பித்துள்ளது. 'இந்தியாவுக்கு ஓடிப்போ, அல்லது செத்து மடி' என்னும் அரசாங்கத்தின் கொள்கையை அமுல் நடத்தவே இச் சிங்களக் குடியேற்றம் பயன்படப் போகின்றது. தமிழ்மக்கள் தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்ற உடனடியாக வீறுகொண்டெழுந்தால்தான் நிலைமையைக்கட்டுப்படுத்தலாம்.

வடக்கு, கிழக்குமாகாணங்களில் நடைபெறும் சிங்களக் குடியேற்றத்தைவிடமிகவும் அபாயகரமானது மலையகக் குடியேற்றமே. தமிழர் என்ற தனித்தன்மையையும் தமிழ்மொழியையும்ஒழித்து தமிழ் மக்களைப் பட்டினியால் கொன்று போடவே இக் குடியேற்றத்தை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. வெளிப்பார்வைக்கு ஒவ்வொரு இடத்திலும் 50/100 சிங்களக் குடும்பங்களே குடியேறப் போகின்றன எனத் தெரியும் இத்திட்டம் மலையகத்தமிழர் அத்தனைபேரையும் வேரோடு அழிக்கும் பயங்கரத் திட்டமாக மலையக நிலைமைகளை ஆராய்ந்தால் தெளிவாகத் தெரியும்.

### பட்டினங்களைச் சுற்றிக் குடியேற்றம்

மலையகப் பட்டினங்கள் எல்லாவற்றிலும்தமிழ்வியாபாரிகளே அதிகமாக உள்ளனர். ஓரளவில் தோட்டப் பகுதி மக்களை தொழிற்சங்கங்களுக்கு அடுத்தபடியாகக் கவர்ந்து வைத்திருப்பவர்கள் இவ் வியாபாரிகளே. ஆகவே இரு முக்கிய காரணங்களுக்காகப் பட்டினங்களைச்சுற்றிச் சிங்கள மக்களைக் குடியேற்ற அரசாங்கம் விரும்புகின்றது.

(1) தமிழ் வியாபாரிகளை ஒழித்தலுடன் இலங்கையர் மயக்கொள்கையினால்பாதிக்கப்பட்டு வியாபார நிலையங்களை மூடும் தமிழ் மக்களின் இடத்தில் வடக்குக் கிழக்குப் பகுதி வியாபாரிகள் வந்து சேராது தடுத்தல்.

(2) தமிழ்மக்களைச் சிங்கள வியாபாரிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல்.

இவ்விரண்டுமே இத் திட்டத்தின் முதற்படிகள். இவ்விரண்டும் ஓரளவில் பூர்த்தியானதும் தோட்டப் பகுதிகளில் குடியேற்றம் இப்பொழுதிலும் பார்க்க மும்முரமாக நடைபெறும். அந்நேரத்தில் பட்டினப் பகுதிகளில் குடியேறிய சிங்கள

இ. நாகேந்திரம்
நிர்வாகச் செயலாளர்
இ. தொ. கழகம்

மக்களும், சிங்கள வியாபாரிகளும் தோட்டப்பகுதிகளில் குடியேறுபவர்களுக்கும் உறுதுணையாக இருப்பர்.

### தோட்டங்களில் குடியேற்றம்

தோட்டங்களில் நடைபெறும் குடியேற்றம் மூன்று வழிகளில் சிங்கள மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் உதவிபுரியும்.

(1) சிங்கள மக்களுக்கு வேலை வாய்ப்புக்கள்.

(2) தமிழ்மக்களின்வேலை வாய்ப்புக்களை அழித்து தோட்டங்களை விட்டு அவர்களை விரட்டுதல்.

(3) தோட்டப்பாடசாலைகளைச் சிங்களப் பாடசாலைகளாக்குதல்.

ஒவ்வொரு தோட்டத்திலும் குறிப்பிட்ட அளவை எடுத்துச் சிங்கள மக்களைக் குடியேற்றினால் தமிழ் மக்களைத்தோட்டங்களிலிருந்து விரட்டுவதற்கு வழிவகுக்கும். இலங்கையர்களுக்கு வழங்குவதற்காகவே காணி எடுக்கப்படுகின்றது எனக் கூறப்பட்டாலும்குடியுரிமையுள்ளவர்களினதும் வடக்கு, கிழக்கு மாகாணத்தவர்களினதும் மனுக்கள் காரணம் காட்டாது நிராகரிக்கப்படுகின்றன. முழுக்க முழுக்கச் சிங்கள மக்களே தெரிவு செய்யப்படுகின்றனர். அதுவும் நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பாலிருந்து வருபவர்களே தெரிவுசெய்யப்படுகின்றனர்.

### தமிழ் மக்களின் தொழிலுரிமை

பலதலைமுறைகளுக்குமுன்னரே இலங்கைக்கு வந்து காட்டை அழித்து, பாறைகளை உடைத்து தோட்டங்களை உண்டாக்கினர் தமிழர்.




இன்று இலங்கை அரசாங்கமே எதிர்பார்த்திருக்கும் இரு முக்கிய வருமானங்கள் தேயிலை, ரப்பர் ஆகியவற்றிலிருந்தே கிடைக்கின்றன. ஆயினும் தேயிலைத் தோட்டங்களிலேயே பிறந்து அத்தோட்டங்களுக்கே தனது சக்தியைக் கொடுத்து இறந்தும் தோட்டத்துக்கே எருவாகிய தமிழ்த் தொழிலாளரின் சந்ததியினருக்கு இன்று;

குடியுரிமை இல்லை.

வாக்குரிமை இல்லை.

மொழியுரிமை இல்லை.

கல்வி வசதி இல்லை.

வீட்டு வசதி இல்லை.

கடைசியாக உணவு வசதி கூட இல்லாது போகின்றது. தொழிலுரிமை இல்லாத நிலை இன்று ஏற்பட்டுள்ளதால், சாதாரணமாக ஒரு தோட்டத்தில் 5, 6 குடும்பங்களுக்கே குடியுரிமை இருக்கும். இவர்கள்கூட இலங்கைக் குடிமக்கள் என அரசாங்கத்தால் கணிக்கப்படுவதில்லை.

ஒரு வருடத்தில் 10, 15 பிள்ளைகளையே ஒரு தோட்டத்தில் வேலைக்கெடுக்கக் கூடிய நிலை தோட்டங்களில் இருந்து வருகின்றது. இதனால் சில தோட்டங்களில் 20 வயதுக்கு மேற்பட்டவர்கள்கூட வேலையற்றிருக்கின்றனர்.

நிலை இப்படியிருக்க ஒரு தோட்டத்தில் 25 சிங்களக் குடும்பங்கள் குடியேறினாலும்போதும், அங்கு தமிழ்ப் பிள்ளைகளுக்கு வேலைகிடைக்காது. பிள்ளைகளையும் தங்களையும் காப்பாற்ற முடியாது தொழிலாளர்கள் படிப்படியாகதோட்டத்தை விட்டு வெளியேறவேண்டிய நிலை ஏற்படும்.

வெளியிலுமோ வேலை கிடைக்காது. ஆகவே பட்டினியால் துடிக்க நேரிடும் நிலை மிகச் சமீபத்தில்தோட்டப் பகுதிகளில் ஏற்படப் போகின்றது.

### தோட்டப் பாடசாலைகள்

தோட்டப் பாடசாலைகளைச் சிங்களப் பாடசாலைகளாக்கும் திட்டத்துக்கும் இக் குடியேற்றங்கள் மிக உதவிபுரியும். குடியேற்றப்பட்ட சிங்கள மக்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதியளிக்கவும் தமிழ்மக்களின மொழியுரிமையை அழிக்கவும் மலையகத் தமிழ் மக்களை கல்வியறிவற்றவர்களாக்கவும் இத் திட்டம் பயன்படும்.

ஒரு பாடசாலை தமிழ்ப் பாடசாலையாகவோ அல்லது சிங்களப் பாடசாலையாகவோ இயங்கும் என்பதைத் தீர்மானிக்கும் பொழுது அப்பாடசாலையில் குடியுரிமையுள்ள தமிழ்ப் பிள்ளைகளோ அல்லது சிங்களப் பிள்ளைகளோ பெரும்பான்மையாக உள்ளனர் என்பதே கவனத்துக்கெடுக்கப்படும்.

ஆகவே இச் சிங்களக் குடியேற்றத்தின் காரணமாக சிங்களப் பிள்ளைகள் குடியுரிமையுள்ள தமிழ்ப்பிள்ளைகளிலும் பார்க்கப் பெரும்பான்மையினரான நிலைமையில் தோட்டப் பாடசாலைகள் சிங்களப் பாடசாலைகளாகச் சுலபமாக மாற்றப்படலாம். அரசாங்கமும் தனது செய்கைநியாயமானதுதான்எனமேற்குறிப்பிடப்பட்டுள்ள காரணத்தைக் காட்டலாம்.

### தொழிற் சங்கங்களின் பராமுகம்

மலைநாட்டில் இயங்கி வரும்தொழிற்சங்கங்களோ சந்தாச் சேர்ப்பது தவிர எவ்வகையிலும்தொழிலாளரின் அடிப்படை உரிமைகளைப் பெறுவதில் முயற்சி செய்வதில்லை.

இலங்கைத் தொழிலாளர் கழகம் மலையகத்தில் இயங்கத் தொடங்கியதிலிருந்து தான் தொழிலாளரிடையேயும் மற்ற தமிழ் மக்களிடையேயும் தங்கள் அடிப்படை உரிமைக்காகப்போராட்டம் நடத்த வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டுள்ளது. ஆயினும் தமிழ்மக்களுடைய உரிமைகள் பறிபோன இந்நிலையிலும் மற்ற தொழிற் சங்கங்கள் இலங்கைத் தொழிலாளர் கழகத்துடன் போராட்டம் பற்றிய ஏற்பாடுகளில் ஒத்துழைக்க மறுக்கின்றன.

அடிப்படை உரிமைகள் பற்றிய போராட்டங்களால் ஒருவேளை தங்களின் சங்கங்கள் தொழிலாளர்களால் புறக்கணிக்கப்படக் கூடுமென மற்றச் சங்கங்களின் முக்கியஸ்தர்கள் பயப்படுவதனால்தான் இந்த ஒத்துழையாமை நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்கள் உரிமையின்றி அடிமைகளாக வாழ்ந்தாலும் பரவாயில்லை, ஆனால் தங்கள் செல்வாக்கு தோட்டப் பகுதிகளில் இருக்க வேண்டும் என்ற இவர்களின் சுயநல எண்ணத்தினால் தமிழ் மக்கள் மேலும், மேலும் நசுக்கப்படப் போகின்றனர்.

### வேண்டுகோள்

தமிழ் மக்களின் உரிமைகளைக் காப்பதே இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் முக்கிய குறிக்கோள். இந்தக் குறிக்கோள் வெற்றி பெற வேண்டுமாயின், தொழிலாளர்கள் எல்லோரும் கழகத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்து அதன் போராட்டங்களில் ஒத்துழைக்க வேண்டும்.

மலையகத்தில் குடியுரிமையுள்ள எல்லோரும் பின்வரும் கழக அலுவலகங்களில் தங்கள் பெயர்கள் முதலிய விபரங்களைக் கொடுக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்ளப்படுகின்றனர். மலையகத்தில் எங்கெங்கு அரசாங்கம் காணி கொடுக்கின்றதோ அங்கு சென்று குடியேறத் தமிழ் மக்கள் தயாராக இருக்க வேண்டும். இந்த ஒரு வழியால்தான் நாங்கள் இக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்த முடியும்.

இலங்கைத் தொழிலாளர் கழகம்

(1) 117/8, டிம்புல்லவீதி, அட்டன்.

(2) 141, சாமிமலை வீதி, மஸ்கெலியா.

(3) 47, கொத்மலை வீதி, தலவாக்கொல்லை.

(4) 17, உடபுசெல்லாவ வீதி, பழைய கடை வீதி, நுவரெலியா.

(5) 132, லோவர் வீதி, பதுளை

அடுத்த இதழில்
இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. ச. தனஞ்சய ராசசிங்கம் பி. ஏ. (ஆனர்சு), எம். லிட் எழுதும்
திரு. வி. க. வின் தமிழ்ப் பணி
என்னும் கட்டுரை இடம்பெறும்.

### தந்தி படும் பாடு

ஆகஸ்ட் திங்கள் 9ந்திகதி காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய அஞ்சல் நிலையத்திலிருந்து சண்முகநாதன் என்பவரால் கொழும்பு அஞ்சல் திணைக்களத்தைச்சேர்ந்த சதாசிவம் என்பவருக்கு அனுப்பப்பட்ட தந்தியொன்று இன்றுவரை உரியவருக்கு கிடைக்கவில்லையென்று அறியப்படுகிறது.

இத் தந்தி ஆங்கிலமொழியில் அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால், தமிழ்மொழிமூலம் அனுப்பப்படும் சகல தந்திகளும் உரிய காலத்தில் கிடைப்பதாக அஞ்சல் திணைக்களத்தைச்சேர்ந்த பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் கூறியுள்ளார்.



பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்,
தந்தி தாமரை
நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11
டெலிபோன் 33...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியுரிமைச் சட்டமே சகல பிரச்சினைக்கும் அடிப்படைக் காரணம்

## தமிழர் பிரதிநிதித்துவத்தைப் பிடுங்கி சிங்களப் பிரதிநிதித்துவத்தைக் கூட்டினர்

### தமிழரசுத் தந்தையின் தலைமையுரை

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அன்றிருந்த சட்டப்படி பிரிட்டிஷ் பிரஜைகள் அனைவர்க்கும் வாக்குரிமை இருந்தது. எனவே பிரிட்டிஷ் பிரஜைகள் என்ற உரிமை காரணமாக மலைநாட்டுத்தமிழர்கட்கும் வாக்குரிமை இருந்தது. குடியுரிமை பெற்றவர்கட்கு மாத்திரமே வாக்குரிமை வழங்கவும் அதே நேரத்தில் மலைநாட்டுத் தமிழர்கட்குக் குடியுரிமைகிடையாத வகையில் குடியுரிமைச் சட்டம் இயற்றவும் உபாயம் வகுத்தார் டி. எஸ். சேனநாயக்கா.

#### பிரஜா உரிமையைப் பிடுங்கினார்கள்

குடியுரிமைச் சட்டங்கள் இரண்டு பகுதிகள் கொண்டவையாய் இருந்தன. இலங்கைக் குடியுரிமைச் சட்டம் என்ற முதற்பகுதிவிதிகளின்படி தானும் தனது தந்தையும் இலங்கையில்பிறந்திருந்தால் அல்லது தான் இலங்கையிற் பிறக்காவிட்டால் தனது தந்தையும் தந்தையின் தந்தையும் இலங்கையிற் பிறந்திருந்தால் ஒருவர் இலங்கைப் பிரஜையாகலாம். சாதாரணமாக இலங்கையில் ஒருவர் பிறந்திருந்தால் அவருக்குக் குடியுரிமை உண்டு. ஆனால் இந்த இருதலைமுறைப் பிறப்புக்கோரிக்கை மலைநாட்டுத் தமிழர்கட்குஎதிராகத்திட்டமிட்டவொரு பாணம். இச்சட்டத்தின் பிரகாரம் இவர்களுள் பெரும் பகுதியினர் இலங்கைக்குடிவாசிகளாயிருந்தும் இரு தலைமுறைப் பதிவை நிலைநாட்ட இயலவில்லை. தானோ தனது தந்தையோ இலங்கையிற்றான் பிறந்திருந்தாலும் தனது தந்தை இலங்கையிலேதான் பிறந்தார் என்பதைஒருவர் நிருபிப்பது துர்லபம். ஏனெனில் தந்தை பிறந்த தலைமுறையில் இலங்கையில் சரியான பிறப்புப் பதிவு ஆவணங்கள் கிடையா. பிறப்புப் பதிவு ஆவணங்கள் கிடைக்கலாமென்றாலும் அவற்றைத் தேடிப்பிடிப்பது மிக மிகத் துர்லபம். ஏனெனில் இத் தொழிலாளர்கள் ஒரு தோட்டத்திலிருந்து இன்னொரு தோட்டத்துக்கு வேலைக்காக இடம் மாறிக் கொண்டிருந்தவர்கள்.

#### நிராகரிக்கப்பட்ட மனுக்கள்

அன்று 8 இலட்சமாயிருந்து இன்று 10 இலட்சத்துக்கும் மேற்பட்டிருக்கும் ஒரு முழுச் சமுதாயத்தையே குடியுரிமையற்றவர்கள் ஆக்கும் திருப்பணி நிறைவேறியதும் டி.எஸ். சேனநாயக்கா அரசாங்கம் இந்திய பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டம் என ஒரு சட்டம் இயற்றியது. இச் சட்டத்தின் பிரகாரம் ஒரே தொடர்பாக விவாகமாகாத ஒருவர் 7 வருடமும் விவாகமான ஒருவர் 10 வருடமும் வாசகாலத் தகைமை காட்டினால் இவர்கள் மீண்டும் பிரஜைகளாகப் பதிவுசெய்து கொள்ளலாம். இவ்வாறு பதிவுக் குடியுரிமை கோரியவர்களின் மனுக்கள் மிகப் பெருந்தொகையில் நிர்வாக வழிகள் மூலம் நிராகரிக்கப்பட்டன. இதன் விளைவாக மனுப்பண்ணியவர்களில் வெறும் 10 சத விகிதத்தினரே குடியுரிமை பெற முடிந்தது; 90 சத விகிதமான மனுக்களும் நிராகரிக்கப்பட்டதற்கான காரணம் அம் மனுப்பத்திரங்களில் தெரிவித்த தகைமை விபரங்கள் சரியற்றவை அல்லது போதாதவை என்பதுவல்ல; எழுத்து வாசனையறிவற்ற தோட்டத் தொழிலாளிகள் அவ்விபரங்களை மனுப்பத்திரங்களில் நிரப்பிய நுண்முறைகள் சரியற்றவை என்ற விதண்டாவாதமேயாகும்.

இலங்கைக் குடியுரிமைச் சட்டம், இந்திய பாகிஸ்தானியர் குடியுரிமைச் சட்டம் ஆகிய இரு சட்டங்களையும் நிறைவேற்றி மலைநாட்டுத் தமிழர்களின் குடியுரிமையைப் பிடுங்கிய பின் அரசாங்கம் வாக்குரிமைச் சட்டத்தை மாற்றியமைத்தது. குடியுரிமை உள்ளவர்களுக்கு மாத்திரமே வாக்குரிமை என்று கையை விரித்தது!

இந்தத் தந்திரத்தின் விளைவாக மலைநாட்டுத் தமிழர் வாக்குரிமை இழந்தார்கள் சுதந்திரத்தின் பின் கூடிய முதற் பாராளுமன்றத்துக்கு 8 பிரதிநிதிகளையனுப்பிய மலைநாட்டுத் தமிழ் மக்கள் 1952ல்நிகழ்ந்த இரண்டாம் பொதுத் தேர்த்தலிலும், பின்னர் 1956 லும் அதன் பின்னர் 1960 லும், 10 இலட்சம் எண்ணிக்கை கொண்ட தமக்கு ஒரு தமிழ்ப் பிரதிநிதியைத் தானும் தெரிந்தனுப்ப முடியவில்லை.

#### சிங்களவர்களுக்கு மேலதிகப் பிரதிநிதித்துவம்

இந்த விதத்தில் பாராளுமன்றத்திலிருந்த மொத்த உறுப்பினர் எண்ணிக்கையிலே தமிழ்ப் பிரதிநிதிகளின் விதம் வீழ்ந்தது; அதாவது சிங்களப் பிரதிநிதிகளின் வீதம் அதிகரித்தது.

தமிழ்ப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் மறைமுகமான வழியில் சிங்களப் பிரதிநிதிகளின் விதத்தை அதிகரிக்கச் செய்த அரசாங்கம் ஒரு கொடிய உபாயத்தால் சிங்களப் பிரதிநிதிகளின் வீதத்தை நேர்முக வழி ஒன்றின் மூலமும் மேலும் அதிகரிக்கச் செய்தது. அதாவது ஒவ்வொரு மாகாணத்துக்கும் எத்தனை தொகுதிகள் ஒதுக்குவது என்பதை வாக்காளர் எண்ணிக்கை என்ற நியாயமான அடிப்படையில் நிர்ணயிக்காது அவ்வவ் மாகாணங்களிலுள்ள (வாக்குரிமை பிடுங்கப்பட்டவர்களும் உட்பட்ட) மக்கள் எண்ணிக்கை அடிப்படையில் நிர்ணயித்தது.

முதலாவது பாராளுமன்றத்தில் இருந்த தமிழ்ப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் எத்தனையைப் பிடுங்கினார்களோ அத்தனை தமிழ்ப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையையும் சிங்களவர்கட்குக் கிடைக்க வழி அமைத்தார்கள். இவ்விதமாகப் பாராளுமன்றத்திலிருந்த முழு அங்கத்துவத்திலும், தமிழ்ப் பிரதிநிதிகளின் விகிதம் இரட்டித்த முறையில் வீழ்ச்சியடைந்தது.

#### தமிழ் பேசும் மக்களின் பலம் ஒடிந்தது

மத்திய மாகாணத்தில் இதற்கு ஓர் உதாரணம் பார்ப்போம். கடைசியாக நிகழ்ந்த குடிசன மதிப்பீட்டின்படி இம் மாகாணத்தில் 15,22,600 மக்கள் வசிக்கிறார்கள். இவர்களில் 5,21,900 மக்கள் குடியுரிமை பிடுங்கப்பட்டவர்கள். எனவே வாக்குரிமை அற்றவர்கள். வாக்குரிமை (அதாவது குடியுரிமை) உள்ளவர்கள் எண்ணிக்கை 10,00,700.

75,000 மக்களுக்கு ஒரு பிரதிநிதி வீதம் 21 பிரதிநிதிகளும் ஒவ்வொரு தொகுதியின் பரப்பு அடிப்படையில் வழங்கப்படும் பிரதிநிதித்துவக் கனதி காரணமாக மேலும் 2 பிரதிநிதிகளாகவும் மொத்தம் 23 பிரதிநிதிகள் இருந்தார்கள். ஆனால் 75,000 மக்கள் என்பதற்குப் பதிலாக 75,000 வாக்காளர்களுக்கே ஒரு பிரதிநிதி என்று விதித்திருந்தால் மத்திய மாகாணத்துக்கு $10,00,700 \div 75,000 =$ 13 பிரதிநிதிகளும் தொகுதிப் பரப்பு அடிப்படையில் 2 பிரதிநிதிகளுமாக மொத்தம் 15 பிரதிநிதிகளே கிடைத்திருப்பார்கள்.

ஆனால் 5,21,900 (வாக்குரிமை பிடுங்கப்பட்ட) தமிழ் மக்களையும் எண்ணிக்கையில் சேர்த்துக்கொண்ட மோசடியின் விளைவாக மத்திய மாகாணத்துக்கு 8 மேலதிகப் பிரதிநிதிகள் கிடைத்தார்கள்.

இதேபோல் ஊவா மாகாணமும் சப்பிரகமுவா மாகாணமும் ஒவ்வொன்றும் இரண்டு பிரதிநிதிகள் விதம் 4 மேலதிகச் சிங்களப் பிரதிநிதிகளைப் பெற்றன!

மத்திய, ஊவா, சப்பிரகமுவாமாகாணங்களிலுள்ள இலட்சக்கணக்கான மலைநாட்டுத் தமிழர்களின் வாக்குரிமையைப் பிடுங்கிய போதிலும் சிங்களப் பிரதிநிதிகளின் தொகையை நிர்ணயிப்பதில், தமிழ் பேசும் இனத்துக்குப் படுபாதகமாக மலைநாட்டுத் தமிழர்களின் எண்ணிக்கையைக் கணக்கிற் சேர்த்துக் கொண்டதால் 12 சிங்களப் பிரதிநிதிகள் மேலதிகமாகப் பாராளுமன்றத்துக்கு வர முடிந்தது.

இம் மலைநாட்டு மாகாணங்களிலுள்ள தமிழ்பேசும் மக்களின் வாக்குரிமை அபகரிக்கப்படாதிருந்தால் அவர்கள் தம் பிரதிநிதிகள் சுமார் 12 பேரைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பியிருப்பார்கள். அது தானில்லாது, அவர்களுக்கு வாக்குரிமையுமில்லாது பிரதிநிதிகளையும் தெரிந்தெடுக்க முடியாவிட்டாலும் கூட இப் 12 மேலதிகத் தொகுதிகளையும் சிங்களப்பிரதிநிதிகளையே தெரிவு செய்யும் இம் மாகாணங்களுக்கு ஒதுக்கியது பெரும் அநியாயம்.

குடியுரிமை, வாக்குரிமை, சிங்கள தமிழ்ப் பிரதிநிதிகளிடையே பாராளுமன்றத்திலுள்ள விகிதாசார மாற்றங்கள் ஆகியவை பற்றி நான் இங்கு வற்புறுத்திக் கூறியதற்குக் காரணம் ஒன்று உண்டு. மொழித் தகராறு, இந்நாட்டிலேற்பட்ட இனவாரித் தொல்லைகள் ஆகிய எல்லாவற்றிற்கும் இக் குடியுரிமைச் சட்டங்களே மூலகாரணமாய் அமைந்தன! 1948ல் மலைநாட்டுத் தமிழ் மக்களின் வாக்குரிமை அபகரிக்கப்படாதிருந்தால் 1956ல் திரு. பண்டாரநாயக்கா தமது ஆட்சி மொழிச் சட்டத்தை ஆதரிக்கப் போதுமான சிங்கள ஆதரவாளர்களைத் திரட்டியிருக்க முடியாது.

மேலே விபரித்த வகையில் வகுப்புவாதப் பெரும்பான்மை ஆதரவால் துணிவு பெற்ற திரு. பண்டாரநாயக்கா 30% தமிழ்பேசும் மக்களைக் கொண்ட இலங்கைத் திருநாட்டில் சிங்களத்தை மாத்திரமே ஆட்சி மொழியாக்கும் தீவிர வகுப்புவாதச் சட்டத்தை இயற்றினார். வருடம் 1956!

#### டி. எஸ். சேனநாயக்காவின் திட்டம் தொடருகிறது

சிங்களம் மாத்திரமே என்ற கொள்கை தமிழின் குரல்வளையை நசித்து அழித்துவிடப் போகின்றது. இக் கொள்கையின் கோரப் பிடிகளின் அழுத்தத்தை நாம் நன்ருக உணரத் தொடங்கியுள்ளோம்.

ஒரு வருட இறுதி எச்சரிக்கை முடிவில் எமது கட்சி 1957ம் ஆண்டு ஒரு சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பிக்குமெனத் தீர்மானித்த போது அந்நாட் பிரதமர் திரு. பண்டாரநாயக்கா எம்மைப் பேச்சுவார்த்தைக் கழைத்து 1957 ஜுலை 26ல் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார். மொழியைப் பற்றி அவ்வொப்பந்தம் பின்வருமாறு கூறிற்று:

'தமிழை ஒரு தேசிய சிறுபான்மையினரதுமொழியென்று ஒத்துக்கொள்ளும் வகையில் உத்தேச சட்டம் அமையவேண்டுமென பேச்சுவார்த்தையின் போது ஒப்புக்கொள்ளப்பட்டது. அத்தோடு பிரதமரின் நாலு அம்சத் திட்டத்தின் கீழ் ஆட்சிமொழி அந்தஸ்தைப் பாதிக்காத வகையில் தமிழை வட, கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழியாகக் கொள்ளும் ஏற்பாடுகளும் இருக்க வேண்டும்; இம் மாகாணங்களிலிருக்கக் கூடிய தமிழ் தெரியாத சிறுபான்மையினருக்குத் தகுந்த ஏற்பாடுகளையும் செய்து கொள்ளலாம்.'

#### ஒப்பந்தம் கிழிந்தது

1958 மார்ச் மாதம் பெளத்த பிக்குகளால் தம் வீட்டில் சுற்றி வளைக்கப்பட்ட பிரதமர் பண்டாரநாயக்கா இவ்வொப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார். இதையடுத்து 1958 மே மாத முடிவில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே கலவரங்கள் ஏற்பட்டன. சிங்களப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்கள் இக் கலகத்தில் பெருமளவித் பலியானார்கள். பிரதமர் பண்டாரநாயக்கா நாட்டில் அந்தர நிலை (அவசர காலம்) ஏற்பட்டிருப்பதாகப் பிரகடனம் செய்தார். எமது கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் கட்சிப் பிரமுகர்களையும் தடுப்புக் காவலில் வைத்தார். இத்தகைய கடின நடவடிக்கை எம்மீது எடுப்பதற்கு நாம் யாரையும் ஆத்திரமூட்டவுமில்லை; இந் நடவடிக்கைக்கு எதுவித நியாயமுமிருக்கவில்லை. இருந்தும் இந் நடவடிக்கையையிட்டு நாம் அன்றும் ஓலமிடவில்லை. இன்று தானும் ஓலமிடவில்லை. எம்மைத் தடுப்புக்காவலில் வைத்த அதே வருடத்தில் பிரதமர் பண்டாரநாயக்கா — மனச்சாட்சியின் அமைதியின்மை காரணமாய் இருந்திருக்கலாம்—தமிழ் மொழி விசேட சரத்துக்கள் மசோதாவை

(13-ம் பக்கம் பார்க்க)





ராஜபீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும் எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல் ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி

கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1964 செப்டம்பர் மாதம் 13-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தெலிபோன் எண் : 3411 த. பெ. 1183

# மன்னாரில் மந்திரியின் பிரச்சாரம்

மன்னார் பகுதிக்குச் சென்ற சுகாதார அமைச்சர் ஜனாப் பதியுதீன் மாமூத் அங்கு ஒரு 'புரட்சியை' யே நடத்திவிட்டாராம். உண்மைக்குப் புறம்பான விடயங்களை நாகூசாது கட்டவிழ்த்து விட அசாத்திய துணிச்சலொன்றும் தேவையில்லை. மன்னார்த் தொகுதி மக்களை மயக்குவதுதான் இப் பிரசாரத்தின் நோக்கமென்றால், அதில் ஏமாந்துபோவது மந்திரியே தவிர மக்களல்ல.

இந்த அரசாங்கம் தமிழர்—சிங்களவர் என்ற பாகுபாடின்றி செயல்பட்டு வருவதாகவும் வகுப்பு வேற்றுமை காட்டும் எல்லாவித நடவடிக்கைகளையும் ஒழித்துக்கட்ட அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என்றும் சுகாதார அமைச்சர் மன்னார் மக்களிடம் கூறினாராம். மந்திரியாயிருந்தாலும் மனச்சாட்சிக்கு மாறாக மனதாரப் பொய் சொல்லுவது மன்னிக்கமுடியாத குற்றம். மன்னார் மக்கள் மந்திரியின் இப் பேச்சைக்கேட்டு மனத்துள் சிரித்திருப்பார்களென்பதில் ஐயமில்லை.

திரு. டி. எஸ். சேனநாயக்கா ஆட்சிகாலம் தொட்டு இன்றுவரை சிங்கள அரசாங்கம் தமிழ்பேசும் மக்களுக்கு பாகுபாடு காட்டி வந்துள்ளதென்பதற்கு அரசாங்கத்தின் ஒவ்வொரு நடவடிக்கையும் சாட்சியாகும். இனவொழிப்புக்குத் திட்டமிட்டவர் பெரிய சேனநாயக்கா என்பதும் அதனைத் தீவிரமாக அமுல்நடத்தியவர் காலஞ் சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா என்பதும் உலகறிந்த விஷயம். தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு அவர் கிளப்பிவிட்ட வகுப்புவாதப் பூதம் 1958ல் தமிழ்பேசும் மக்களுக்கு இழைத்த இன்னல்களை இங்கு நாம் விளக்கிக்கூற வேண்டியதில்லை.

அந்த வகுப்புவாதம் இன்றும் தலைவிரித்தாடுகிறது. கணவரின் வகுப்புவாதக் கொள்கையை அப்பட்டமாக அமுல்நடத்துகிறார் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா. கூட்டரசாங்கம் ஏற்பட்டபின்னர் இனவொழிப்பு நடவடிக்கைகள் தளர்த்தப்படவுமில்லை. கைவிடப்படவுமில்லை.

தமிழ்மொழியை அழிப்பதற்கும், தமிழ்பேசும் மக்களின் தொண்டைக்குள் சிங்களத்தைத் திணிப்பதற்கும், தமிழ்பேசும் ஊழியர்களை வேலையிழக்கச் செய்வதற்கும், மலையகத் தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகளை அபகரிப்பதற்கும், தமிழ்பேசும் மக்களின் காணிகளைப் பிடுங்கி, தமிழ்மண்ணை ஆக்கிரமிப்பதற்கும் சிங்கள அரசாங்கம் எடுத்துவந்த, வருகிற நடவடிக்கைகளுக்கு இதே ஜனாப் மாமூதும் உடந்தையாக இருந்தவரே! இதனை அவர் மறுக்க முடியுமா? ஆதிமுதல் அந்தம்வரை வகுப்பு வேற்றுமையையே உரமிட்டு வளர்த்துவந்த ஒரு சிங்கள ஏகாதிபத்திய அரசாங்கம் வகுப்பு வேற்றுமையை ஒழித்துக்கட்ட உறுதிபூண்டுள்ளது என்று பச்சை பச்சையாகப் பொய் சொல்லுவது ஒரு அமைச்சருக்கு—அதுவும் ஒரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த அமைச்சருக்கு அழகல்ல.

'சிங்கள மகாசபை' அமைத்த காலந்தொட்டு வகுப்புவாதத்தில் ஊறிய திரு. பண்டாரநாயக்காவைத் தமது குருநாதராகக் கொண்ட ஒரு அமைச்சர் வகுப்புவேற்றுமையைக் கிளப்பிவிட்டு, அதே வகுப்பு வேற்றுமையில் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் சிங்கள அரசாங்கத்துக்குச் சப்பைக் கட்டுகட்டுவது விந்தையன்று.

'பிரதமர் ஒரு சட்டம் செய்யப்போகிறார். அது வந்தால் தமிழ் பேசும் மக்களுக்கு நியாயம் கிடைத்துவிடும்' என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

இத்தகைய வெறும் போலிவாக்குறுதிகளில் மக்கள் மயங்கிய காலம் மலையேறிவிட்டது. திருமதி பண்டாரநாயக்காவும் அவரது கணவரும் வாக்குறுதிகளையும் ஒப்பந்தங்களையும் மீறினவர்களேயன்றி, அவைகளைக் காப்பாற்றினவர்களல்ல என்ற கலப்பற்ற உண்மையை மட்டும் ஜனாப் மாமூதுக்குக் கூறிவைக்க விரும்புகின்றோம். இத்தகையோர் மீதோ அவர்களின் இனவொழிப்பு நடவடிக்கைகளை ஆதரித்துப் பிரசாரம் செய்பவர்கள் மீதோ தமிழ் பேசும் மக்கள் என்றுமே நம்பிக்கை வைக்க மாட்டார்கள்.

மந்திரி சபையில் தமிழர் பிரதிநிதி ஒருவர் இல்லாதிருப்பது பெருங் குறையென்று கூறியுள்ளார் சுகாதார அமைச்சர்.

தேசிய அரசாங்கம் என்று பிரசாரம் செய்வதற்கும் தமிழ் மக்களின் ஆதரவையும் அரசாங்கம் பெற்றுளது என்று அயல் நாடுகளில் பிரசாரம் செய்வதற்கு மந்திரி சபையில் ஒரு தமிழர் இல்லாதிருப்பது அவர்களுக்குப் பெருங் குறையே.

அன்று எட்டப்பர்கள் சேனநாயக்கா மந்திரி சபையில் அச்சமின்றிச் சேர்ந்தனர். காரணம், தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்பு அன்று சரியாவடி உருவாகாதிருந்ததுதான். ஆனால் இன்றைய நிலையோ முற்றிலும் வேறு. மக்கள் எதிர்ப்பு மலைபோல்வளர்ந்திருப்பதால் இன்று அரசாங்கத்தில் சேர எந்த எட்டப்பனுக்கும் துணிச்சல் ஏற்படாது. இந்த நிலை ஜனாப் மாமூதுக்குமட்டுமின்றி, அந்த எட்டப்பர்களுக்கே பெருங் குறைதான்.

# உள்ளூர் அலுவலில் தலையிட வெளியூரவருக்கு ஏதுரிமை?

இந்நாட்டைச் சுரண்டி வாழும் பிறநாட்டவர் வெளியேற்றப்படலாம். இங்கேயே பிறந்து வளர்ந்து, இங்கேயே மடியப்போகும் இந்நாட்டுப் பிரஜைகளை யிட்டு பேச்சு வார்த்தை நடாத்தவோ, நடவடிக்கை எடுக்கவோ வேறோர் நாட்டின் அமைச்சருக்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது. இந்திய வெளிநாட்டமைச்சர் சுவரண்சிங் இங்குள்ள மலை நாட்டுத் தமிழ் தொழிலாளர்களை யிட்டு எதுவுமேகூற அருகதையற்றவர். இங்குள்ள தனது நாட்டுக் குடி மகனைப்பற்றி எது வேண்டுமானாலும் பேசட்டும்—நடவடிக்கை எடுக்கட்டும்.

'இந்த நாட்டின் பொருளாதாரத்தைச் சுரண்டி பிறநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் எவனையும் உடனடியாக ஓட்டிக் கலைத்து விடுங்கள். ஆனால் இந் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக ரப்பர்மரத்தைச் சுரண்டும் உழைப்பாளியை ஏன் அனுப்பவேண்டும்? இந் நாட்டின் செல்வத்தைக் கிள்ளி வேற்று நாட்டில் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கும் எவனையும் இங்கு வைத்திருக்காதீர்கள். ஆனால் இங்குள்ள செல்வச் செழிப்பிற்காக தேயிலைக் கொழுந்தைக் கிள்ளுபவனை இங்கு வைத்திருக்காமல் எங்கே அனுப்புவது?'

தமிழகத்திலிருந்து இற்றைக்குப் பலவருடங்களுக்கு முன்னர் வருகை தந்திருந்த ஒரு அரசியல் தலைவரிடம் சுரண்டுபவர்கள்பற்றி கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இலங்கை-இந்தியர் பிரச்சினை என்று ஒன்றை உருவாக்கி, இன்றுவரை தீர்க்க முடியாத பிரச்சினையாக்கி வைத்து வேடிக்கை காட்டுகின்றனர். இப்பிரச்சினை இதுவரை பிரச்சினையாகவே நீடித்து நிற்பதற்கு வழி வகுத்தவர்கள்எல்லோருமே கண்டிக்கத்தக்கவர்களே!

ஒரு நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையில் வேறோர் நாடு தலையிடலாகாது என்பது சர்வதேச நியதி. இந் நாட்டில் பிறந்து இந்நாட்டின் சுபீட்சத்துக்காகவே வாழ்ந்துவரும் இலட்சக் கணக்கான தமிழ்தோட்டத் தொழிலாள மக்களின் பிரச்சினை நிச்சயமாக இந்நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினை. இந்தப் பிரச்சினையில் தலையிட இந்திய அரசுக்கு எதுவிதமான பாத்தியதையும் கிடையாது.

இந்திய வெளிநாட்டு அமைச்சர் சுவரண் சிங் இங்கு வந்துள்ளார். இங்குள்ள இந்திய மக்களின் நலனையிட்டு மட்டுமே அவர் ஏதாவது பேச்சுவார்த்தை நடத்த உரிமையும் பாத்தியதையும் உடையவர்.

வர்த்தகர்களாகவும், தொழிலாளர்களாகவும், வியாபாரிகளாகவும் இந் நாட்டில் உலவும் இந்தியர்கள் என்பவர்களையிட்டே திரு. சுவரண் சிங் ஏதாவதுபேச்சுவார்த்தை நடத்தலாம். இந் நாட்டின் பொருளாதாரத்தைச் சுரண்டும் நோக்குடனும், செல்வத்தைக் கிள்ளும் நோக்குடனும் இங்கு இந்தியர்கள் வாழ்ந்து வந்தால், அந்த இந்திய மக்களை மட்டுமே அவர் கணக்கிடட்டும். ஆனால் இந் நாட்டின் பொருள்வளர்ச்சிக்காக தன் பொன்னன உடலையும், உழைப்பையும், உயிரையுமே நல்கிவிட்டு உரிமைகளற்ற ஊமைகளாகவாடும் இந்த நாட்டு பிரஜைகளையிட்டு திரு. சுவரண் சிங் எதுவிதமான கருத்தும் வெளியிட அருகதையற்றவர் என்பதை வலியுறுத்துகிறோம்.

*சுதந்திரன் அரசியல் நிருபர்*

அரசியல் சூதாட்டக்காரர்கள், ஏய்த்துப் பிழைப்பவர்கள், காட்டிக் கொடுப்பவர்கள் முதலியோரின் எடுப்பார் கைப் பிள்ளையாகி ஏமாந்துபோன தமிழன் இந்த நாட்டவன். அவன் பிறந்ததும், இன்று வாழ்ந்து நாளை இறக்கப் போவதும் இந்த மண்ணில். அவன் சுரண்டுபவனல்ல—சுரண்டப் படுகிறவன். ஆகவே அவனுடைய வீழ்ச்சியையோ, வாழ்க்கையையோ ஏற்றத்தையோ இறக்கத்தையோ இட்டு அயல்நாட்டு மந்திரி ஒருவருக்கு அக்கறை பிறக்க நியாயம் எதுவும இல்லை. இங்குள்ள டி. ஆர். பி. இந்தியர்களை மட்டும் தம்முடன் கப்பலேற்றிக் கொண்டு போவதானால் போகட்டும்.

## கிழக்கு நோக்கும் 'வீரர்கள்'

கள்ளக் குடியேற்றத்தைத் தடுப்பதற்கு என்ற போர்வையில் இராணுவம் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. யாழ்ப்பாணத்திலும், மன்னாரிலும், திருகோணமலையைச் சேர்ந்த வெள்ளமணல் போன்ற இடங்களிலும் இந்த இராணுவ'வீரர்கள்' பொது மக்களுக்கு விளைவித்த கொடூரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இந்த இராணுவ 'வீரர்கள்' புரிந்த அடாத செயல்களையிட்டுத் தமிழ் பேசும் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் எத்தனையோ முறைகள் கண்டித்துள்ளனர். சில உள்ளூராட்சி மன்றங்களும் கண்டனத் தீர்மானங்களை வெளியிட்டன. இருந்தும் 'செவிடன் காதில ஊதிய சங்குக்கு ஒப்பாக இராணுவ நடவடிக்கைகள் மெனமேலும் விஸ்தரிக்கப்படுகின்றன.

கிழக்கு மாகாணத்தில் கள்ளக் குடியேற்றம் உயர்ந்துள்ளமையினால், அங்கும இராணுவவீரர்களை அனுப்பியாக வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு செய்துள்ள முடிவு சமாதானம் விரும்பும் தமிழ் பேசும் பொது மக்களைச் சஞ்சலத்துள், ஆழ்த்தி இருக்கிறது.

கள்ளக் குடியேற்றத் தடுப்பு நடவடிக்கைகளுக்காக மேலும் 7 லட்சம் ரூபாய்களைச் செலவிடவும் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. ஆனால் சென்ற வாரம் யாழ்ப்பாணம் கச்சேரியில் நடந்த இராணுவ, பொலிஸ் தலைவர்களின் மாநாடொன்றில் கள்ளக் குடியேற்றம் வெகுவாகக் குறைந்துவிட்டது என்ற இரகசியம் அம்பலப்படுத்தப்பட்டதாம். அப்படியிருந்தும் ஏன் இந்த தீவிர ஏற்பாடுகள் என்று அரசியல் வட்டாரங்களில் கேட்கப்படுகிறது.

உத்தியோகபூர்வமான முறையில் கள்ளக் குடியேற்றக்காரர்களின் புள்ளி விபரங்கள் பகிரங்கப்படுத்தப் படுவதில்லை. ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையுடையோர் கைது செய்யப்பட்டனர் என்று மட்டும் கூறிவிடுகின்றனர். 'கள்ளத்தோணி' என்று கைது செய்யப்படுபவர் எல்லோரும் உண்மையான 'கள்ளத்தோணிகள்' ஆகமாட்டார்கள். தமிழ் பேசும் மக்களில் பொலிசாருக்கு எவர்மேல் சந்தேகம் தென்படுகிறதோ, அவர் உடன் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்படுகிறார். விசாரணையின் முடிவில், இப்படிக் கைதானோர் ஏறத்தாழ 90 வீதமானோர் நிரபராதிகள் என்பது கண்டுபிடிக்கப்படுகிறது.

## அடக்குமுறைக்கு அடிகோலல்

இந்நாட்டில் வாழும் ஒரு சாராரை ஆயுதபலத்தால் அடக்கி ஆள நினைக்கும் ஆதிக்க வெறி பிடித்த அரசியலாரின் சூழ்ச்சிகளை அம்பலப்படுத்த தமிழ் பேசும் மக்கள் தயாராக வேண்டும்.

இதுகாலவரை 'கள்ளக் குடியேற்றக்காரர்கள்' என்று கைது செய்யப்பட்டு, நிருபிக்கப்பட்டு, நாடுகடத்தப்பட்ட நபர்கள் எத்தனை பேர் என்பதை ஆதாரபூர்வமாகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி தமிழ் பேசும் மக்கள் தலைவர்கள் உடனடியாகக் கேட்கவேண்டும்.

பொது மக்களின் வரிப் பணத்தை, வரிகட்டும் ஒரு சாராரை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தும் கொடுமைக்குப் பாழடிக்கும் முயற்சியை இந்தப் பாராளுமன்றம் செய்ய வேண்டியது அவசிய மாகும்.

## அடிப்படைப் பிரச்சினை—?

நாலனி ஆதிக்க காலத்தில் வெள்ளைப் பிரபுக்களுக்கு வெஞ்சாமரை வீசிப் பழக்கப்பட்டவர்களுக்கு, எந்தப் பிரச்சினையையும் அடிமைத் தனத்தின் அடிப்படையில் தான் அணுகமுடியும். சொந்தப்பிரச்சினை முதற்கொண்டு பொதுப்பிரச்சினை வரை

(9-ம் பக்கம் பார்க்க)

அரசாங்கம் முஸ்லிம் மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்திருப்பதாகக் கதை அளக்கிறார் அமைச்சர். முஸ்லிம் மக்கள் இன்று ஒரு அடி நிலம் கூட வாங்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருப்பது இந்த அமைச்சரின் கண்ணில் படவில்லையா? இதுதான் அரசாங்கம் முஸ்லிம் மக்களுக்குச் செய்த நன்மையா? இந்தக் காணிச் சட்டத்தை நிறைவேற்றியது இவர் அமைச்சர் பதவி வகிக்கும் அரசாங்கம் தானே? எந்த மந்திரி சபைக் கூட்டத்திலாவது இச்சட்டத்தை எதிர்த்துப் போராடினாரா என்று ஜனாப் மாமூதிடம் முஸ்லிம் பெருமக்கள் கேட்கின்றனர். அதற்கு அவர் பதில் கூறட்டும்!

அரசாங்கம் முதலில் தனது சிங்கள வகுப்புவாத வெறியைக் கைவிடட்டுமென்றி இத்தகைய பித்தலாட்டப் பிரசாரங்களால் அவர்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை என்பதைச் சுகாதார அமைச்சர் உணர வேண்டும். காரணம் இன்றைய தமிழ் பேசும் இனம் விழிப் [illegible] இருப்பதே. அவர்களின் உரிமைகள் அத்தனையும் தட்டுத் தடங்கலின்றி வழங்கப்பட வேண்டும். வெறும் பிரசாரங்களாலும் போலி வாக்குறுதிகளாலும் அவர்களை ஏமாற்றிவிட முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணேசர் ஆலயப் பகுதியைப் புனித நகராக்கக் கிளர்ச்சி

## அரசாங்க அதிபரிடம் இந்து சமய ஸ்தாபனங்களின் வற்புறுத்து

"திருமலையில் கோணேசர் ஆலயத்தைச் சுற்றிய பிரதேசத்தைப் புனித நகராகப் பிரகடனப்படுத்த வேண்டும். இவ்வாலயத்தில் பௌத்த, சைவ மக்களும் எந்தவித வேறுபாடு இல்லாமல் கோணேசப் பெருமானை வழிபட்டு வருகின்றார்கள். மேலும் கிறிஸ்தவ, முஸ்லிம் மக்களும் இவ் வாலயத்தை பக்தியுடன் வழிபடுகின்றார்கள். ஆதிகாலத்தில் தமிழ் சிங்கள மன்னர்களின் ஆட்சியின் போது பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நெல் வயல்களும், திரவியங்களும் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டமை சரித்திரச் சான்றுகும். இலங்கை சுதந்திரம் பெற்றபின்பு இவ்வாலயத்தையும் சுற்றுடலையும் புனித நகராகப் பிரகடனப்படுத்தாதிருப்பது வேதனைப் படக்கூடிய விடயம். ஆகவே அரசாங்கம் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்".

இவ்வாறு சாம்பல்தீவு கிராம சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம் கூறுகிறது.

திருமலையிலுள்ள சகல இந்து சமய ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் இவ்வாரம் திருமலை அரசாங்க அதிபரிடம் ஒரு மகஜரைச் சமர்ப்பித்து கோணேசராலயம் குடிகொண்டுள்ள பிரடெரிக் கோட்டையைப் புனித நகராகப் பிரகடனப் படுத்துமாறுவற்புறுத்தினர்.

இது பற்றித் தன்னுலான சகலதும் செய்வதாகவும், நல்ல முடிவு செய்யுமாறு அரசாங்கத்துக்குத் தான் சிபார்சு செய்யப் போவதாகவும் அரசாங்க அதிபர் கூறினுரென அறியப்படுகிறது. பிரடெரிக் கோட்டைக்குள் காலியாகும் கட்டடங்கள் வேறு எச்சமயத்தவருக்கும் கொடுக்கப்படமாட்டாவென அவர் உறுதி கூறினுராம்.

திரு. மாணிக்கராசா எம். பி., டாக்டர் சித்திரவேலு, திரு. ஆர். சம்பந்தன், திரு. நேமிநாதன் ஆகியோருட்பட சுமார் 50 பேர் இத்தூது கோஷ்டியில் கலந்து கொண்டனர்.

## 'தினகரன்'...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கென்று தனியொரு தெரிவுக் குழு அமைக்கப்படும். அக்குழு தேர்ந்தெடுக்கும் வேட்பாளர்களின் பெயரை மீண்டும் செயற்குழுவிற்கு சமர்ப்பித்து, செயற்குழுவின் அங்கிகாரம் பெற்ற பின்னரே கட்சி நியமனம் வழங்கும். இந்த ஒழுங்கு முறையைத் தெரிந்து கொள்ளாது பத்திரிகைகள் செய்தி வெளியிடுவது வருந்தத்தக்கது.

குறிப்பு:

தமிழரசுக் கட்சியில் வேட்பாளர் நியமனம் பெறுபவர்கள் கட்சியில் ஐந்து ஆண்டுகள் இயங்கும் உறுப்பினர்களாக இருந்திருக்க வேண்டுமென்று கட்சியின் கொழும்புக்கிளை கட்சி மேலிடத்துக்கு சில காலத்துக்கு முன் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளது. மேலும் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பதே ஒரு தியாகம். மாற்றுக் கட்சியினர் நினைப்பதைப் போன்று அது உயர்ந்த பதவியல்ல. கட்சியினரும் அப்பதவியை அப்படிக் கருதவில்லை.

எனவே, பாராளுமன்ற பதவியை மையமாக வைத்து செய்திகளைத் திருத்து வெளியிடும் பத்திரிகைகள் உண்மையை உணர்ந்த பின்னர் இத்தகைய அபாண்டமான ஆதாரமற்ற செய்திகளை வெளியிடாது இருப்பார்கள் என்று நம்புகிறோம்.

ஆ—ர்

## உள்ளூர் அலுவலில்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இதே ரீதியில்தான் அவர்கள் செயலாற்றுவார்கள் என்பதற்கு, திருக்கேதீச்சரத்தில் மந்திரி பதியுத்தீன் மஹ்மூதுக்கு வரவேற்பளித்த சேர் கந்தையா வைத்தியநாதனின் கூற்று சான்று பகருகிறது.

சிறுபான்மை இனத்தோரின் உரிமைகளைப் பிடுங்குவதில் தீவிரமாக முயற்சி எடுத்துவரும் அரசாங்கத்தின் பிரதிநிதியான மந்திரிக்கு வரவேற்பளித்திருக்கிறார் என்பதால்மட்டுமல்ல. அவ்வேளை அவராற்றிய சொற்பொழிவு, தன்மானமுள்ள தமிழ்பேசும் மக்களின் இதயங்களில், வெந்த புண்ணில் வேலைச் சொருகுவதற்கு ஒப்பாகவிருக்கிறது.

தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகள் என்ன என்பதை அமைச்சர்கள் நேரே கண்டு அறிந்துதான் ஏதாவது பரிகாரம் தேடவேண்டுமா? தாங்கள் பேசும் மொழிக்கு உரிய இடம் கிடைக்காமல் தவிக்கும் தமிழ்பேசும் மக்களின் நிலையினை அமைச்சர்கள் அறிய மாட்டார்களா?

சிறுபான்மை இனத்தவராகப் பிறந்த குற்றத்துக்காக உரிமைகளை இழந்து நடைப்பிணமாக நாளும் நலிந்து வாடும் மக்களை கண்ணுரக் கண்டுதானு மந்திரிமார் உரிமைகள் வழங்க வேண்டும்?

அடிப்படைப் பிரச்சினைகளையும், அத்தியாவசியத் தேவைகளையும் அமைச்சர்கள் நேரடியாகக் கண்டறிந்து பிரச்சினைகளுக்கு விடிவுகாண அமைச்சர்கள் தமிழ்ப் பிரதேசங்களுக்கு வரவேண்டும்என்று சேர் கந்தையா வைத்தியநாதன் கருத்து வெளியிட்டுள்ளார். மந்திரி பதியுத்தீன், அமைச்சர் அவையில் ஒரு தமிழராவது இல்லையே என்று வாய்விட்டுக்கூறியமைக்கும் சேர். கந்தையாவின் கூற்றுக்கும் 'அடிப்படைப் பிரச்சினை' ஏதாவது இருக்குமோஎன்று பொதுமக்கள் ஐயுற ஆரம்பித்துவிட்டனர்.

## அரிசி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்திடம் கோட்டா பெற்று அரிசி குத்திக் கொடுக்கும் தமிழ் பேசும் பிரதேசங்களில் உள்ள சிறு ஆலை முதலாளிகளின் வருமானத்தைப் பிடுங்கும் அந்தரங்க நோக்கம் இத்திட்டத்தில் இருப்பதை விடயமறிந்தோர் சுட்டிக் காட்டுகின்றனர். அது மட்டுமல்லாமல் பல்லாயிரக்கணக்கான தமிழ் பேசும் தொழிலாளர்களும் இத் திட்டத்தால் வெகுவாகப் பாதிக்கப்படுவர். வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள நகரங்களும் இத் திட்டத்தினுல் சிறப்புக் குன்றிவிடவும் கூடும்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் புராதன உறைவிடமாதலினுல், அப்பிரதேசங்களின் செல்வாக்கைக் குறைக்கவும் இங்கு வதியும் தமிழ் பேசும் மக்களின் வருமானத்தை அபகரிக்கவும் அரசாங்கம் கையாளும் அந்தரங்கத் திட்டங்களில் இதுவும் ஒன்றுகும் என்று ஒரு அரசியல் பிரமுகர் நமது நிருபரிடம் கூறினர்.

# என். எம். மின் பதவி பறிபோகுமா?

## பிரதமர் அனுப்பியுள்ள தந்தி

வெளிநாட்டில் இருக்கும் டாக்டர் என். எம். பெரேராவை விரைவில் இலங்கைக்குத்திரும்புமாறு திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தந்தி அனுப்பியிருப்பதாக விஷயம் தெரிந்த வட்டாரங்கள் கூறின. பத்திரிகை மசோதாவை எவ்வளவு விரைவாக பூரணமாக்க முடியுமோ, அவ்வளவு விரைவாக அதைப் பூர்த்திசெய்வதற்காக வேண்டியே இந்த அவசரத் தந்தியைப் பிரதமர் டாக்டர் என். எம். பெரேராவுக்கு அனுப்பியிருக்கக் கூடுமெனக் கூறப்படுகிறது.

கிரிதர ஆலை சம்பந்தமாக இலங்கை அரசியற் திட்டம் பிரிவு 13 (சி) யும் (டி) யும் இரண்டுக்கும் கீழ், டாக்டர் பெரேரா தன்னைப் பாதிக்குமாறு நடந்துகொண்டு விட்டார் என்று சிலர் கருதிய போதும், அரசாங்கத்துக்கு நெருங்கிய தொடர்புள்ள வட்டாரங்கள், தெரிந்தோ தெரியாமலோ டாக்டர் என். எம். பெரேரா அரசியற் திட்டத்தை; அத்து மீறியதாகத் தெரியவில்லை என்றே கருதுவதாக அறியப்படுகிறது.

அரசாங்கத்துடன் ஒரு உடன்பாட்டுக்கு அவர் வந்துள்ளாரேயன்றி, அவர் அரசாங்கத்துடன் ஒரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை என்று ஒரு பிரபல சட்ட வல்லுனர் கூறியுள்ளார்.

கிரிதர ஆலை விவகாரத்தில் பிரதமர் மிகவும் அக்கறையாகக் கவனம் செலுத்தி வருவதாகவும், அப்படி டாக்டர் என். எம். பெரேரா ஏதாவது சட்ட விரோதமாக நடந்திருந்தாரென நிரூபிக்கப்பட்டால், அவரை அவருடைய மந்திரி பதவியிலிருந்தும் ராஜிநுமா செய்யும்படி பிரதமர் கேட்டுக்கொள்வாரென்றும் கூறப்படுகிறது.

டாக்டர் என். எம். பெரேராவின் கள்ளுவரித் திட்டத்தையும் வாபஸ் வாங்கும்படி பிரதமர் அவரைக்கேட்பாரெனவும் அறியவருகிறது.

பாராளுமன்ற அங்கத்தவர் தூதுகோஷ்டியொன்றிடம், தாம் டாக்டர் என். எம். பெரேராவை கள்வரித் திட்டத்தை வாபஸ்பெறக் கேட்கப்போவதற்கு முக்கியமான ஒரு காரணம், டாக்டர் என். எம். ஒப்புக்கொண்டுள்ளதுபோல், இத் திட்டத்தினுல் அரசாங்கத்துக்குவருமானம் அவ்வளவு கிடையாது என்பதே யாகுமென்றும் பிரதமர் கூறியுள்ளாராம்.

ஆனல், அரசியல் அவதானிகளின் கருத்துப்படி, டாக்டர் என். எம். பெரேரா ராஜிநுமாச் செய்யவேண்டிய சூழ்நிலை உருவாகலாமெனக் கருதப்படுகிறது.

1962ம் ஆண்டில் அரிசி மான்யத்தில் வெட்டுவிழுமென்று திரு. பீலிக்ஸ் பண்டாரநாயக்கா தெரிவித்தபொழுது, அரசாங்கக் குழுவினரில் பெரும் பான்மையோர் அதை எதிர்த்ததால், திரு. பீலிக்ஸ் பதவியினின்றும் ராஜினுமா செய்தார். அது ஒரு முன்மாதிரியாக நிலைநாட்டப்பட்டு விட்டதென்றும், டாக்டரின் கள்வரித் திட்டம் தோல்வியடைந்தால், திரு. பீலிக்ஸைத் தொடர்ந்து, டாக்டரும் ராஜினுமாச் செய்ய வேண்டியிருக்குமென்றும் கருதப்படுகிறது.

ஆனலும், டாக்டர் என். எம். மின் திட்டம் வருமானம் கிடைப்பதற்கான நோக்கத்துடன் இயற்றப் [illegible] அவர் ராஜினுமாச் செய்ய வேண்டி வராது என்றும் சிலர் கருதுகின்றனர்.

## நினைவு தினம்

இலங்கைத் தமிழரசுக் கட்சிக் கொழும்புக் கிளையின் ஆதரவில் 16ம் திகதி புதன்கிழமை நடைபெறவிருந்த தலைவர்கள் நினைவு தினக் கூட்டம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளது. 16ம் திகதி நடைபெறுமென்று இப் பத்திரிகையின் 15ம் பக்கத்தில் வெளியாகியிருக்கும் செய்தி தவருகும்.

ஆ-ர்.


"நாங்கள் கிறேசன்ஸ் வேப்பர் கிறீம் உபயோகிக்கத் தொடங்கியதிலிருந்து, எனது பிள்ளைகள் தடிமன் காரணமாக ஒரு நாளாவது பாடசாலைக்குப் போகத் தவறியதில்லை"

திருமதி ஏ. எச்.




உங்கள் குழந்தையின் நன்மைக்காக எப்பொழுதும் கிறேசன்ஸ் வேப்பர் கிறீமையே கேட்டு வாங்குங்கள்.

எல்லா மருந்து கடைகளிலும், பல சரக்குக் கடைகளிலும் கிடைக்கும்.


### இலங்கைத் தொழிலாளர் கழகம் முதலாவது மாநாடு

## முக்கிய அறிவித்தல்

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் முதலாவது மாநாடு முன்னர் அறிவித்திருந்தபடி இம்மாதம் 19, 20ந் திகதிகளில் நடைபெருது என்பதை மிகுந்த வருத்தத்துடன் அறிவிக்க விரும்புகின்றேம். கழகத் தலைவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் அவர்களின் சுகவீனம் காரணமாகவே பின் போடப்படுகின்றது.

மாநாடு நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

செ. கலியபெருமாள்,
பொதுச் செயலாளர்.

117½, டிம்புல்ல வீதி,
அட்டன்.
8-9-64

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'அழகுள்ள ஒரு இளம் பெண் தனித்து வாழ முடியாதா? ஆனால் நான் இப்பொழுது அழகும், இளமையும் ......' - கதையும் முடிந்தது. அந்த உருவமும் கடலினுள் சென்று மறைந்து கொண்டிருந்தது.**

**இதற்கு யார் பொறுப்பாளி?**

# அறுவடை

சிறு கதை

பாண்டியூர் இராகி

'எங்கே போகிறாய்?'

'ஏன் கேட்கிறாய்!'

'இல்லை, சும்மாதான் கேட்டேன். நான் கேட்கக் கூடாதா?'

'நான் இவ்வுலகத்தை விட்டே போகப் போகிறேன். இதோ பார்! நான் இறந்து விட்டதாக ஒரு முழுக்குப் போட்டு விட்டு நிம்மதியாக உறங்கிக் கொண்டிருக்கும் இவ்வுலகை. இங்கே பார்! நீ இவ்வுலகில் வாழக் கூடாது என்னிடமே வந்து விடு, வந்துவிடு என்று கைநீட்டி யழைக்கும் கடலை. தலைக்கு நேரே நிமிர்ந்து பார்! நீ இவ்வுலகில் வாழ்வதில் என்ன பிரயோசனமிருக்கிறது என்று ஏளனமாகச் சிரிக்கும் முழுமதியை. இன்னுமென்ன வேண்டும்?'

'இல்லை நீ இறக்கக் கூடாது'

'நான் இறக்க வேண்டுமென்றுஎல்லோரும் விரும்புகிறார்களே, நான் என்ன செய்ய?'

'எல்லோரும் விரும்புகிறார்களென்றால்...'

'நான் இந்த நிலையில் இருப்பதுதான்'

'நீ இந்த நிலைக்கு வர யார் பொறுப்பாளி'?

'எனக்கே தெரியவில்லை'

'பொய் சொல்கிறாய்'

'நானா பொய் சொல்கிறேன், நான் சொல்வதைக் கேட்டுவிட்டு நீயே சொல் யார் பொறுப்பாளி என்று!'

'குழிவிழும் செந்தாமரைக் கன்னம், மருளும் மான் விழிகள், கொச்சிப் பழ உதடு, கடல் அலை கூந்தல், உள்ளத்தைக் கிள்ளும் வாளிப்பான வசீகர தேகக் கட்டு. வயது பதினெட்டு-வாழ வேண்டிய பருவம். இவைகள் யாவும் பிறர் என் அழகைப்பற்றி புகழ்ந்து பேசிய வார்த்தைகள். வானமோடு வாழ்ந்த நடுத்தரக் குடும்பம். பெற்றோர் இருந்தனர். ஒரே பெண்ணாக அவர்கள் கலி தீர்க்கப் பிறந்த கற்கண்டாக வளர்ந்தேன். என் அழகை அடைவதற்குப் பல வாலிபர் போட்டி போட்டனர். இறுதியில் அழகான வாலிபர், அதுவும் பணக்காரரான ஷோபால் ஹரி(?) யப் பேர்பெற்ற என் வாழ்க்கைப் படகைச் செலுத்தத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பெருமையில் நான் பூரித்துப் போனேன். இன்பகரமான வாழ்க்கையைப் பெற்று விட்டதாக இறுமாப்படைந்தேன். என் எதிர்கால வாழ்வின் வளத்தை நினைத்து,நினைத்து இன்ப வானிலே பறக்க வாரம்பித்தேன். தோழிகளைக்கூட இளக்காரமாகவும் நினைக்கத் தொடங்கினேன். ஆனால், நான் கண்ட கனவெல்லாம் கானல் நீராக, நீர்மேல் எழுத்தாகப் போகுமே என்று நான் எள்ளத்தனையும் எண்ணியிருக்கவில்லை; எண்ணியிருந்தால் இப்போது நான் ...ச்சு ச்சு...

திருமணம் முடிந்தது. பகலவன் மறைந்தனன். மணவறை அழைத்தது. பட்டுமெத்தைக் கட்டிலில் மனம் மகிழ் மலர்கள் தூவி, மனோகர வாசனைத் துளிகள் தெளிக்கப்பட்டிருந்தன. அறையின் ஒரு மூலையிலே நான் நின்று கொண்டிருந்தேன். ஏதோ ஒரு வித இன்பம் கலந்த அச்சம் என் எண்ண அலைகளைத் தட்டி எழுப்பியது. அவர் எப்படித் தொடுவார்? எவ்வாறு கொஞ்சிப் பேசுவார்?-அவர் மார்பிலே இப்படித்தான் சாய வேண்டும். என் கன்னத்தைத் அவர் மெல்லக் கிள்ளியதும்எப்படிச் சிணுங்குவது? இவ்வாறு என் உள்ளத்திலே கட்டிவைத்திருந்த ஆசை வெள்ளம் அணையுடைந்து பாயவாரம்பித்தது.

நேரம் போனதே தெரியவில்லை. நேரம் நடு நிசி 12 மணி எனக் காட்டியது. அவர் காலடி யோசை கேட்டுத்தான் நிமிர்ந்தேன். நண்பர்கள் பேசப்பிடித்துவிட்டதாகக் கூறினார். என்னருகே வந்து கைகளைப் பிடித்து கட்டிலருகே இழுத்துப் போனார். இதயம் வேகமாகத் துடித்தது. உடல் நடுங்கியது.

'கமலா, ஏன் உடம்பு நடுங்குகிறது'

நான் மௌனம் சாதித்தேன். காரணம் பேசும் சக்தி அப்போது என்னிடத்திலிருந்து எங்கோ பறி போய்விட்டது.

'என்னைக் கண்டால் பயமாக இருக்கிறதா?'

பயப்படுவதற்காகவா இவ்வளவு காலமும் இந்நன்னாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்; மனம் பேசியது.

'ஊஹும்'என முனகினேன்.

'கமலா, உண்மையிலே நீ பெரிய அழகி. இந்த அழகுதான் என்னைக் கவர்ந்தது. இந்த அழகை இன்னொருவர் அடையக் கூடாது என்பதுதான் என் ஆசை' என்றதும், என் சிந்தை தேனுண்ட வண்டாகக் கிறங்கியது. இதுபோன்ற காதல் மொழிகள்தானே பெண்களைப் படுகுழியிலும் வீழ்த்தும் சக்தி வாய்ந்தவை.

'நான் அவ்வளவு அழகானவளா?' சும்மா கேட்டு வைத்தேன்.

'இல்லை, அழகின் பிறப்பிடம் நீ' என் கைகளை எடுத்து அவர் கைகளிடையே வைத்துப் பிசைந்தார்.

'அத்தான்' அவர் மார்பிலே சாய்ந்தேன்.

'கமலா நமது தேன் நிலவைக் கழிக்க இலங்கையை நாம் இரு தினங்களில் வலம் வரப் போகிறோம்' என என்னை மெல்லத் தடவிய [illegible] என் உணர்ச்சிகளை [illegible] தாயிருந்தது. அந்தத் தழுவலில்தான் எத்தனை மயக்கமோ?

'இவ்வளவு சீக்கிரமாகப் போக வேண்டுமா, இன்னும் கொஞ்ச நாள் கழித்துப் போனால் என்ன?' என பேச்சு கொஞ்சலாக வெளிவந்தது.

இவ்வாறு இன்பப் பேச்சு நிறைந்த இரவாகவே அவ்விரவு கழிந்தது. அந்த இரவைப்போல எந்த ஒரு இரவுமே எடுபடாது. இவ்விரவே இப்படியென்றால் அந்தஇரவு...? என் இதயம் எதிர்பார்த்த அந்த இரவு எனக்குக் கிடைக்கவில்லை. நான் எதிர்பார்த்த அந்த இன்பத்தை அவரால் எனக்களிக்க முடியவில்லை. இதை வெளியே சொல்லக் கூடாதுதான். அதற்காக உண்மையைக் குழி தோண்டிப் புதைப்பதா? ஆசையோடு நெருங்கி அணைக்கும்போதெல்லாம்... அழகும், நல்ல திடமுமுள்ள அவர்...அந்த நினைவு வேண்டாம்.

நாட்கள் நகர்ந்தன. நானும் கண்ணகி வழி வந்தவள்தானே? எனக்கும் தன்னடக்கம் இருக்காதா? கணவரின் மனோநிலையறிந்து அவரைத் திருப்திப் படுத்தும் மனைவியாக, இல்லத்துக்கேற்ற இல்லத்தரசியாக இருந்தேன். அப்படியே காலம் ஓடிக்கொண்டிருந்தால் நான் இந்நிலைக்கு வந்திருக்க மாட்டேன். கணவர் என் நிலையை அறிந்திருந்தும், என் பேச்சையும் கேளாது அவரது பல நண்பர்களை அடிக்கடி வீட்டுக்குக் கூட்டி வந்து விருந்துகள் வைப்பதும், அரட்டையடிப்பதுமாக இருந்தார். பணமிருப்பதால் மட்டும் அவர் நண்பர்கள் வரவில்லை, பார்வைக்கு விருந்தாக நானுமிருப்பதால்தான் வருகிறார்கள் என்பதை இவர் புரிய முடியவில்லை.

நண்பர்களில் ஒருவன் ராசன். வாட்டசாட்டமான வாலிபன். அவன் பேச்சும்-சிரிப்பும் ஒரு தினுசாகவே மாறிக் கொண்டு வந்தது. இவர் பலவீனத்தை அவன் அறிந்திருக்கவேண்டுமென்றே எனக்குத் தோன்றியது. இல்லாவிட்டால் அவனுக்கு அவ்வளவு துணிவு ஏற்படாது.

நானும் உணர்ச்சியுள்ள பெண்தானே. இருந்தாலும் என்னை நானே கட்டுப்படுத்திக்கொள்ள முடியும். ஆயினும், மாறான சூழ்நிலையை அல்லவா இவர் மேலும், மேலும் ஏற்படுத்திக் கொண்டிருந்தார்.

அன்று இவர் வியாபார விஷயமாக மத்தியானம் கொழும்பு செல்வதாக இருந்தது. சாப்பிட்டுவிட்டு மதியம் ஒரு மணிக்கே சென்றுவிட்டார். சற்று நேரத்தின் பின் ராசா வந்து இவரை விசாரித்தான். தெரிந்திருந்தும் வேண்டுமென்று தான் வந்திருப்பது எனக்குப் புரிந்தது. வாசலிலே அவனைப் பேசிஅனுப்பிவிட முயற்சித்தேன். ஆனால், அவன் வீட்டிற்குள்ளேயே வந்து விட்டான்.

'உன்னை எனக்குத் தெரியும் கமலா' என்றவன் என் கைகளைப் பிடித்தான்.

[illegible]

'உன்னை மட்டும் ஏங்கித் தவிக்க விட்டது தவறில்லையா' என என் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு என்னைப் பிடித்திழுத்து அணைத்தான். அப்பிடியை மீறி என்னால் எதுவுமே செய்ய முடியவில்லை.

'துரோகி' என்ற இடியோசையைக் கேட்டுஇருவரும் சுயநிலைக்கு வந்தோம். எதிர்பாராத விதமாக என் கணவர் திரும்பியிருப்பதைக் கண்டேன். 'இனி உனக்கு இங்கு இடமில்லை, என அவனோடு என்னையும் பிடித்துவெளியே தள்ளினார்.

ராசனோடு வெளியேறிய நான் வேறு எங்குதான் போக முடியும்? வேற்றூருக்குச் சென்று அவனோடுதான் வாழ்ந்து கொண்டு வந்தேன். அவன் என்னை மனிதப் பிறவியாக மதிக்கவில்லை. அவன் இச்சையை அடக்கக் கூடிய இயந்திரமாகப் பாவித்தான். அத்தோடு மட்டுமல்லாமல் பணம் உழைப்பதற்கும் என்னைப் பயன்படுத்த ஆரம்பித்தான். என் மனச்சாட்சிக்கு விரோதமான செயலில் ஈடுபட்டிருந்தேன்; இல்லை-பலாத்காரமாக இறக்கப்பட்டேன். அவனை விட்டுப் பறக்கப் பலதடவை முயற்சித்தும் தோல்வியே கிடைத்தது.

தப்புவதற்கு ஒரேயொரு வழி கிடைத்தது. அதுதான் நான் பைத்தியக்காரியாக வேஷமிட்டது. என் நடிப்பிலே மயங்கிய ராசன்; அவனே என்னைப் பிடித்து வெளியே தள்ளினான்.

வெளியே வந்தது உண்மைதான். ஆயினும், விபச்சாரி வாழ்வை விடச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. பைத்தியக்காரி என்று பார்க்கிறார்

(12-ம் பக்கம் பார்க்க)

## முயற்சியின் அறுவடை....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சில் மட்டும் ஆட்சேபித்துப் பயனில்லை. நமது பிரதேச மக்கள் இன்றிருக்கும் கஷ்டநிலை பற்றியும், அரிசிவிலையேறியதை நம்மால் தாங்கமுடியாதென்பதைப் பற்றியும் பத்திரிகையில் எழுதிநாடறியச்செய்ய வேண்டும். யார் அதைஎழுதுகிறது?'

—இவ்வாறு என் மாதுலரும் வேறு சில வயோதிபர்களும் அங்கலாய்த்துக் கொண்டனர். என் மாதுலர் சிறந்த கலாரசிகர்; நாடகாசிரியர்; பெட்டிசங்கள் எழுதக்கூடியவர்தான். என்றாலும் பத்திரிகைக்கெழுதுவது அவரால் முடியாமலிருந்திருக்கலாம். முடிந்தால் 'யார் அதை எழுதுவது?' என்று ஏன் சொல்லுகிறார்.

நான் எவ்விதஅபிப்பிராயமும் தெரிவிக்கவில்லையென்றாலும், அவர்களின் 'அங்கலாய்ப்பு' எனக்கொரு புத்துணர்ச்சியையூட்டியது.

### கடிதமே கன்னிப்படைப்பு

அன்றிரவு முழுவதும் கண் விழித்திருந்து எழுதினேன். எனது எழுத்துலகப் பிரவேசத்தின் இறுதிப் பரீட்சையாக நான் எழுதியதை மறுநாட் காலையில்பத்திரிகைக்கும்அனுப்பி வைத்துவிட்டேன். அதுவும் என் மாதுலர் சந்தாக்கட்டியெடுக்கும் அதே பிரபல தினசரிப் பத்திரிகைக்குத்தான் அனுப்பினேன்.

விடயத்தை யாரிடமும் வெளியிடவில்லை. எப்படி வெளியிட முடியும்?

முன்பு நான் அனுப்பிய அத்தனை படைப்புகளையும் ஈவிரக்கமின்றி விழுங்கிக் கொண்டிருக்கும் திருவாளர் குப்பைக்கூடை அவர்கள் இதையும்விழுங்கிவிட்டால்?

எழுத்துக்கலையின் நுட்பங்கள், நெளிவு, சுழிவுகளையும் பத்திரிகைகளின் வரவேற்பு--மதவடைப்புப் பண்புகளையும் அறியாத நிர் அநுபவசாலியான எனது படைப்பு பிரசுரமாகுமென்பது என்ன நிச்சயம்? ஆனால், ஒன்றை மட்டும் நிச்சயப்படுத்திக் கொண்டேன். 'இது பிரசுரமாகாவிட்டால் இனி எதுவுமே என்றுமே எழுதுவதில்லை'யென்று!

நான்காவது நாள்—

சகாய வேலைத்தலத்திலே மத்தியான இடைவேளையின் பொழுது மாமனார் சாவகாசமாகப் பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார். பல நேயர்கள் அவரைப் புடைசூழ்ந்திருந்தனர். ஐந்தாம் பக்கத்தைப் புரட்டியதும் எதிர்பாராத விதமாக அவர் துள்ளிக் குதித்து மகிழ்ந்தார்.

'இங்கே பாருங்கள்! அன்றைக்கு நாங்கள் பேசிய விஷயத்தை யாரோ எழுதியிருக்கிறான்...' என்று, மற்றவர்கட்குச் சுட்டிக்காட்டிவிட்டு என் படைப்பை வாசிக்கத் தொடங்கினார். யார் அதை எழுதியதென்பதை அவர் கவனிக்கவேயில்லை...முழுதும் வாசித்து முடிந்து எனது பெயர், முகவரிகளைக் கண்ணுற்றதும், கண்களை அகலத் திறந்து ஆச்சரிய வசத்தரானார்.

'எப்ப தம்பி இதை எழுதினீர்கள்?' என்று, சம்பிரதாயத்திற்காகக் கேட்டும் வைத்தார்.

எமது பகுதியிலுள்ள பலருக்கு அதைக்காட்டிப் பெருமிதமடைந்தார். தன் மருகர் அந்த ஒரு விடயத்தை எழுதியதினால் பிரபல எழுத்தாளராகிவிட்டாரென்று இறும்பூதெய்திப் பாராட்டினார்.

'வவுனியாப் பகுதிக்கிராமவாசிகளின் பரிதாப நிலை' யென்னுந் தலைப்பிற் தீட்டப்பட்ட எனது கன்னிப் படைப்பு ஒரு ஆசிரியர்கடிதமென்ற பொழுதிலும், அஃதோர் கட்டுரை வடிவில் அமையப் பெற்றதாக, ஒரு பிரதேச மக்களின் தாழ்வுற்று வறுமை மிஞ்சிய வாழ்க்கை நிலையைத் தத்ரூபமாகப் படம்பிடித்துக்காட்டிய சிறந்த தோர்சிருஷ்டியாக அமைந்திருந்தது.

இன்று எந்தத்தனிப்பட்டவர்களினதும் எழுத்தாளர் கட்சிகளினதும் சிபாரிசுகள் எதுவும்இல்லாமலே, யாரையும் காக்காய் பிடிக்காமலே சொந்தக்காலில் நின்று சுயமுயற்சியினால் முன்னேறி, ஈழத்திலுள்ள எல்லாப் பத்திரிகைகளிலும் எழுதிவருகிறேன் என்றால்—

ஒரு சிறுகதை ஆசிரியனாக, கட்டுரையாசிரியனாக கவிஞனாக திகழ்கிறேனென்றால்—;

அதற்குக் காரணம்! அந்த ஆசிரியர் கடிதந்தான்! அந்த ஆசிரியர் கடிதத்தை ஒரு போதும் மறக்கமுடியாது; மறக்கவும் மாட்டேன்.

ஆசிரியர் கடிதத்திற்கு இலக்கிய அந்தஸ்துக் கொடுக்க முடியாதென்றாலும், என்னைப் பொறுத்தவரையில் அதுதானே எனது முதல் எழுத்தோவியம்; தூண்டுகோல், வழிகாட்டியனைத்தும்!

ஏன் தெரியுமா—? அன்று அது பிரசுரமாகவில்லையென்றால், இன்று வன்னி மாவட்டம் ஒரு எழுத்தாளர் எஸ். எல். சவுந்தரநாயகத்தையும், ஒரு கவிஞர் வன்னியூர்க்கவிராயரையும் ஈன்று இலக்கிய உலகிற்கு அளித்திருக்க முடியவே முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவையில் அதிசய மனிதர் நாயுடுவின் தொழிலகம் கண்டோம்

## தமிழில் அர்ச்சனை நடக்கும் பேரூரின் தரிசனம் கிடைத்தது

## சினிமாவில் நடிக்க குமாரி தமயந்திக்கு சிவாஜி கணேசன் அழைப்பு

சுமார் 600க்கும் மேற்பட்ட படிகளைக் கடந்து பழனிமலை உச்சிக்குச் சென்ற நாம், அங்கு கோயில் கொண்டிருக்கும் குமரவடிவேலனின் குழந்தைத் தோற்றத்தைக் கண்டு அப்படியே மெய்மறக்கின்றோம். பார்க்கும் இடமெல்லாம், திரும்பிய திசையெல்லாம் பச்சைப்பசேல் என்று தெரியும் அந்த இனிய சூழலையும், அதன் மத்தியில் மிடுக்கோடு நிமிர்ந்து நிற்கும் பழனி மலையையும் பார்க்கும் போது, பச்சை மயில் ஏறி பக்தர்களுக்கு அருள்பாலிக்கப் பாலமுருகன் பவனிவருவது போன்ற ஒரு பிரமையே நமக்கு ஏற்படுகின்றது.

### எல்லாம் முருகன்

முருகன் என்றால் அழகு, முருகன் என்றால் இனிமை, முருகன் என்றால் இயற்கை, முருகன் என்றால் இளமை, முருகன் என்றால் இன்பம், முருகன் என்றால் தமிழ் என்பதில்தான் எத்தனை உண்மை!

புகழ்பெற்ற பழனி பஞ்சாமிர்தத்தை வாங்கிச் சுவைத்துக்கொண்டு கீழே இறங்கும் போது நன்கு இருட்டிவிடுகின்றது. அடிவாரத்துக்கு வந்த நாம் அண்ணாந்து மலையை நோக்கினால், மலை பூராவும் மின்சார ஒளியில் தேஜோ மயமாகக் காட்சியளித்துப் பூங்குன்றாய், ஒளிக்குன்றாய்த் திகழ்ந்து கொண்டிருந்தது.

இன்றையப் பொழுது பழனியிலேயே கழிகின்றது. அடுத்த நாட்காலை, தொழில் வளம் சிறக்கும் கோயம்புத்தூரை நோக்கி நாம் பிரயாணத்தை மேற்கொள்ளுகின்றோம்.

இந்தக் கோயம்புத்தூர் இருக்கின்றதே கோயம்புத்தூர், இது ஓர் அதிசயமான நகரம்தான். இங்குள்ள ஏதாவது ஒரு கட்டிடத்தில் நாம் இடறி விழுந்தோமானால், நிச்சயம் அது ஒரு தொழிற்கூடமாகவோ ஆலையாகவோதான் இருக்கும்! பார்க்குமிடமெங்கணும் மில்! மில்! மில்!

கோவையில் நமக்கு 'நஞ்சப்பாமுதலி' சத்திரத்தில் சௌகரியமான இடம் கிடைக்கின்றது. சத்திரத்தின் சொந்தக்காரரை அசப்பில் பார்க்கும்போது நமது தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தைப் போலவே' காட்சிதருகின்றார். நாம் சென்று அவரிடம் தங்குவதற்கு இடம் கேட்டதும் ஒரு தடங்கலுமின்றி 'மூன்று தினங்கள் பணம் ஏதுமின்றி இலவசமாகவே நீங்கள் தங்கலாம்' என்று அனுமதி வழங்குகின்றார். 'மூன்று நாள் வேண்டாம் ஐயா! இரண்டு நாளிலேயே நாங்கள் இடத்தைக் காலி செய்துவிடுகின்றோம்' என்று சொல்லிவிட்டு ஜாகை போகின்றோம்.

### அதிசய மனிதன் ஜி. டி. நாயுடு

கோயம்புத்தூர் சென்றால் தொழிலதிபர் திரு. ஜி. டி. நாயுடுவின் பங்களாவைப் பார்க்காமல் விடுவதா?

தொழிற்றுறையில் பல புரட்சிகரமான கண்டுபிடிப்புக்களைத் தாம் ஒருவரே தனிமரமாக நின்று செய்து முடித்தவர் ஜி. டி. நாயுடு அவர்கள்.

சமீபத்தில் ஏற்பட்ட இந்திய—சீன யுத்தத்தில், யுத்த நிதியாகத் தாம் கண்டுபிடித்த க்ஷவர பிளேட்டுகளில் பத்து லட்சமும், ரொக்கமாக இரண்டு லட்ச ரூபாவும் கொடுத்த வள்ளல் அவர்! துரதிர்ஷ்டவசமாக நாம் அவர் பங்களாவுக்குச் சென்ற வேளையில் அவர் வெளியூர் சென்றிருந்ததால், அந்த மேதையின் தரிசனம் நமக்குக் கிட்டாமல் போய் விடுகின்றது என்றாலும், அவர் பங்களாவோடு இருக்கும் பிரமாண்டமான தொழிற்சாலையில் உள்ள பொருட்கள் அனைத்திலும் அந்த அதிசய மனிதரை நாம் காண்கின்றோம்

ரேடியோ, சைக்கிள், கார், விவசாய இயந்திரங்கள் முதல் ஊண்டுசி வரை அங்கே உற்பத்தியாகும் அதிசயத்தை நாம் பார்த்து மூக்கின் மேல் விரல் வைக்கின்மே. கோவைச் சுற்று வட்டாரத்தில் இது போன்ற எத்தனையோ பல தொழிற்கூடங்கள் அவருக்கு உண்டாம்! அவற்றில் 1000த்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிகின்றார்களாம்! அவருக்கென்றே ஒரு தனி பஸ் கம்பனியும் இருக்கின்றதாம்!




(21)

### காரும் அரசும்

தம் மூளைத் திறத்தால் இயந்திர சாதனத்தில் மட்டுமன்றி விவசாயத்துறையிலும்பலபரீட்சார்த்தங்களைக் கண்டு வெற்றியீட்டியுள்ளார் இந்த அசகாய சூரர்! மாம்பழங்களில்தான் எத்தனை தினுசு? ஆரஞ்சு, சாத்துக்குடியில்தான் எத்தனை ரகம்? கேவலம் பப்பாசிப் பழத்தில்தான் எத்தனை விதம்! இப்படி எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு வந்த நாம், நொருங்கிய நிலையில் தொழிற்கூடத்தின் மத்தியில் காட்சிதரும் ஒரு காரைக் கண்டதும் அப்படியே அசந்து போய் நிற்கின்றோம்.

'என்ன ஸார் இந்தக் காரை அப்படிப் பார்க்கின்றீர்கள்?'

'இப்படி நசிந்து அலங்கோலமாக இருக்கின்றதே இந்தக் கார்? இதைக் கொண்டு வந்து இப்படி நடுவில் நிறுத்தியிருக்கின்றீர்களே!'

'நீங்கள் இந்தக் காரைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?'

'கெட்டுப்போன பழைய கார்!'

'இந்தக் கார் [illegible] பொன்றும் தா[illegible]கெட[illegible]வில்லை, எங்கள் அதிபர் ஜி. டி. நாயுடு அவர்களே இதை அடித்து நொறுக்கினார்!'

'அவர் பிரயாணம் செய்யும்போது வழியில் ஏதாவது 'மக்கர்' செய்திருக்கும், அடித்து நொறுக்கியிருப்பார்'

நவம்

'அதுதான் இல்லை'

'பின்னே எது?'

'ஜீ டி. நாயுடு அவர்கள் தாமே முழுசாக இந்தக் காரைச் செய்தார். 'அரசாங்கம் அனுமதி வழங்கினால், மிகக் குறைந்த விலையில் ஏராளமான கார்களைச் செய்து பாவனைக்கு விடமுடியும்' என்று அரசாங்கத்தின் உதவியைக் கோரினார். அவர் கோரிக்கையை அரசாங்கம் ஏற்க மறுக்கவே ஆவேசம் கொண்ட அவர், சென்னை மெரீனக் கடற்கரையில் வைத்து, பொது மக்கள் முன்னிலையில் இந்தக் காரை அடித்து நொறுக்கினார்!'

'என்ன? என்ன?'

'ஆமாம் ஸார்! இப்படிப் பட்ட ஒரு மாணிக்கத்தைப் பயன்படுத்துவதற்குப் பாரத சர்க்கார் பயப்படுவது பாரதத்துக்கு ஒரு பேரிழப்பாகும்!'

'உண்மை! உண்மை!'

### யார் இந்த யோகீஸ்வரர்?

ஜி. டி. நாயுடு பங்களாவை விட்டு நாம் வெளியில் வரும் போது இன்னும் ஒரு திகவலும் நமக்கு எட்டியது.

நம் இலங்கையில் கண்டிக்கு அருகிலுள்ள 'தென்னக்கும்புற' என்ற இடத்தில் மஹாவலிகங்கை தீரத்தின் அருகே 'தபோவனம்' அமைத்து சாந்தி ஒளிபரப்பி வரும் சுவாமி சச்சிதானந்த யோகீஸ்வரர் அவர்களும் ஒரு கோயம்புத்தூர்க்காரர் தான் என்பதும், ஜி. டி. நாயுடு ஸ்தாபனத்தில் அவர் ஒரு காலத்தில் 'எஞ்சினியராக'ச் கடமை பார்த்தவர் என்ற ரகசியமும் நம் காதில் விழுகின்றது.

[illegible] கேட்டு வியந்து கொண்டு, கடிதும் மூலம் ஈழத்துச் சகோதரி ஒருவர் தொடர்பு ஏற்படுத்தித் தந்த குமாரி தமயந்தி எம். ஏ. அவர்களைச் சந்திப்பதற்காக அவர் வசிக்கும், அவிநாசி ரோட்டிலுள்ள ஆடி வீதியை நோக்கி நடையைக் கட்டுகின்றோம் நாம்.

'டொக், டொக்!'-கதவைத் தட்டுகின்றோம் நாம்.

கதவைத் திறந்துகொண்டு ஒரு வயதான அம்மையார் வெளியே எட்டிப்பார்க்கின்றார்.

'குமாரி தமயந்தி! இருக்கின்றார்களா?'

'உள்ளே இருக்கின்றாள். ஆமாம், நீங்களெல்லாம் யார்?'

'இலங்கையிலிருந்து வருகின்றோம்...'

'சிலோன் காரர்களா? உள்ளே வாருங்க. தமயந்தி என் பெண்தான். இதோ கூப்பிட்டுவிடுகிறேன்' என்று கூறிக் கொண்டு உள்ளே சென்றார் அந்த அம்மையார்.

அவர் சென்ற சிறிதுநேரத்துக்கெல்லாம் சிவந்த மேனியும், சிரித்த முகமும், கூப்பியகரங்களுமாக ஓர் இனிய உருவம் எங்கள் முன் வந்து நின்றது.

'நான்தான் தமயந்தி. சிலோனிலிருந்து இப்பத்தான் வரீங்களா?'

'இல்லை, ஒரு மாதம் ஆகின்றது இப்படியே ஊர் சுற்றிக்கொண்டு இப்பத்தான் உங்கள் கோவை நகருக்கு வந்து சேர்ந்திருக்கின்றோம்.'

இந்தப் பெண்கனே ஒரு தனிதான்!

நம் கோஷ்டியிலிருந்த லீலா, கணேஷ், பாமா, இரத்தினம் முதலானோர் குமாரி தமயந்தி உடுத்தியிருந்த சேலையைத் தொட்டுப்பார்க்கவும், பதிலுக்கு 'விட்டேனு பார்?' என்று சவால் விட்டுக் கொண்டு குமாரி தமயந்தியும், நம்மவர்கள் கட்டியிருந்த 'எலெட் ஜார்ஜெட் டைட்'ப் பிடித்துப் பார்த்து வாயூறியதும் ரசிக்கும் காட்சிகளாக அமைந்தன.

'லட்டு' வந்தது ஒரு தட்டு நிறைய. ஒரு நொடியில் தட்டு காலியாயது.

அவர் தந்த 'லட்டு' தித்திப்பா? அல்லது அவர் சுபாவம் இனிமையா? என்று தரம் பிரிக்க முடியாத அளவு வாஞ்சையோடு பழகினார் குமாரி தமயந்தி அவர்கள். தாம் ஓர் எம். ஏ. என்ற கர்வமே இல்லாமல் எளிமையோடு பழகினார். நம்—நாட்டுப் -பெண்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் இது!

### சம்பளப் பிரச்சினை

கல்லூரி ஒன்றில் ஆசிரியையாகப் பணி புரியும் இந்த எம். ஏ. யிடம் 'சம்பளம் எவ்வளவு?' என்று விசாரித்தோம்.

'சுமார் 250 ரூபா மட்டில் கிடைக்கின்றது!'

'இலங்கையில் ஒரு பி. ஏ. க்கே 400, 500 என்று கிடைக்கின்றதே!'

'வாஸ்தவம்தான். நானும் கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆனால் ஒன்றே.........' என்று கேட்டுவிட்டு நிறுத்தினார் அவர்.

'என்ன?'

'அப்படிச் சம்பளத்தைக் கை நிறையச் சுளை சுளையாகத் தந்துவிட்டு அப்புறம் எல்லாவற்றையும் பறித்துக் கொள்வார்களே உங்கள் சிலோனில்!'

'உண்மைதான். இங்குள்ள வாழ்க்கைச் செலவைவிட எங்கள் இலங்கையில் சற்று ஜாஸ்திதான்!' என்று உண்மையை ஏற்றுக்கொள்ளுகின்றோம் நாம்.

### சினிமாவில் நடிக்க அழைப்பு

குமாரி தமயந்தி அவர்கள் ஓர் எம். ஏ. பட்டதாரி மட்டுமல்ல, சிறந்த ஒரு நர்த்தகியாகவும் இருக்கின்றார். பல அரங்கங்களில் அவர் பரதநாட்டியமாடிய 'போட்டோ' 'அல்ப' மே அதற்குச் சான்று. இவர் நடனத்தை ஒரு தடவை பார்க்க நேர்ந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன், இவரைச் சினிமாவில் நடிக்க வரும்படி அழைத்தாராம்! அசப்பில் பார்க்கும் போது நமது வைஜயந்தியை ஞாபகப்படுத்தும் முகவெட்டுப் பெற்றுள்ள இவர், சினிமா உலகில் புகுந்தால் நல்ல எதிர்காலத்தைப் பெறலாம் என்று 'ஒசி' யில் ஆலோசனை கூறிக் கொண்டு அங்கிருந்து விடைபெற்று, நேரே கோவையிலிருந்து 3 மைல்களுக்குஅப்பாலுள்ள பேரூர் சென்று அந்தப் பெம்மானை வணங்குகின்றோம் நாம்.

### தமிழில் அர்ச்சனை

பேரூர் ஆலயத்தில் ஓர் அதிசயம்! தமிழில் அர்ச்சனை செய்யும் வழக்கம் இங்கு நடைமுறையில் கைக் கொள்ளப்படும் அதிசயத்தைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

பேரூரில் இன்னும் ஒன்று உண்டு. அதுதான் கொய்யாக்கனிகள் இங்குஏராளம்.

நமது பிரயாணக் கோஷ்டியில் இருந்த ஒரு மொழியாராய்ச்சி அறிஞர் பின்வரும் கண்டுபிடிப்பையும் கண்டு பிடித்தார்.

கொய்யாக்கனிக்குச் சிங்களத்தில் 'பேர கெடி' என்று பெயர். பேரூரில் கொய்யாக்கனி ஏதேஷ்டமாகக்கிடைப்பதிலிருந்துதான் கொய்யாக்கனிக்கு 'பேர கெடி' என்ற பெயர் வந்திருக்க வேண்டும்! பேரூர் — பேரகெடி! எப்படி நம் பன் மொழிப் புலவரின் கண்டுபிடிப்பு?...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்படத் தயாரிப்பில்

# தமிழக அந்தஸ்தை ஆந்திரா அபகரிக்கும்?

## தெலுங்குக் கலைஞர்கள் இடம் பெயர ஏற்பாடு

திரைப்படத் துறையில் தமிழகம் வகித்து வந்த இடத்தை ஆந்திர அரசாங்கம் அபகரிக்க முயற்சித்து வருவதாக நம்பப்படுகிறது. இந்தியாவின் ஹாலிவுட் என்ற புகழ்ச்சிப் பெயர் இனிமேல் சென்னைக்கு நீடிக்க வழியில்லை என்று தமிழகச் சினிமாப் பிரமுகர்கள் கருதுகிறார்கள். ஆந்திராவைச் சேர்ந்த ஹைதராபாத்தில் நவீன வசதிகள் கொண்ட படப்பிடிப்பு நிறுவனங்களை நிர்மாணிக்க ஆந்திர அரசு திட்டமிட்டுள்ளது. அங்கு படங்களைத் தயாரிக்க விரும்பும் தெலுங்குத் தயாரிப்பாளர்களுக்கு வட்டியில்லாமல் கடனும் தரப்படுமாம்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளிலேயே அதிகமான வசதிகளை உடைய ஸ்டுடியோ என்று சொல்லுமளவுக்கு விஜய வாஹினி ஸ்டுடியோ பெயர் பெற்றது. இது தவிர ஜெமினி, ஏ. வி எம்., பரணி, மெஜஸ்டிக், கோல்டன், நியூட்டோன், நரசு, நெப்டியூன், சிட்டாடல், சியாமளா, ரேயல், பிலிம் சென்டர், பிரகாஷ் பொன்னலூரி, அருணாசலம், வீனஸ், விக்கிரமா, மதராஸ் ஆகிய ஸ்டுடியோக்களின் இருப்பிடமாகவும் சென்னை இருக்கிறது. ஜெமினி, நெப்டியூன், நியூட்டோன், வீனஸ், நரசு, சிட்டாடல் ஆகியவற்றைத் தவிர ஏனைய ஸ்டுடியோக்கள் கோடம்பாக்கத்திலும், அதையடுத்த சாலிக்கிராமம், விருகம்பாக்கம் ஆகிய இடங்களிலும் உள்ளன. ஒருசில ஸ்டுடியோக்களைத் தவிர ஏனைய நிலையங்களில் எப்பொழுதும் வேலை நடந்தவண்ணமே இருக்கும். இவை மட்டுமின்றி சேலத்தில் மொடேர்ன் தியேட்டர்ஸ் படப்பிடிப்பகமும், ரத்னா ஸ்டுடியோவும், கோவையில் பட்சிராஜா ஸ்டுடியோவும் இருக்கின்றன. இவற்றில் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் படங்கள் தயாராகி வருகின்றன.

### சவால்

சினிமாத் தயாரிப்புத் துறையில் தமிழகத்துக்குச் சவால் விடும் முயற்சியில் ஆந்திர ராஜ்ஜியம் இறங்கியிருப்பதே தமிழகச் சினிமா உலகத்துக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தி வருகிறது.

தமிழகத்திலுள்ள தயாரிப்பாளர்கள், ஸ்டுடியோ முதலாளிகள், பிரதம நடிகர் நடிகைகள், கலைஞர்கள் ஆகியோரில் பெரும்பான்மையினராக ஆந்திராவைச் சேர்ந்த தெலுங்கர்களே உள்ளனர். அவர்கள் அத்தனை பேரையும் தன்னகத்துக்கு அழைத்து அவர்களுடைய திறமையையும், தகுதியையும் பயன்படுத்திக்கொள்ள ஆந்திரா தீர்மானித்துவிட்டது.

ஆந்திராவைச் சேர்ந்த ஹைதராபாத்தில் சாரதி ஸ்டுடியோ என்ற ஒரே ஒரு ஸ்டுடியோவே உள்ளது. இதை விட சகல நவீன வசதிகளைக் கொண்ட ஒரு ஸ்டுடியோவை ஹைதராபாத்தில் அமைக்கப் போதுமான உதவியை அளிக்க ஆந்திர அரசு முன் வந்திருக்கிறது.

### வட்டியில்லாக் கடன்

எந்த மொழியில் படம் தயாரிக்க விரும்பினாலும் ஆந்திர ராஜ்ஜியத்துள், தெலுங்கர்கள் தயாரிப்பதானால், ஒரு தயாரிப்பாளருக்கு ரூ. 50,000 வரை வட்டியில்லாக் கடனாகக் கொடுக்க ஆந்திர அரசாங்கம் முன் வந்திருக்கிறது.

திரைப்படத் துறையில் தமிழகத்தை வீழ்த்திவிட்டு பிரபலம் அடைய ஆந்திர அரசாங்கமும் தெலுங்குக் கலைஞர்களும் முன் வந்துவிட்டனர் என்று கூறப்படுகிறது. சென்னை விஜய—வாகினி அதிபர்களுள் ஒருவரான சக்ரபாணி, தயாரிப்பாளர் டைரக்டர் பி. என். ரெட்டி, டைரக்டர் புல்லையா, எல். வி. பிரசாத், சி. வி. வி. ஆர். பிரசாத் ஆகியோர் கொண்ட ஒரு குழுவை ஆந்திர அரசாங்கம் அமைத்து, ஆந்திராவில் திரைப்படத் துறை வளருவதற்கான முயற்சிகளில் ஈடுபடும்படி பணித்துள்ளது. சென்னையிலுள்ள தங்கள் நிறுவனங்களை மூடிவிட்டு ஹைதராபாத் சென்று தொழில் தொடங்குவதற்கான ஆயத்தங்களைத் தெலுங்கு தயாரிப்பாளர்கள் ஏற்கனவே செய்யத் தொடங்கிவிட்டதாகவும் அறியப்படுகிறது.

நமது சென்னை நிருபர்

### துவேஷந்தி

தமிழகத்திலுள்ள ஸ்டுடியோக்கள் பல மிக விரைவில் மூடப்பட்டுவிடும் என்றும் இதனால் இத்துறையை நம்பியுள்ள பல்லாயிரம் தொழிலாளர்கள் தொழில் இழக்க நேரிடும் என்றும் கூறப்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக தமிழர்—தெலுங்கர் வகுப்புத் துவேஷந்தி வளரக் கூடும் என்றும் சில அவதானிகள் கருதுகின்றனர்.

## 'அம்ரபாலி' ஜப்பான் பயணம்

சர்வதேசத் திரைப்பட அரங்கிற்கான படங்களைத் தயாரிப்பதில் இப்பொழுது இந்திப் பட முதலாளிகள் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளனர். ராஜ்கபூர் தயாரித்த 'சங்கம்' வெளிநாடுகளில் திரையிடப்பட்டுள்ளமையினால் அதில் நடித்துள்ள வைஜயந்திமாலாவுக்கும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.



ஈகிள் பிலிம்ஸ் தயாரிப்பாளர் மெஹ்ரா 'அம்ராபாலி' என்ற நடனங்கள் நிறைந்த படத்தை இந்தியிலும், ஆங்கிலத்திலும் வர்ணத்தில் தயாரித்து வருகிறார். அம்ராபாலி என்ற நடனமாதாக வைஜயந்தி தோன்றுகிறார். சுனில் தத் இளவரசனாக வருகிறார்.

இப்படத்தை 1965ம் வருடம் மே மாதத்தில் ஜப்பான் நாட்டுத் திரைகளில் காண்பிக்கத் தயாரிப்பாளர் ஏற்பாடுகள் செய்துள்ளார். வைஜயந்திமாலாவும் சுனில் தத்தும் படம் திரையிடும் போது ஜப்பான் செல்லவிருக்கின்றனர்.

## மெழுகு வர்த்தி

கே. பாலச்சந்தரால் எழுதப்பட்டு ராகினி ரிகிரியேஷன் கிளப்பால் மேடையேற்றப்பட்ட 'மெழுகு வர்த்தியை' ராதாயணி பிக்சர்ஸ் படமாக்கத் தொடங்கிவிட்டனர். கடந்த 3ம் திகதி நெப்டியூனில் இதற்கான ஆரம்ப பூஜை போடப்பட்டது. எம். ஜி. ஆர். சௌகார் ஜானகி, விஜயா, நாகேஷ் முதலானோர் பிரதான பாகங்களில் தோன்றுவர். டைரக்ஷன் கிருஷ்ணன் பஞ்சு

## பார்த்த கண்கள் எத்தனை?

சலசலத்த சப்தமிடும் தெளிந்த நீரோடையின் அருகே கட்டிளங்காளை ஒருவனும், கன்னிப் பெண் ஒருத்தியும் உல்லாசமாக



ஆடிப்பாடி விளையாடும் ஆனந்தமான காட்சியைக் காணுகின்றோம். உல்லாசமாகத் திரியும் அந்தக் காதல் ஜோடிகள் எந்தக் கவலையையுமே பொருட்படுத்தியதாகவும் தெரியவில்லை. அருகில் சென்று பார்த்தால் இருவரும் கல்லூரி மாணவர்கள் போல் தோன்றுகின்றது.

உல்லாசப்பயணம் சென்று உலகையே மறந்து கிடக்கும் அந்த இரு உள்ளங்களையும் ஏன் வெட்டிப் பிரிக்க வேண்டும்? நாம் பின்னடைந்து விடுகின்றோம்.

'பார்த்த கண்கள் நான்கு, பழகும் நெஞ்சம் இரண்டு, வார்த்தை அங்கு ஒன்று—வாரிக் கொடுத்த அன்பு'

இப்படித்தான் அந்த இரு சிட்டுக்களும் பாடுகின்றன.

சேலம் மூவீசாரின் 'உல்லாசப் பயணம்' படத்தின் வெளிப்புறக் காட்சிகள் கோவளத்தில் படமாக்கப்பட்டன. காதல் ஜோடிகளாக எஸ் எஸ். ஆரும், விஜயகுமாரியும் தோன்றுகின்றனர். இப்பாடலை திருச்சி தியாகராசன் வழங்கியுள்ளார். மகாதேவன் இசை அமைத்துள்ளார்.



தீபாவளி வெளியீடான இப்படத்தை சத்தியம் நட்டுவாங்கம் செய்கிறார். [illegible] முதலியோர் தோன்றுகின்றனர்.



மூன்று காமிராக்களைக் கொண்டு மூன்று துண்டுகளாகப் பதிவு செய்யப்படும் 'சினிரமா' முறைப் படங்கள், திரையிடப்படும் போது 3 இயந்திரங்களைக் கொண்டு காண்பிக்கப்படும். அப்போது தான் காட்சிகள் தத்ரூபமாக அமைந்துவிடுகின்றன. இதே சினிரமாவில் தயாரான 'ஹௌ த வெஸ்ட் வோஸ் வொண்' என்ற படம் சாதாரண 'சினிமாஸ் கோப்' முறையில் மெஜஸ்டிக்கில் திரையிடப்பட்டுள்ள போதிலும் 'சினிரமா' உத்தி அவ்வளவு பாதிக்கப்படவில்லை. கரோல் பேக்கரும், ஜேம்ஸ் ஸ்டுவர்ட்டும் தோன்றும் காட்சி இது.

ஆங்கிலப்பட விமர்சனம்

## மேற்கை வென்ற கதை
## (HOW THE WEST WAS WON)

மக்களனைவரும் ஒன்றுகவேயிருந்து ஒரே மாதிரியான வாழ்க்கையையே கடைப்பிடித்து சலிப்படைந்த காரணத்தினால், புதிய பிரதேசங்களை நாடிச் சென்று குடியேறி, அவற்றை இன்பபுரிகளாக்கி வாழ வேண்டும் என்று விரும்பிய காலம் அது. புதிய இடங்களைத் தேடி பாதசாரிகளாகவும், குதிரை வண்டி மாட்டு வண்டி முதலான சாதனங்கள் மூலமாகவும், கட்டுமரங்கள், தோணிகளின் துணையுடனும் மக்கள் இடம் பெயருகின்றனர். திக்கெல்லாம் சிதறிய இக் குடிபெயர்ச்சியில், அமெரிக்காவின் மேற்குப் பிரதேசத்தை நோக்கிப் புறப்பட்ட கூட்டத்தினர், தங்களுக்கு ஏற்பட்ட இன்னல்களையும், இயற்கை செயற்கை இடையூறுகளையும் களைந்து எவ்வாறு வெற்றியடைகின்றனர் என்பதை விபரிக்கும் கதைதான் 'மேற்கு எவ்வாறு வெல்லப்பட்டது' (How The West Was Won) என்ற எம். ஜி. எம் திரைப்பட நிறுவனத்தின் பிரமாண்டமான தயாரிப்பின் கருவூலமாகும். 'சினேரமா' தயாரிப்பான இவ் வர்ணப் படத்தில், பிரசித்திவாய்ந்த 24 சர்வதேச நட்சத்திரங்கள் ஜொலிக்கின்றன.

இப்படம் மூன்று பிரிவுகளாக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு இயக்குநரால் கையாளப்படுகின்றது. மூன்று இயக்குநர்களும் போட்டி போட்டுக் கொண்டு தங்களின் திறமைகளை வெளிக்காட்டியுள்ளனர். இப்படத்தைப் பார்க்கும் போது அமெரிக்கர்கள் திரைப்படத் தயாரிப்பில் எவ்வளவு நுணுக்கங்களைக் கையாளுகின்றனர் என்று வியக்க வேண்டியுள்ளது.

கிரகெரி பெக், ஜேம்ஸ் ஸ்டுவர்ட், ஜோன் வெயின், ரிச்சர்ட் விட்மார்க் முதலிய பிரபல நடிகர்கள் பலர் நடித்திருக்கும் இப்படம், இடைவேளைக்கு முன்னர் வெறும் சம்பவக்கோவையாகத் தென்பட்டாலும் இடைவேளைக்குப் பின்னர் மிகவும் விறுவிறுப்பாக ஓடுகின்றது.

பாய்ந்தோடும் ஆற்றில் தத்தளிக்கும் கட்டுமரம், சிவப்பிந்தியர்கள் அமெரிக்கரின் குடிமனைகளுக்கூடாக மாடுகளை ஓட்டிச் செல்லுதல், முதல் புகைவண்டி பாதையை விட்டுப் பாய்ந்தோடும் காட்சிகள் என்றும் மனதைவிட்டு அகலாது. காட்சிகள் அனைத்தும் வெளிப்புறக் காட்சிகளாகவே இருக்கின்றன. ஒலிப்பதிவும் ஒளிப்பதிவும் மிகவும் நல்ல முறையில் பதிவாகி இருக்கின்றன. இயற்கைக் காட்சிகளின் அழகைக் குறைத்து விடாதபடி காமிராவை மிகத் திறமையாகக் கையாண்டு இருக்கிறார்கள். ஜோன் ஃபோட், ஹென்றி ஹாத்தாவே, ஜோர்ஜ் மார்ஷல் ஆகிய மூவரும் இயக்கியுள்ள இப்படம் கொழும்பு மெஜஸ்டிக் திரையில் காட்டப்படுகிறது.

—'சுவர்ணா'.

## விபத்து...?

கடந்த வாரம் எதிர்பாராத வகையில் நுகேகொடையில் ஒரு மோட்டார் விபத்து ஏற்பட்டுவிட்டது. ஒரு டாக்சியும் வேறோர் வண்டியும் மோதிக்கொண்டன. தொடர்ந்து பெரிய வாக்குவாதமும் நடந்தது. நமக்கு நன்கு பரிச்சியமான பல முகங்கள் தென்பட்டமையினால் நாமும் அங்கே போய்ப்பார்க்கிறோம். திரு. சானு, திரு. இராஜேஸ்வரன், திரு. அழகக்கோன் ஆகியோருடன் செல்வி மாலதி சொக்கநாதனும் தென்படுகிறார். அவர்களருகே இயக்குநர் சுண்டிக்குளி சோமசேகரன், ஒளிப்பதிவாளர் எம். ஏ. கபூர் ஆகியோரும் நிற்கின்றனர். பரபரப்பூட்டும் இந்தச் சம்பவம் பற்றிய சுவையான செய்திகள் அடுத்தவாரம் இதே பகுதியில் வெளியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கு அறிக்கையை தமிழிலும் வெளியிடுக

## இலங்கை வங்கி முகாமையாளருக்கு தமிழரசுக்கிளை வேண்டுகோள்

இலங்கை வங்கியின் வெள்ளவத்தைக் கிளை அதன் மாதக்கணக்கு அறிக்கையை ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் வெளியிட்டு தமிழுக்கு இடம் கொடுக்காததையிட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக்கிளை கண்டனம் தெரிவித்துள்ளது. மாதக் கணக்கு அறிக்கையைத் தமிழிலும் வெளியிடும்படி, வெள்ளவத்தை வங்கிக்கு தமிழில் கடிதம் எழுதும்படி தமிழ்பேசும் பொதுமக்களுக்கும் இக் கிளை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இத் திங்கள் 8-ம் நாள் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் கூடிய கொழும்புக்கிளையின் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களின் விபரம் வருமாறு:-

### தமிழுக்கு இடமளிக்கவும்

தமிழ் பேசும்மக்கள் மிகத் தொகையாக வாழும் வெள்ளவத்தையிலுள்ள இலங்கை வங்கியின் வெள்ளவத்தைக்கிளை தன் மாதக் கணக்கு அறிக்கையில் ஆங்கிலத்துடன் சிங்களத்தைப் புதிதாகச் சேர்த்தபொழுது தமிழுக்கும் உரிய இடத்தைக் கொடுக்காமல் தமிழைப் புறக்கணித்ததையிட்டு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கொழும்புக் கிளை கவலைகொள்ளுவதுடன் இதை நிவர்த்திசெய்யுமுகமாக அடுத்தமாத அறிக்கையில் தமிழையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று இலங்கை வங்கியின் பொது முகாமையாளரைக் கேட்டுக் கொள்கிறது

### தமிழில் எழுதவும்

இலங்கை வங்கி வெள்ளவத்தைக் கிளையில் கணக்கு வைத்திருக்கும் தமிழ்பேசும் பெருமக்கள் யாவரையும் வெள்ளவத்தைக்கிளை முகாமையாளருக்கு மாதக்கணக்கறிக்கையில் தமிழையும் உடனேசேர்க்குமாறுகேட்டு தமிழில் கடிதமெழுதி அனுப்புமாறு த. அ. க. வின் கொ. கிளை கேட்டுக்கொள்கிறது.

### தொண்டர்கள் தயார்

வங்கிகளில் தமிழ் ஊழியர்கள் தன்மானத்தோடு கடமையாற்றுதற்கும், தமிழ் மொழியும் உரிய இடம் பெறுவதற்கும் தமிழ்பேசும் மக்கள் இலகுவாக உடனே செய்யத்தக்க பணி தங்களுடைய காசோலைகள் எல்லாவற்றையும் தமிழில் எழுதுவதே என்பதை தமிழ்பேசும் பெருமக்களுக்குச் சுட்டிக் காட்டி வங்கிகளில் கணக்கு வைத்திருக்கும் தமிழ்பேசும் பெருமக்கள் எல்லோரையும் தமிழிலேயே எழுதுமாறும் வங்கிகளுடன் தமிழிலேயே கடிதத் தொடர்புகளைக் கொள்ளுமாறும் விரும்பிக் கேட்டுக்கொள்கிறது. காசோலைகளைத் தமிழில் எழுதுவதற்கு எதுவித உதவியும் தேவைப்படின் செயலாளர், இ. த. அ. க. கொழும்புக் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு உதவிசெய்யத் தொண்டர்கள் அனுப்பப்படுவார்கள்.

### தயக்கம் வேண்டாம்

வர்த்தக நிலையங்கள், அரசாங்க அலுவலகங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் முதலியனவெல்லாம் தமிழில் எழுதப்படும் காசோலைகளை ஏற்றுக்கொள்கின்றன. எனவே தயங்காமல் தமிழில் எழுதுமாறு தமிழ்பேசும் பொதுமக்களை இக்கிளைகேட்டுக்கொள்கிறது.

## அறுவடை

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

களா? அல்லது தூய்மையை, சுகாதாரத்தைத்தான் பார்க்கிறீர்களா?

அழகுள்ள ஒரு இளமைப் பெண் தனித்து வாழ முடியாதா? ஆனால், நான் இப்போது அழகும், இளமையும் பறிபோன அவலட்சணமுள்ள பெண். முன்பு என் பின்னே பல்லைக்காட்டிச்சுற்றித்திரிந்தவர்கள் இப்போது என்னைக் கண்டுவிட்டால் அருவருப்போடு ஒதுங்கிச் செல்கின்றனர். ஏளனமாகப் பேசுகின்றனர். இவற்றிற்கெல்லாம் காரணம் நான் ஒரு குஷ்டரோகி. அன்று அந்த தாசிப் பெண்ணைத் துரத்திய கூட்டத்தைப் பார்த்து இயேசுநாதர் கேட்டதுபோல இப்போது என்னை விரட்டுபவர்களைப் பார்த்துக் கேட்க யாருமில்லையே, நான் செய்த பாவத்துக்கு இந்தத் தண்டனை வேண்டும். ஆனால், இதற்கு யார் பொறுப்பாளி?

தன்னில் தானே பேசி, கதையையும் முடித்த அந்த உருவம் கடலினுள் சென்று மறைந்து கொண்டிருக்கிறது.

(யாவும் கற்பனை)

## இந்து வாலிபர் சங்க 7 வது ஆண்டு விழா

கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின் 7 வது ஆண்டு விழா இவ்வார இறுதியில் கொழும்பில் நடைபெறுகிறது. வெள்ளி, சனி ஆகிய இரு தினங்களில் மாலையில் வெள்ளவத்தை மாணிக்க விநாயகர் ஆலயத்தில் கூட்டுப்பிரார்த்தனையுடன் ஆரம்பமாகி, தொடர்ந்து சைவ மங்கையர் கழக மண்டபத்தில் நடைபெறுகிறது. பட்டிமன்றம், சமயச் சொற்பொழிவுகள், இசை நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

## அறிமுகப்படுத்துகிறோம் (24)



### நடிகர், எழுத்தாளர், இயக்குநர் திரு. வி. இராசலிங்கம்

எந்த விதமான பாத்திரத்தில் ஊற்றினாலும், அப்பாத்திரத்தின் அமைப்புக்கேற்ப தன் அமைப்பை மாற்றிக் கொள்ளும் சக்தி வாய்ந்த நீரைப் போன்றே ஒரு நடிகன் எந்தப் பாத்திரத்தையும் ஏற்று நடிக்க வல்லவனாக விருக்க வேண்டும், என்ற கருத்துக் கொண்டு நாடகக்கலை உலகில் பவனி வருபவர் திரு. வி. இராசலிங்கம்.

கதாநாயகன், வில்லன், கோமாளி ஆகிய எத்தகைய பாத்திரமானாலும் தம் கைவரிசையைக் காட்டக் கூடியவரான இவர் பெண் வேடம் புனைந்து நடித்தால் எள்ளளவும் எவரும் சந்தேகப்பட மாட்டார்கள். மன்னார் அரசாங்க திணைக்களம் ஒன்றில் எழுதுவினைஞராகப் பணிபுரியும் திரு. இராசலிங்கம், மன்னார் கலா நாடக மன்றத்தார் கடந்த வருடம் அரங்கேற்றிய 'ஒரே இரத்தம்' நாடகத்தை எழுதி கதாநாயகியாகவும் நடித்தார். கதாநாயகி வேடத்துடன் தோன்றும்இங்குள்ள படம் முன்னமேயே' சுதந்திர'னில் பிரசுரமானதாகும்.

பள்ளிக்கூட மாணவனாகத் தனது பிறப்பிடமான நெடுந்தீவில் பயிலும் காலத்திலேயே 'சிறுத்தொண்டன்', 'அக்த்தியர்', 'கண்ணகி', 'தளபதி நெடுமாறன்', 'படித்தவன்', 'துரோகியா?', 'வாழத் தெரியாதவன்', 'வணங்காமுடி', 'மந்திரி குமாரி' ஆகிய நாடகங்களில் திறம்பட நடித்துள்ளார். மட்டக்களப்புக் கச்சேரி நாடக மன்றத்தினர் தயாரித்த 'துரோகி' நாடகத்தில் பிரதானபாகமேற்று நடித்து பெரும்புகழீட்டியவர். நடமாடி குழுவினரின் 'வீழ்ச்சியி'ல் பறங்கித் தலைவனாகத் தோன்றி பலருடைய பாராட்டையும் பெற்றார்.



பருவப் பெண்ணாக......

நாடகம் எழுதுவார். கதை வசனம் பாடல்களையும் எழுதுவதோடன்றி நட்டுவாங்கமும் செய்யும் திறமை படைத்தவர். ஒப்பனையும் செய்வார்.

குறிப்பு!

கலைஞர்கள் வேடம் புனைந்து மேடையில் தோன்றும்போது எடுக்கப்பட்ட நல்ல படம் ஒன்றினை, மேலே உள்ள படத்தின் அளவுக்குக் கூடாமல் உயரம் 3", அகலம் 1½" புளாக் செய்து அனுப்பினால் பிரசுரிப்போம். அளவில் கூடிய புளாக்குகள் பிரசுரிக்க ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

—ஆ-ர்

## பாரதி விழா

கொழும்பு விவேகானந்த சபையினரால் 13-2-64 சனிக்கிழமை மாலை 6. மணிக்கு சபை மண்டபத்தில், பாரதி விழா நடைபெறுகிறது. இவ்விழாவுக்கு திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை தலைமை தாங்குகிறார்.

பாரதியின் கவிதைகள் தேசிய உணர்ச்சிக் கவிதைகளா அன்றி இனஉணர்ச்சிக் கவிதைகளா, என்ற பொருள் பற்றிய பட்டிமன்றம், இவ்விழாவின் சிறப்பு அம்சங்களில் ஒன்றாகும். இதில் திரு. ஏ. பி. செல்லையா, திரு. மணி, திரு. கம்பனை தாசன், திரு. செ. குமாரசாமி, திருமதி நாகலட்சுமி கருணாகரன், திரு. தி. கந்தரேஸ்வரன் ஆகியோர் பங்கு கொள்ளுகின்றனர். 'புதுமைக் கவிஞன் பாரதி' என்ற தலைப்பில் திரு. வை. கா. சிவப்பிரகாசம் எம். ஏ. விரிவுரை நிகழ்த்துகிறார்.

## நடந்தவை நடக்கவிருப்பவை

கலைப்பூஞ்சோலை,
த. பெ. இலக்கம்: 1183,
கொழும்பு-12

நடந்த கலை நிகழ்ச்சிகள், நடைபெறவிருக்கும் கலை நிகழ்ச்சிகள் சம்பந்தமாக செய்திகள் அனுப்புவோர் கீழ் காணப்படும் பகுதியை கடித உறையில் ஒட்டி அனுப்பவும்.

## குடியுரிமைச்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆக்கினார். இச் சட்டத்தின் கீழ் இயற்றப்படும் பிரமாணங்கள் மூலமாகக் குறிப்பிட்ட நோக்கங்களுக்கு மாத்திரம் வட, கிழக்கு மாகாணங்களில் நிர்வாகத்தைத் தமிழில் நடத்தலாமென வகுத்துக் கொண்டார். ஆனால் இன்று வரை இச்சட்டத்தின் கீழ் ஒரு பிரமாணம் தானும் ஆக்கப்படவில்லை. திரு. பண்டாரநாயக்கா தமது மனச்சாட்சியின் உந்துதலின்படி நடக்கத் துணிவற்றிருந்தாலும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பற்றித் தமது அறிவில் மிக உணர்ந்திருந்தார். தமிழ் பேசும் மக்களின் சம்மதத்துடனேயே அவர்களை ஆள வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டிருந்தார்.

இந்த அரசியல் பின்னணியில் 1960 மார்ச் மாதம் பொதுத் தேர்தல் வந்தது.

## என். எப்-என். கியூ.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சமசமாஜக் கட்சியினது தொழிற்சங்கங்களின் நிர்வாகிகளும், அச்சங்க உறுப்பினர்களில் பெரும்பாலோரும் பௌத்தர்களல்லர். அவர்கள் எந்தச் சமயத்தின் மீதும் நம்பிக்கையில்லாதவர்கள். எனவே பௌர்ணமி தினமாவது விடுமுறை தினமாக்கப்படுவதை அவர்கள் எதிர்ப்பார்களென்றும் பௌத்தர்கள் நம்புகின்றனர். மார்க்சியவாதி அமைச்சர்கள் மூவரும் பதவி ஏற்றதும் புனித தந்தத்தைத் தரிசிக்கச் செல்லாததும், மல்வத்தை மகாநாயக தேரோ [illegible] போகாததுமே இதற்குக் காரணமாகும்.

மக்கள் குரல்

## 'எனது மனைவிக்கு விசாவரி அவசியமா'?

இந்திய பாகிஸ்தானிய பதிவுச் சட்டப்படி 1954ல் இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்யப்பட்டேன். 1955 ஆகஸ்ட் மாதம் இந்தியா சென்று தாய் தந்தையற்ற என் தாயின் சகோதரர் மகளைத் திருமணம் செய்து டிசம்பர்மாதம் 10ம் திகதி இலங்கை வந்து சேர்ந்தேன். 1956ம் வருடத்தில் என் மனைவிக்குப் பிரஜாவுரிமை கோரி வெளிநாட்டிலாகாவுக்கு விண்ணப்பித்தபோது, மனைவிக்கு வயது போதாது என்று கூறி, 1961ம் ஆண்டு மே மாதத்திற்கு மேல் விண்ணப்பித்தால் பிரஜாவுரிமை வழங்குவதாக வாக்களித்தார்கள்.

இரு ஆண் குழந்தைகளும் ஒரு பெண்ணும் எங்களிருவருக்கும் பிறந்தன. இடையில் 1959ல் நாங்கள் ஆலய தரிசனங்களுக்காக இந்தியா சென்று ஒரு மாதம் தங்கித் திரும்பினோம்.

1961ம் வருடம் மே மாதம் வெளிநாட்டிலாகா அளித்த வாக்குப் பிரகாரம் பிரஜாவுரிமை கோரி விண்ணப்பித்தேன். எங்கள் திருமணத்துக்கு எதுவிதமான சாட்சியும் இல்லை என்று புதிய சாக்குக் கூறி விண்ணப்பத்தை நிராகரித்துவிட்டனர். எனது நண்பர்களுக்குத் திருமணத்துக்காக நான் தபால் மூலம் அனுப்பிய அழைப்பிதழ்கள், (அதே காலதேதிக்குறியுடன் கூடிய முத்திரை ஒட்டியவை) அனுப்பியும் கூட, அவை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இதற்கிடையில் என் மனைவியைக் கைது செய்து நாடு கடத்தவும் திட்டமிட்டுப் பொலிசார் முயன்றனர். பச்சிளம் பாலகர்களைத் தாயிடமிருந்து பிரிக்க மனமில்லாமலும் எனது மனைவியை அனாதரவற்றவளாக்கவும் மனம் இடங்கொடுக்கவில்லை.

மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாள மக்களின் துன்பங்களைத் துடைத்தெறியப் போவதாகக் கங்கணங்கட்டிக் கொண்டுள்ள சங்கம் ஒன்றில் முறையிட்டதன் பேரில் வழக்கறிஞர் ஒருவருக்குச் சில நூறு ரூபாய்கள் கொட்டியதோடல்லாமல், பொலிசாருக்குப் பயந்து பல முறை அவரிடம் காவடி எடுத்ததுதான் எஞ்சியது.

தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகத்தை அவருடைய இல்லத்தில் கண்டு எனது குறைகளை விபரித்தேன். எங்கள் திருமணத்தை நடாத்திய மதகுருவின் சான்றிதழ் பெற்றால் திருமணத்தை வெளிநாட்டு இலாகா ஏற்கும் என்று தந்தை கூறினார். அதன்படி சான்றிதழ் பெற்று அனுப்பியதில் எனது மனைவிக்குப் பிரஜாவுரிமை கொடுக்க முடியாது என்று மீண்டும் கூறி ஒரு வருட வாசகால உத்தரவு வழங்கினார்கள். இதற்குமேலும் தொடர்ந்து எனது மனைவி என்னுடன் இலங்கையில் தங்குவதானால் வருடா வருடம் ரூ 400 விசாவரி கட்டியாக வேண்டும் என்றும் கட்டளையிட்டு விட்டார்கள்.

இந்த வருடத்துக்குரிய விசாவரி 28-8-64ல் கட்டி என் மனைவிக்கு விசா வாங்கியுள்ளேன். இப்படியே எங்கள் குடும்பம் நிம்மதியிழந்து வாட வேண்டியதுதானா?

இந்த நாட்டில் பிறந்து இந்த நாட்டில் வாழ்ந்து இந்த நாட்டுக்காக உழைத்த நான், எனது இஷ்டப்படி ஒரு மனைவியை அடைந்து இன்பமாக வாழ உரிமை கிடைக்காதா?

மனித உரிமைகள் பற்றி சர்வதேச அரங்கில் பேசி, தென்னாபிரிக்க நாட்டின் இன வொதுக்கல் கொள்கையைக் கண்டிக்கும் திருமதி பண்டாரநாயக்கா தன் நாட்டின் சட்டங்களை அறியாரா? இத்தகைய கொடிய சட்டங்களில் சிக்கிய என் குடும்பத்தைப் போன்று இன்னும் எத்தனை எத்தனை குடும்பங்கள் தத்தளித்துத் தவிக்கின்றனவோ?

என் உயிருக்கு ஏதாவது நேர்ந்தால் என் மனைவி மக்களின் கதி என்ன? தான் பிறந்த இந்தியாவில் எதுவிதமான துணையுமற்ற என் மனைவியை என் கண்களுக்குப் பின் என்னென்ன கொடுமைகளுக்கு இவ்வரசாங்கம் உட்படுத்துமோ?

வெ. கருப்பையா
நாவலப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொடர் கதை

# அதிசயத்தீவில் கலிவர்

—மாஸ்டர் சிவலிங்கம்—

சுமார் இரண்டு அங்குல நீளமுடைய கூரிய அம்புகள் பல, கலிவரைத் தாக்கின. சற்றுத் தலையை அசைத்துப்பார்த்தார். என்ன ஆச்சரியம்...! அவருடைய கண்களையே அவரால் நம்பமுடியவில்லை. சுமார் ஆறு அங்குல உயரமுள்ள நூற்றுக்கணக்கான மனிதர்கள் அங்குமிங்கும் நடமாடிக்கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில்...அந்த அதிசயக் குள்ளர்களில் சிலர் கலிவரின் மார்பிலே நடமாடிக்கொண்டிருந்தனர். அந்த நேரத்தில்...!

கலிவர் சற்றுப் பலமாக இருமினார். அடுத்தநிமிடம்... ...கலிவர் மேல் நடமாடிக்கொண்டிருந்த குட்டி மனிதர்களெல்லாம் விவரிக்க முடியாத பயங்கரக் குரல் கிளப்பிக்கொண்டு பாய்ந்து ஓட ஆரம்பித்துவிட்டனர். கலிவரின் மார்பிலிருந்து கீழே குதித்ததன் காரணமாகச் சிலருடையகால்களில் பலமான அடி பட்டுவிட்டது. அவர்கள் நொண்டிக்கொண்டே ஓடினர். அவர்கள் கிளப்பிய வேதனைக் குரல் கேட்பதற்கு மிகவும் பரிதாபமாக விருந்தது.

சிறிது நேர இடைவெளிக்குப் பின்பு அரை அடி உயரமுள்ள நூற்றுக்கணக்கான ராணுவ வீரர்கள் அணிவகுத்து வந்து கலிவர்மீது தையல் ஊசி அளவிலான அம்புகளைத் தொடுத்தனர். கனமான உடை அணிந்திருந்ததன் காரணமாக அந்தச் சிறிய அம்புகள் கலிவரை அவ்வளவாகத் தாக்கவில்லை. ஒரு சில அம்புகள் மட்டும் முகத்தில் தைய்த்துச் சற்று வலியை ஏற்படுத்தின.

'மாலைவரை அசையாது கிடந்துவிட்டு, இருளில் எப்படியாவது தப்பி ஓடிவிடுவோம்' என்று மனதிலே எண்ணிக்கொண்டு பிணம் போல அசைவற்றுக் கிடந்தார் கலிவர். கலிவரின் நிலையை அவதானித்த குட்டி மனிதர்களும் தங்கள் தாக்குதலைத் திடீரென்றுநிறுத்தி விட்டனர்.

சிறிது நேரத்தில்...சுமார் நாற்பதுமனிதர்கள் சேர்ந்து கலிவரின் முகத்திற்குப் பக்கத்தில் ஆறு அங்குல உயரத்தில் ஒரு சிறிய மேடை அமைத்து, அதில் ஏறுவதற்கு ஒரு குட்டி ஏணியையும் பொருத்திவிட்டனர். உடனே தளபதி போன்று உடை அணிந்த ஒருகுள்ளன் அந்த மேடையில் ஏறி நின்று, அங்கு திரண்டிருந்த குள்ளர்களை நோக்கி சிறிது நேரம் ஏதோ பேசினன். அவன் பேசிய விசித்திர மொழி கலிவருக்கு விளங்கவேயில்லை.

அவன் பேசிய தோரணையிலிருந்து தனக்கு எதுவித ஆபத்தும் ஏற்படாதென்று கலிவர் நினைத்துக்கொண்டு நிம்மதியாகப் படுத்தார். அப்போது...அவருடைய வலது கை மட்டும் பிணைப்பிலிருந்து விடுவிக்கப்பட்டது. 'பசியும், தாகமும் தாங்க முடியாதிருக்கிறது' என்று கூறிவிட்டுத் தனது கையை வாய்க்கு நேரே பிடித்து சைகை மூலமும் தனது கருத்தை வெளிப்படுத்தினர். கலிவர் கூறியதையும், அவர் காண்பித்த சைகையையும் விபரீதமாகப்புரிந்துகொண்ட அந்தக் குட்டி மனிதர்கள் திடீரென்று மறுபடியும் தங்கள் தாக்குதலைத் தொடங்கிவிட்டனர்.

(தொடரும்)

மாணவர் சிறுகதை:

# தபாற்காரன்

நவாலியூர் த. பரமலிங்கம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அன்று திங்கட்கிழமை!

விடிந்தும் வெகு நேரமாகிவிட்டது. ஆனல்—என்றும் விடிந்து, பகலவன் கிளம்புமுன் எழுந்திடும் அழகன், இன்று—பகலவனின் வெயிலின் வேட்கை அவன் மீது வீழ்ந்தும், எழுந்திருப்பதாகத் தெரியவில்லை.

இதையுணர்ந்த—அழகனின் தாய், அவன் படுத்திருக்கும் அறைக்குச் சென்று—'டேய் தம்பி,எழுந்திருடா...பள்ளிக்கூடத்துக்கல்லவா, நேரமாகி விட்டுது...' என்றெழுப்புகிருள்.

அழகன்,ஏதோ இன்னும்—விடிந்ததை அறியாதவனுய் பாசாங்கு செய்துகொண்டு—'யாரது, தூங்கிறதிற்கு...விடமாட்டீங்களா?' என அலுத்துக் கொள்கிருன்.

அப்படிப் பலதையுங் கூறி, அவனை எழுப்புகிறதற்கு எடுத்த முயற்சி வீண் போகவே, படுக்கை அறையை விட்டு நகருகிருள், அழகனின் தாய்.அதைத் தெரிந்து கொண்ட அழகன், மீண்டும் போர்வையை எடுத்து நன்ருய்ப் போர்த்துக் கொண்டு, தூங்க ஆரம்பிக்கிருன்.

அதற்கிடையில்—வெளியில் எங்கோ போய்வந்த அழகனின் தந்தைக்கு, விஷயம் கிட்டி விடுகிறது. உள்ளத்தில் வேகமும், முகத்தில் சீற்றமுமாய் அழகனின் படுக்கையறைக்குள் நுழைகிருர்—'டேய்! அழகா எழுந்திரடா...!' என்ற கர்ஜனை வானைப் பிளக்கிறது.

தந்தையின்—உரத்த குரல் கணலெனப் பாயவே, அழகனின் நெஞ்சம் படபடத்தது. ஒருமாதிரிச் சமாளித்துக் கொண்டு—'வயித்துக்கை, என்னவோ மாதிரியிருக்கப்பா வயித்துக்கை குத்துது...' என்று முனங்குகிருன்.

'ஓ!கோ! அப்படியா......? ஒரு நாளுமில்லாத 'வயித் துக் குத்து' இன்றைக்கா வந்திருக்கு!—அதெல்லாம் [illegible] மேல்பட்டு நீ பள்ளிக்கூடத்துக்கே, போக வேண்டாம்! சந்தோஷந்தானே...?' என வினவியவருக்கு, பதில்வரும் வரையில் காத்திருக்க முடியவில்லை! அறையை விட்டு வெளியேறி விடுகிருர்.

அழகனும், பாடசாலைக்குச் செல்லாது காலங்களைக் கழித்துக் கொண்டிருந்தான்!

[அடுத்த இதழில் முடியும்]

அறிவுரை : 1

# அன்பு

அன்பு என்பது ஒருவருக்கு இன்னெருவர் மீது ஏற்படும் பாச உணர்ச்சியாகும்.

காதல், பக்தி, பாசம், நட்பு எல்லாமே அன்பின் மறு உருவங்கள் தாம்.

அன்பு என்பதைப் பற்றிப் பலரும் பலவிதமாகக் கருதுகிருர்கள்.

அன்பு என்பதுஇப்படித் தான் இருக்க வேண்டும் என்ற நியதி கிடையாது.

உள்ளத்தின் ஆழத்தினின்று தோன்றும் ஓர் உணர்ச்சியை நாம் எல்லை போட்டுச் சிறைப்படுத்தி விட முடியாது.

அதே நேரத்தில், அன்பு என்ற பெயரில் மனிதன் எத்தனையோ தவறுகளை இழைத்து விடுகிருன்.

இன்னுமொரு முக்கியமான விஷயம்.

மனிதன் முதலில் தன் மீது அன்பு செலுத்தப் பழக வேண்டும்.

தன் மீது பற்றில்லாதவன், தன்னைப் பற்றிய நம்பிக்கை இல்லாதவன், எப்படி மற்றவர்மீது உண்மையான, ஆக்கமான அன்பு செலுத்த முடியும்?

ஆகவே, முதலில் உங்களை அறியுங்கள், அறிந்து உங்கள் மீதே அன்பு செலுத்த ஆரம்பியுங்கள்.

அதன் பின், தானுகவே மற்றவர்கள் மீதும் உங்களுக்கு அன்பு பிறக்கும்.

உங்கள் கடமையைச் செய்வது—உங்களுக்கு உங்கள் மீதும், உங்களை நெருங்கிச் சார்ந்தவர் மீதும் உள்ள அன்பு.

பிறருக்கு உதவி புரிவது—உங்கள் கடமையைச் செய்வதன் மூலம் உங்கள் மீது உங்களுக்கு ஏற்பட்ட அன்பினின்றும் பிறந்த அன்பு

ஆகவே, முதலில் உங்களை நேசியுங்கள்!

—வளர்மதி மாமா

அன்புள்ள மருமக்களே!

அ தொடக்கம் ஃ வரையான எழுத்துக்களை முதலாகக்கொண்ட சொற்களின் மூலம் சில அறிவுரைகளை உங்களுக்கு எழுதவிருந்தேனல்லவா? பின், போதிய மருமக்கள் அவற்றை எழுதுமாறு என்னைத் தூண்டாத படியினல், எழுதாமல் விடுவது என்று 30-8-64 இதழில் கூறியிருந்தேனல்லவா? அதைத் தொடர்ந்து, மருமக்கள் பலரும் எனது தீர்மானத்தை மாற்றுமாறும், 'உடனடியாக மாமா கட்டுரைகளை எழுதவேண்டும், இல்லாவிட்டால்......' என்று அன்புடன் என்னைக் கட்டளையிட்டும் எழுதியுள்ளார்கள். அவர்கள் யாவர்க்கும் எனது நன்றி.

இது உங்கள் பக்கம். ஆகவேதான் உங்கள் அனுமதி பெற்று, உங்களுக்கு நன்மைபயக்குமென நான் நம்பும் சில அறிவுரைக் கட்டுரைகளை எழுத ஆரம்பிக்கிறேன் ...இந்த இதழிலிருந்து.

கட்டுரைகள் வெளிவருங்காலத்தில், அவ்வப்போது மருமக்கள் தமது விமர்சனத்தையும் எழுதி அனுப்ப வேண்டும்.

வணக்கம்.

வளர்மதி மாமா

# செந்தமிழ்ச் சிற்பி

கல்முனை செல்வராசா



செந்தமிழ்ச் சிற்பி என்னும் போதினிலே—ஒரு
    தீரம் பிறக்குது நெஞ்சினிலே—எங்கள்
பைந்தமிழ் பாவலன் பாட்டினிலே—பெரும்
    வீரம் பிறக்குது தமிழ் நாட்டினிலே!

சுதந்திரம் பற்றிய சொற்றெடர்கள்—நல்ல
    சுவையூட்டும் அமுதான தமிழ் மணிகள்—எங்கள்
செந்தமிழ்ச் சிற்பியின் கவிதையிலே—இன்று
    தேனுக இனித்துப் பாயுதடா!

சிலப்பதி காரத்தின் சிறப்பினையும்—எங்கள்
    திருவள்ளுவர் தெள் அமுதினையும்—இந்த
ஞாலம் அறிந்திட வேண்டுமென்றே—தினம்
    பாலர்களை படிக்க வைப்பான்!

சாதிகள் இல்லை தமிழர்களில்—இது
    வேதியர் விதித்த விண்வில்லக்கென்று—அவன்
ஓதியே உள்ளம் குமுறுகின்ருன்—தமிழ்
    வாழ வழியளித்த பாரதியடா!

வளர்மதிபோல் வளர்ந்திடவே—நாம்
    வண்ணத்தமிழ் கற்றிடுவோம்—என்று
அமிழ்தான அவன் கவிதைதனில்—நல்ல
    அலங்காரமாய் கூறுகின்ருன்!

# புதுமைகள் பாரீர் பாரினிலே - (17)

—அன்ரனி பெர்னண்டோ, கிரிலப்பனை—

## எமனுக்கு விடுதலை?

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவதில்லை இந்த மாநிலத்தில். எனவே, மாண்டவரின் பிணத்தைச் சுடுகாட்டில் கொண்டுபோய்ப் புதைத்து விடுகிறோம். அல்லது தகனம் செய்கிறோம். அழுது பயனில்லை என்பதை அறிந்தும் அழுதழுதே அந்திமச் சடங்கைச் செய்து முடிக்கிறோம். பரம்பரை பரம்பரையாக மனிதர்களிடம் இருந்துவரும் வழக்கம் இது. மாண்டவர் யாராக இருந்தாலும் அவருடைய வாழ்க்கை ஏடு அத்தோடு முடிவடைகிறது.

இன்னும் பத்து ஆண்டுகளில் இந்தப் பரம்பரைப் பழக்கம் ஒரு புதிய திருப்பத்தை அடையப்போகிறது. மாண்டவரைப் புதைப்பதற்குப் பதில் குளிர் சாதனப் பெட்டிகளில் வைத்துப் பாதுகாப்பதற்கு எல்லோரும் ஆரம்பித்துவிடுவார்கள். இப்பொழுது விஞ்ஞானிகள் செய்துவரும் ஆராய்ச்சி வெற்றியளித்தால் செத்த பிணத்தை இம்மியளவும் அழுகாதவண்ணம் குளிர் சாதனம் மூலம் நூறு வருடங்கள் வேண்டுமானலும் பாதுகாப்பாக வைக்க முடியும். அதன்பின் அந்தப் பிணத்திற்கு உயிர்கொடுத்து வாழச்செய்யவும்முடியும். இதை இன்னும் பத்து வருடங்களுள் செய்ய முடியுமென்று அமெரிக்க ஆராய்ச்சியாளர் டாக்டர் ஙி. டபிள்யூ. எட்டிங்கன் நம்புகிருர்.

ஒருவர் நோய்வாய்ப்படுகிருர். அந்த நோய்க்கு இன்னும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே, பாவம் அவர் இறந்துவிடுகிருர். இவ்வாறு இறந்துபட்டவரின் பிணத்தை மேற்சொன்னவாறு பாதுகாப்பாக வைத்திருந்தால், பல வருடங்கள் சென்றேனும் அவருக்கிருந்த நோயைப் போக்க மருந்து கண்டுபிடிக்கப்பட்டால், அதை உபயோகித்து அவரை உயிர்ப்பிக்க முடியும். விறைத்துப்போயிருக்கும் உடலை எடுத்து அளவாகச் சூடு உண்டாக்கியபின்பே மருந்து உபயோகிக்கப்படுகிறது. நோய் குணமாகி மாண்டவரும் மீண்டு விடுவார்.

இந்த வகையில் நோக்கினல் வருங்காலத்தில் நாம் மரணத்தைக்கண்டு அஞ்சவேண்டிய அவசியம் இல்லையென்றே தோன்றுகிறது. மரணம் என்பதை நீண்டநேர நித்திரையென்றே எல்லோரும் கருத ஆரம்பிப்பர். ஒரு வகையில் யமனுக்கும் விடுதலையே, இல்லையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## ‘தமிழ் வளர்ச்சிக்காகவே தமிழ் விழாக்கள்

## தனிப்பட்டவர்களின் வளர்ச்சிக்காக அல்ல’

—மூதூர் முதல்வர்

‘ஜுன்வித் தமிழ் மொழியானது அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டு வரும் இவ்வேளையில் மக்கள் மத்தியில் தமிழு உணர்ச்சியை ஏற்படுத்த இத்தகைய விழாக்கள் அவசியமாகும். இத்தகைய விழாக்கள் இழந்துவரும் செல்வாக்கை திரும்பவும் பெற முயற்சிப்பவர்களுக்காகவன்றி அரசியல் கலப்பற்ற முறையில் தமிழின் வளர்ச்சிக்காகவே நடைபெறுவனவாக அமைய வேண்டும்.’

இவ்வாறு மூதூரில் நடைபெற்ற முத்தமிழ் விழாவை ஆரம்பித்து வைத்து, மூதூர் முதல்வர் ஜனுப் எம். ஈ. எச். முகம்மதலி அவர்கள் பேசுகையில், குறிப்பிட்டார். மூதூர் பட்டின சபைத் தலைவர் ஜனுப் எம். எச். முகம்மது கொடியையேற்றிவைக்க ஆகஸ்ட் மாதம் 28-ம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி மூன்று தினங்கள் நடைபெற்ற இவ்விழாவில், ஜனுப் முகம்மதலி அவர்கள் பேசுகையில், மேலுங்குறிப்பிட்டதாவது: ‘முத்து விளையும் மூதூர்த் தொகுதியில் இத்தகைய விழாவொன்று நடப்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. இத்தகைய விழாக்கள் பரந்த மனப்பான்மையின் அடிப்படையில் நடைபெறுவது அவசியம். இத்தகையவிழாக்களில் அரசியல் பிரச்சினைகளுக்குஇடமளியாமல்இருப்பதும் அவசியமாகும். ஏனெனில் தமிழ்மொழி எல்லோருக்கும் சொந்தமானதாகும். இத்தகைய விழாக்கள் ஒரு குறிப்பிட்ட சிலருக்குப் புகழ்தேடிக் கொடுப்பதற்காக மட்டும் நடைபெறக்கூடாது.’

மூதூர் முதல்வர் தொடர்ந்து பேசுகையில், விழா அழைப்பிதழ் வெளிவந்த விதத்தையிட்டு அதிருப்தியடைந்த மக்கள் பலர் தன்னிடம் முறையிட்டதாகவும் அதற்குத் திருப்தியானபதில் கொடுத்து அவர்களைத்தான் சமாதானப்படுத்தியதாகவும் கூறி, இப்புனிதவிழா சிறப்பாக நடைபெறப் பெருந் தன்மையுடனும் பரந்தநோக்குடனும்நடந்து கொள்ளும்படி மக்களை வேண்டிக்கொண்டார்.

புனித அந்தோனியார் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகளில் திரு. எஸ். பொன்னுத்துரை, கலாநிதி ஆ. சதாசிவம், திரு. எஸ். தனஞ்செயராசசிங்கம், திரு. எம். சோமஸ், ஜனுப் எம். ஏ. ரஹ்மான், பண்டிதர் செ. துரைசிங்கம், ஜனுப் எம். ஐ. எம். மகுர் ஆகியோர் கலந்துகொண்டனர். விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

### குரும்பசிட்டி நலன்புரி சபை

குரும்பசிட்டி நலன்புரி சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில்கொழும்புவிவேகானந்த சபை மண்டபத்தில் சபைத் தலைவர் திரு. க. சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமையில்நடைபெற்றது. கூட்டத்தின் இறுதியில் பின்வருவோர் சபையின் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. க. சுந்தரமூர்த்தி, உபதலைவர்: திரு. அ. கயிலாயபிள்ளை, செயலாளர்: திரு. பொ. சிவசுப்பிரமணியம், துணைச்செயலாளர்: திரு. அ. சிவதாசன், பொருளாளர்: திரு. வ. செல்லமுத்து, செயற்குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள்: சி. இராசரத்தினம், ந. சக்திதாசன், க. பத்மநாதன், தா. கனகசுந்தரம்.

கணக்குப்பரிசோதகர்கள்: திரு. த. துரைரத்தினம், திரு. இ. சிவானந்தன்.

நடுத்தீர்ப்புச் சபையினர்: திருவாளர்கள்: பூ. சு. நடராசா, மா. நல்லதம்பி, தா. இளையதம்பி.

### த.பே.அ.பொ.ஊ. சங்க ஆண்டுவிழா

செப்ரெம்பர் மாதம் 25ம் திகதி திருமலையில் நடைபெறவிருக்கும் தமிழ் பேசும் அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் முதலாண்டுப் பொதுக் கூட்டத்தையும், ஆண்டு விழாவையும் விரிவான முறையில் நடாத்துவதற்கு மத்திய செயற்குழு உறுப்பினர்களைக் கொண்ட செயற் குழுக் கூட்டம் சங்கக் காரியாலயத்தில் நடைபெற்றது.

தமிழ் பேசும் அரசாங்க பொது ஊழியர் சங்கத் தலைவர் திரு. க. சிங்கராயா, பொதுச் செயலாளர் திரு. இ. நவரெத்தினம், துணைச் செயலாளர் திரு. யோ. அ. அருளானந்தம், பொருளாளர் திரு. இ. அழகரெத்தினம் ஆகிய முக்கியஸ்தர்கள் கலந்துகொண்ட இச் செயற்குழுக் கூட்டத்தில் ஆண்டுப் பொதுக் கூட்டம், விழா இவற்றுக்கான ஆக்கபூர்வமான ஏற்பாடுகளை ஆராய்ந்து, சபையில் ஒப்புக் கொள்ளப்பட்டன. விழா சம்பந்தமான சில முக்கிய விடயங்களைக் கவனிக்கும் பொறுப்புக்கள் விழாத் தலைவர் திரு. பொ. நாகராசாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் தீர்மானங்களில் முக்கியமானதாகமேலதிகாரிகளால் சில்லறை ஊழியர்களுக்கு இழைக்கப்படும் தவறுகளையிட்டு நீதி கோருவதற்கு மேலதிகாரிகளால் இடைஞ்சல்கள் ஏற்படுவதையிட்டும் இலாகாக்களில் நடைபெறும் ஊழல்களை மிகவும் தெளிவான முறையில் நிதி மந்திரிக்கு அனுப்பி வைப்பதற்கான விபரங்களைச் சேகரிக்கும் பொருட்டு மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள உறுப்பினர்களிடமாக விபரங்கள் கோருவதெறுவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### தலைவர்கள் நினைவு தினம்

தமிழ் பேசும் மக்களின் மதிப்பிற்குரிய மறைந்த மாபெரும் தலைவர்களை நினைவுகூரும் முகமாக இத் திங்கள் 16-ம் திகதி புதன்கிழமை பிற்பகல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி கொழும்புக்கிளையின் ஆதரவில் நடைபெறும் இக் கூட்டத்தில் பட்டிருப்புப் பிரதிநிதி திரு. சி. மூ. இராசமாணிக்கம், ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வ. நவரத்தினம், தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளரும் வட்டுக் கோட்டைப் பிரதிநிதியுமாகிய திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் உட்பட மேலும் பல பிரமுகர்கள் உரை நிகழ்த்துவார்கள்.

### அமரர் வன்னியசிங்கம் நினைவு தினம்

அமரர் வன்னியசிங்கம் அவர்களின் 5 வது நினைவு தினத்தை முன்னிட்டு இத் திங்கள் 17ம் திகதி பிற்பகல் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் மேலை வீதியில் தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் தலைமையில் ஓர் மாபெரும் நினைவு தினக் கூட்டம் நடைபெறும் என்று திரு. தி. கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார். உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், வடகிழக்கு மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்களில் அனேகர் உரை நிகழ்த்துவார் என்றும் தெரிகிறது.

### திருக்கேதீச்சர கௌரி அம்பாள் வித்தியாலய பரிசளிப்பு விழா

திருக்கேதீச்சரம் கௌரி அம்பாள் வித்தியாலயப் பரிசளிப்பு விழா 22-7-64 புதன்கிழமை பி. ப. 7 மணிக்கு திரு. ஞானசம்பந்தர் மடத்தில் சேர். கந்தையா வைத்தியநாதன் தலைமையில் நடைபெற்றது. தலைமை உரையில், மாணவர்கள் கிரமமாகப் பாடசாலைக்குச் செல்ல வேண்டும் எனவும், இதனைப்பெற்றோர் கவனிக்க வேண்டும் எனவும் தலைவர் கூறினார். அன்றியும் வருங்கால மாணவர்கள் உத்தியோகத்தை நோக்காகக் கருதாது அறிவு விருத்தியும் ஆத்மீக விருத்தியையுமே நோக்காகக் கொள்ள வேண்டும் எனவும் கூறினார்.

அடுத்து பாடசாலை பதில் தலைமை ஆசிரியரால் பாடசாலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

வித்தியாலயத்தில் சிறந்த மாணவிகட்கான பரிசுகளைப் பின் வருவோர் பெற்றுக் கொண்டனர்: செல்வர்கள் ம. ஆறுமுகம், அ. துரைராசா; செல்விகள் நா. நாகேஸ்வரி, க. ஐஷா றவுப், நா. குகனேஸ்வரி, ச. இராசேஸ்வரி.

திருமதி வைத்தியநாதன் பரிசில்களை வழங்கினர்.

### இறக்கக்கண்டி [illegible]

இறக்கக்கண்டி முஸ்லிம் வித்தியாலயத்தின் இல்லங்களுக்கான விளையாட்டுப் போட்டி சென்ற 25-7-64ல் இறக்கக்கண்டி பாடசாலை மைதானத்தில் திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். எம். மாணிக்கராசா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

போட்டியில் 37 விளையாட்டுக்கள் இடம் பெற்றன. நீலம், சிவப்பு, பச்சை ஆகிய இல்லங்கள் பங்கெடுத்தன. விநோத உடைப் போட்டியும் இல்ல அலங்காரமும் பொது மக்களைப் பெரிதும் கவர்ந்தன.

போட்டி முடிவில் சிவப்பு இல்லம் 161 புள்ளிகளைப் பெற்று ஏ. எஸ். எம். ஜெகநாதனின் வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது. 132 புள்ளிகளைப் பெற்றுப் பச்சை இல்லம் இரண்டாவதாக வந்தது. 90 புள்ளிகளைப் பெற்ற நீல இல்லம் மூன்றாவதாக வந்தது. அணி நடையிலும் சிவப்பு இல்லம் முதலாவது இடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை வித்தியாதிகாரி திரு. க. சங்கரலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சியின் இறுதியில் திருமதி ஜேசுதாசன் அவர்கள் பரிசுகளை வழங்கினார்கள்.

### சுன்னாகத்தில் தமிழ் விழா

சுன்னாகத்தில் ஒரு தமிழ் விழாவைத் திறம்படக் கொண்டாடுவதென 28-8-64ல் கூட்டப்பட்ட ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

விழாவைக் கொண்டாடுவதற்குரிய ஆயத்தங்களைச் செய்வதற்கு தெரிவு செய்யப்பட்ட செயற்குழுவின் தலைவராக திரு. க. பொன்னம்பலம் அவர்களும், செயலாளராக ஆசிரியர் திரு. இ. சிவானந்தம் அவர்களும், உப செயலாளராக திரு. க. செல்லத்துரை அவர்களும், பொருளாளராக திரு. ம. சி. சதாசிவம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். திரு. ஆ. மார்க்கண்டு எம். ஏ., திரு. ஆ. தம்பிப்பிள்ளை, திரு. ரி. வல்லிபுரம், திரு. இ. வல்லிபுரம், திரு. ஆ. நடராசா முதலிய 18 பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. விழாவை ஒக்டோபர் 3-ம், 4ம்-, 5-ம் திகதிகளில் கொண்டாடுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

### இ. கி. ச. தமிழ்ப் பெண்கள் விளையாட்டுப் போட்டி

கல்லடி - உப்போடை, இ. கி. ச. பெண்கள் பாடசாலையின் இல்லங்களுக்கான வருடாந்த விளையாட்டுப் போட்டி 31-7-64. மாலை நடந்தேறியது. போட்டி நிகழ்ச்சிகளுக்கு உதவி வித்தியாதிபதி திரு. முணசிங்க அவர்கள் தலைமை தாங்கினர். விளையாட்டு நிகழ்ச்சிகளில் 1ம் இடத்தை “பிரபா” இல்லமும், 2 ம் இடத்தை “நிவேதிதா” இல்லமும் பெற்றன.

இல்ல அலங்கரிப்புப் போட்டிக் குரிய முதலாம் பரிசு “நிவேதிதா” இல்லத்துக்கும் 2 ம், 3 ம் பரிசுகள் முறையே ‘பிரபா’ ‘சாரதா’ ஆகிய இல்லங்களுக்கும் கிடைத்தன.

பரிசு பெற்றோருக்கு முன்னை நாள் இராமகிருஷ்ண சங்க முகாமையாளர் சுவாமி நடராஜானந்தஜி பரிசுகளையும், வெற்றிக் கிண்ணங்களையும் வழங்கினர். முடிவில் பாடசாலைத் தலைவி செல்வி. க. அருணாசலம் நன்றி கூறினர்.

### உலகத் தமிழ் மன்றம்

உலகத் தமிழ் மன்றச் செயற் குழுக் கூட்டம் அண்மையில் கோலாலம்பூரில் கூடியது. மன்றத்தின் எதிர்காலத் திட்டங்கள் பற்றி ஆலோசிக்கப்பட்டது. தமிழகத்தைச் சேர்ந்த சர்வோதயத் தலைவர் டாக்டர் மு. அறம் அவர்கள் ஜப்பானிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பும் வழியில் மலேசியாவுக்கு வருவதால் அவருக்கு ஓர் வரவேற்பு அளிப்பதென்று தீர்மானிக்கப்படது.

பர்மாத் தமிழர்களின் அல்லநிலை குறித்து உலகத் தமிழ் மன்றம் ஆழ்ந்தகவலை கொள்கிறது. அவர்களுக்குப் புது வாழ்வு அளிக்க, இந்திய அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளை வரவேற்பதுடன் இன்னும் உறுதியோடு அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க இந்திய அரசு ஆவன செய்ய வேண்டுமென்றும் உலகத் தமிழ் மன்றம் கேட்டுக் கொள்கிறது. பர்மா அரசாங்கமும் தமிழர்கள் அந்நாட்டில் நெடுங்காலமாக அரும்பாடுபட்டு உழைத்திருப்பதை நன்றியுணர்வோடு நினைத்து தமிழ்ச் சமுதாயத்துக்கு நியாயம் வழங்க வேண்டுமென்று பர்மா அரசை உலகத் தமிழ் மன்றம் கேட்டுக் கொள்கிறது.

உலகெங்குமுள்ள தமிழ் வர்த்தக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளில் நம் தாய் மொழியாம் தமிழ் மொழிக்குச் சிறப்பான இடமளிக்கும்படி அந்நிறுவனங்களின் உரிமையாளர்களை உலகத் தமிழ் மன்றம் கேட்கிறது.

உலகத் தமிழ் மன்றம் விரைவில் வெளியிடவிருக்கும் ‘தமிழ் உலகம்’ என்னும் ஏட்டிற்கு உலகத் தமிழ் மன்றத் தலைவர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்களைப் பொறுப்பாசிரியராக இருந்து பணியாற்ற வேண்டுமென்றும், அந்த ஏட்டைத் தமிழகத்தில் வெளியிடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பல நாடுகளிலும் உலகத் தமிழ் மன்றக் கிளை அமைப்பது பற்றி மன்றத் தலைவர் மேற்கொண்டுள்ள முயற்சிகள் பற்றிய அறிக்கையும் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

### தமிழரசு வாலிப முன்னணி கலைத் திட்டம்

தமிழ் பேசும் மக்களுக்கு கலையின் மூலம் விடுதலை வேட்கையை உண்டாக்குவதற்கு, தமிழரசு வாலிப முன்னணியினர், வடகிழக்கு மாகாணங்களில் சிறந்த வரலாற்று நாடகங்களையும், சமூக சீர்திருத்த நாடகங்களையும், அரங்கேற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளனர். இதற்கு சிறந்த கதையமைப்புக்களைத் தமிழ் எழுத்தாளர்களிடமிருந்து வாலிப முன்னணி எதிர்பார்க்கின்றது.

எழுத விரும்புபவர்கள் 15-9-64ற்கு முன் செயலாளர், தமிழரசு வாலிப முன்னணி, 25, 2-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம், என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். முதல் இடம் பெறும் கதைகளுக்குத், தங்க வெள்ளிப் பதக்கங்கள் பரிசு வழங்கப்படும்.

**விதிகள்**

எழுதி அனுப்பப்படும் கதைகள், (அ) ஈழத் தமிழர் வரலாற்றைக் கொண்டதாக அமைய வேண்டும். (ஆ) தமிழர் கலாச்சாரம், இலக்கியம், வீரம் இவற்றை அடிப்படையாகக் கொண்டு அமையவேண்டும். (இ) சுதந்திர உணர்வூட்டக் கூடியதாக அமைய வேண்டும். (ஈ) கிராமிய வாழ்க்கை சித்தரிக்கப்பட்டுள்ளதாக அமைய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகத்தான 7வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!

இராமனும் இலக்குமணனும் ஒரே தாயின் பிள்ளைகளல்லர்.
ஆனால் அவர்களின் சகோதர பாசம்......!
பாசத்தின் தத்துவத்தை விளக்கும் உயர்ந்த திரை ஓவியமாக மிளிர்கிறது—

சிவாஜி கணேசன் அளிக்கும்

# படித்தால் மட்டும் போதுமா



நடிகர்கள்:
சிவாஜி கணேசன், சாவித்திரி, எம். ஆர். ராதா, பாலாஜி,
சகஸ்ரநாமம், ரங்கராவ், ராஜசுலோசனா, மனோரமா
பாடல்கள் : கண்ணதாசன்—இசை : விசுவநாதன்-ராமமூர்த்தி—டைரக்ஷன் : பீம்சிங்

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்)
மற்றும் 8 திரைகளில்!

கெபிட்டல் (கொட்டாஞ்சேனை)
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!



பினாராய்—ஆஷா பரேக்
பிரதீப் குமார்—பாரத் பூஷன்
ஆகா—ஹெலன் — ரெஹ்மான்
நடிக்கும்

ஜெமினியின்

# கங்கத்

இசையமைப்பு : ரவி

செப்டம்பர் 24ம் திகதி முதல்!
செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)
மற்றும் 7 திரைகளில்!

ஜெமினி கணேசன்,
சரோஜாதேவி, தங்கவேலு,
அசோகன்
தோன்றும்



# வாழ்க்கை வாழ்வதற்கே

பாடல்கள் : கண்ணதாசன் இசையமைப்பு : விஸ்வநாதன்-ராமமூர்த்தி

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
செல்லமஹால் மகத்தான 5வது வாரம்!
அசோகன்—சந்திரகாந்தா—கண்ணாம்பா—பாலையா—நாகேஷ்—மனோரமா தோன்றும்

# இது சத்தியம்

பாராட்டப்படும் சித்திரம்
புகழப்படும் சித்திரம்
போற்றப்படும் சித்திரம்
பேசப்படும் சித்திரம்
வெள்ளி விழாச் சித்திரம்

8வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜிதா (ஹட்டன்)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)

முத்துராமன்—காஞ்சனா—ரவிச்சந்தர்—ராஜஸ்ரீ
நாகேஷ்—பாலையா—குமாரி சரஸ்வதி—ராகவன்
மற்றும் பலர்



சித்ராலயா அளிக்கும்...!
ஸ்ரீதரின்

# காதலிக்க நேரமில்லை

(ஈஸ்ட்மென் கலர்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1964-ம் வருடம் செப்டெம்பர் மாதம் 13-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.